
கல்கி
ALKI 13-6-82 ரூ.1.20


அர்விந்த் வழங்கும் அற்புத நெசவுநய பருத்திகள்
டெக்ஸ்டைல்களிலே
ஐம்பது ஆண்டின்
அதி உன்னதம்.



செய்தி சொல்கிறீரா? திருடனைத் துரத்துகிறீரா?

சென்னை டெலிவிஷன் நிலையத்தினருக்குபாலமுரளி கிருஷ்ணா ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 'செய்திகள்' என்றுகாட்டப் படும்போது, அந்த நிகழ்ச்சிக்காக ஒலிபரப் பப்படும் இசை (Signature Tune) மாற்றப் படவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். இதுபற்றி பாலமுரளி கிருஷ்ணாவை நேரில் சந்தித்துக் கேட்டபோது:

''அந்த இசை செய்திகள் என்னும் நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக இல்லை. அதைக் கேட்டால் ஒரு திருடனை யாரோ துரத்திக் கொண்டு ஓடுவது போலவும், முடிவில் திருடன் பிடிபடுவது போலவும் எண்ணம் வருகிறது. ஏதோ நாடகம் ஆரம்பிக்கப் போகிறது. அதற்குத்தான் இந்த இசை வருகிறது என்று நினைத்து உள்ளே போய் டி.வி.யைப் பார்த்தபோது செய்திகள் என்று தலைப்புக் காட்டப் பட்டுக் கொண்டிருந்தது. பொருத்தமில்லாததாக இருந்தது.''

''மூன்று வருடமாக இதே இசையைத்தானே, ஆங்கிலம், தமிழ் செய்திகளின்போதுபோடுகிறார்கள்! இத்தனை நாளாகக் கவனிக்கவில்லையா?''

''நான் அவ்வளவாக ஊரில் இருப்பது கிடையாது. டி.வி.யும் ரெகுலராகப் பார்ப்பதில்லை. எனவே இதை முன்னமே கவனிக்கவில்லை'' என்றார்.

டெலிவிஷன் நிலையத்தாரும் பாலமுரளியின் புகாருக்கு மதிப்புத் தந்து மாற்றலாம் என்று இருக்கிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட இசையை(செய்திகளுக்காக) டி.வி. நிலையத்துக்கு அமைத்துக் கொடுத்தவர் அபஸ்வரம் ராம்ஜி.

ராம்ஜியிடம் கேட்டபோது:

''நான் மொத்தம் ஆறு டியூன்கள் கம்போஸ் செய்து காட்டினேன். அப்போதிருந்த டி.வி. நிலைய டைரக்டர் இந்த ட்யூனை அப்ரூவ் செய்தார். முதலில் இந்த இசையை ஒலிபரப்பும்போது கூடவே சில காட்சிகளையும் இணைத்து (டி.வி. டவர், டைப் அடிப்பது போல், செய்திகளை ஒருவர் எழுதுவது போல்) காட்டுவதாக இருந்தார்கள். அப்போது அதை மனத்தில் வைத்துக் கொண்டு இந்தக் குறிப்பிட்ட ட்யூனை அமைத்துக் கொடுத்தேன். கடைசியில் வெறும் 'செய்திகள்' என்பதை மட்டும் காட்டி இந்த டியூனைப் போடுகிறார்கள். ஆனால் இந்த ட்யூன் மிகவும் பாபுலராகி விட்டது. என் மேடை நிகழ்ச்சிகளில் சரியாக எட்டு மணிக்கு இதை வாசித்து வருகிறேன். நிற்க—

''ஒரு டி.வி.நேயர் என்ற முறையில் பால முரளி அவர்கள் தம் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். என்னுடைய ஆறு டியூன்களில் நல்லவன், திருடன், ஸாது என்று இருந்த வெரைட்டியில் டி.வி. நிலையத்தாருக்கு திருடனைத் துரத்துகிற இசை பிடித்திருக்கிறது. எனவே அதைப் போடுகிறார்கள். பாலமுரளிக்கு அது பிடிக்கவில்லை. எனவே அவர் கடிதம் எழுதியிருக்கிறார். இந்த இசையை டி.வி. நிலையத்தார் மாற்றினாலோ அல்லது இதற்கு வேறு யாராவது (?!!) இசை அமைத்தாலோ எனக்கு வருத்தம் கிடையாது.''


பேட்டி: கோபு ராமஸ்வாமி

படம்: ஈ.வெ.ரா. மோகன்

நீங்கள் கேட்டவை

தராசு

✖ ஆர். அரிகோபி, குடியாத்தம்
? பிளாக்கில் டிக்கெட் வாங்கி சினிமா சென்ற அனுபவம் உண்டா?
! உண்டு. ஒரே ஒரு தடவை ரூ. 2.50 டிக்கெட்டை ரூ. 5க்கு வாங்கினேன். உள்ளே விட மறுத்து விட்டார்கள். பிறகு தான் புரிந்தது. இரண்டு பழைய டிக்கட்டுகளின் அடிப் பகுதிகளைச் சாமர்த்தியமாக இணைத்து ஒட்டி முழு டிக்கெட்டாக்கி ஏமாற்றியிருக்கிறான் என்று. இந்த இரட்டை மோசடிக்கு உள்ளான பிறகு பிளாக்கில் எதையும் வாங்குவதில்லை.





✖ கௌசிகன்

✖ ஐயப்பன், மணலூர்
? கதிரிலிருந்து நா.பா. விலகினாரா? விலக்கப்பட்டாரா?
! பட்டார்.

✖ எஸ். முல்லை மணாளன், தென்காசி
? பத்தி பத்தியாக எழுதுகிறீர்களே, சுருக்கச் சொல்லி விளங்க வைக்கலாமே?
-லாம்.

✖ கி. வசந்தகுமார், ஆறுமுகனேரி
? மக்கள் ஜனநாயகம் பற்றி அவநம்பிக்கை கொள்கிறார்களே?
! நம்பிக்கை கொள்ளக் கூடிய வேறு ஆட்சி முறை இல்லையாதலால் ஜனநாயகத்தில் அவநம்பிக்கை கொள்வது தவறு.

✖ தி. உமாபதிராசா, புதுச்சேரி
? ஆல் இந்தியா ரேடியோவை ஆகாஷ்வாணியாக மாற்றியது பற்றி?



✖ ஜே. கிருஷ்ணமூர்த்தி



✖ லால்குடி

! ஆகாசம், வாணி என்பன தமிழில் வழக்கில் உள்ள சொற்களே ஐயமில்லை. 'ஆல் இந்தியா ரேடியோ' என்பதை விட 'ஆகாசவாணி' அழகாகத் தொனிக்கிறது சந்தேகமில்லை. ஐயமும் சந்தேகமும் இதுஇந்தி திணிப்பின் பல வடிவங்களுள் ஒன்று என்பதே. மத்திய அரசுத் துறைகள் அனைத்திலும் இந்தி திணிப்பு ஓசைப்படாமல் மும்முரமாக நடக்கிறது. இதை நாம் ஆட்சேபிக்கிறோம் என்பதை உணர்த்தவே ஆகாசவாணிக்கு அடையாள எதிர்ப்பு.

✖ எம். வெங்கடேஸ்வரன், திருநெல்வேலி
? குற்றால அருவியில் குளிக்க முப்பது பைசா கேட்டால் ஜனங்கள் கூப்பாடு போடுகிறார்களே?
! அருவி வட்டாரத்தைத் தூய்மையாகவும் இயற்கை எழில் குன்றாமலும் பாதுகாத்துக் குளிப்பவருக்கு வசதிகளும் செய்தளித்தால் கூப்பாடு போட அவசியமில்லை. ஆனால் இப்படி நடக்காது. வசூலிக்கப்படும் கட்டணம் விரயமாகும் என்று மக்கள் வேறு சந்தர்ப்பச் சூழல்களில் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால் தான் கூப்பாடு.

✖ ஐயப்பன், மணலூர்
? நீண்ட நாள் வாழ எனக்கு ஆசை? என்ன செய்யலாம்?
! நீண்ட நாள் வாழ்ந்தால் போதுமா? அது ஆரோக்கியமான வாழ்க்கையாகவும் இருக்க வேண்டும். ராஜாஜி சொன்னார்: "என் ஆரோக்கியத்தின் ரகசியம்: எதையும் (சைவ உணவில்) ருசித்துச் சாப்பிடு

வேன்; எதையும் குறைவாகச் சாப்பிடு வேன்''. பின்பற்றுங்கள்.

✕ வெ. பாலசந்திரன், கல்கத்தா
? வாண்டு மாமா, கௌசிகன் என்ற எழுத்தாளர்களை என் சிறு வயதில் கல்கி, கோகுலத்தில் சந்தித்திருக்கிறேன். இப்போது அவர்கள் எங்கே?
! இருவரும் ஒருவரே. இன்று அவர் 'கதிர்' துணை ஆசிரியர்.

✕ கே. ரகுநாத், நெய்பத்தூர்
? இதயத்தில் நக்கீரனின் கேள்வி பதிலைக் கவனித்தீர்களா? (கல்கி ராஜேந்திரன் பற்றி)
! கவனிக்க வேண்டாம் என்று நினைத்தால் கூட விடமாட்டீர்! சரி, கேட்டுக்கொள்ளுங்கள்....


மணியனுக்கு மட்டும் வாசன், எம்.ஜி ஆர். ஆதரவு கிட்டாமலிருந்திருந்தால்...

தாமரை மணாளன் மட்டும் மணியனின் நட்பைப் பெறுமலிருந்திருந்தால்....

✕ எம். வனஜா, சென்னை-102
? காலத்தை விட விலை மதிப்புடையது?
! அகாலம்.

✕ டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி
? மா மனிதன் என்று யாரைச் சொல்லலாம்?
! பாதாளச் சாக்கடையில் இறங்கி, மூழ்கிக் குளித்து, அடைப்பு நீக்கும் பணியில் ஈடுபட்டு, விஷவாயு சுவாசித்து, உயிரையும் கொடுக்கும் உழைப்பாளிகள் மா மனிதர்கள்.

இந்தக் காரியத்தைச் செய்ய இயந்திரம் வரவழைத்த பிறகும் 'அது போதவில்லை; மனிதர்கள்தான் இறங்க வேண்டும்' என்று இந்த விஞ்ஞான யுகத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிற MMWSSB அதிகாரிகள் மாக மனிதர்கள்!





✕ சென்னுரெட்டி



✕ மார்கரெட் தாட்சர்



✕ எம். ராமலிங்கம், சோழபுரம்
? குமுதத்தின் இளமைக் கதைகள் எப்படி?
! இளமைக் கதை எழுதிய ஒருவருடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த ஓர் இளைஞர் ''ஏன் ஸார், இளைஞர்களுக்கு செக்ஸ் உணர்வு உண்டுதான். ஆனால் அது ஒன்று மட்டும்தான் அவர்கள் கவலை என்பது போல் எழுதுகிறீர்களே வேறு பிரச்னைகளே இளைஞர்களுக்கு இல்லையா?'' என்று பாய்ந்தார். எழுத்தாளர் பதில் தந்தார். ஆனால் அதில் வலு இல்லை என்றே எனக்குப் பட்டது.

✕ எம். லதா, ஈரோடு-9
? தில்லானா இந்தியில் எடுபடுமா?
! படும். ஹிந்துஸ்தானி ராகங்கள் சிலவற்றில் அமைந்த லால்குடியின் தில்லானா இசைத்தட்டைக் கேட்டதில்லையோ?

✕ ஈ. கே. ஜெயந்தி, பெங்களூர்
? உருவமின்றிச் சஞ்சரிக்கும் சக்தி உங்களுக்குத் திடீரென்று கிடைத்து விட்டால் முதலில் என்ன செய்வீர்கள்?
! பஞ்சாப் மாநில ஆளுனராகத் தமது பதவி ஏற்பு வைபத்தைக் காண 150 பேரை அரசுச் செலவில் அழைத்துப் போய் ஊர் சுற்றிப் பார்க்கவும் வசதி செய்த சென்னுரெட்டியை அணுகி, அசரீரியாகப் பேசி மிரட்டுவேன்! பிரதமர் வீட்டு டெலிஃபோன் பில் ரூ. 45,560 எனில் அதே கால கட்டத்தில் ரயில்வே உதவி அமைச்சர் ஜஃபார் ஷரீஃப் வீட்டு டெலிஃபோன் பில் ஒரு லட்சத்துக்கும் மேல். இப்படி மக்களின் வரிப் பணத்தை விரயப்படுத்துபவர்களுக்கெல்லாம் கடுக்காய் கொடுப்பேன்!

✕ எம். ஸ்ரீதரன், விருத்தாசலம்
? இம்மண்ணில் பணக்காரன் வியர்வை என்று சிந்தும்?
! பணக்காரனே மேலும் பணக்காரனாக்கி ஏழையை முன்னேற விடாத இந்திரா சோஷலிசக் கொள்கை மாறும்போது.

✠ மனோபாரதி, பாண்டிச்சேரி
? ஜோதிடம் ஒருவரின் வாழ்க்கையை நிர்ணயிக்குமா?

! -காது! அப்படி எந்த ஜோதிடரும் கூறுவதில்லை. எதிர்காலத்தில் என்ன நிகழும் என்று முன்கூட்டியே சொல்வார்கள். தீமைகள் நேரலாம். என்று கண்டால் பரிகாரங்கள் கூறுவார்கள். அவ்வளவே.

அமரர் கல்கி கூறினார்: ''எனக்கு எதிர்காலத்தில் நன்மை ஏற்படுமெனில் அதை இப்போதே தெரிந்துகொள்ள நான் ஆசைப்படவில்லை. எதிர்பாராத மகிழ்ச்சி அடைவதையே விரும்புகிறேன். எதிர்காலத்தில் தீமை ஏற்படுமெனில் நேர்ந்து விட்டுப் போகட்டும். அதை இப்போதே தெரிந்து கொண்டு நான் கவலைப்படத் தயாராயில்லை!''

✠ ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்
? தமிழகத்தில் இனி வரும் தேர்தல்களில் இ. காங்கிரஸ் தனித்து நின்றே போட்டியிடலாம் என்று சிவாஜி முழங்கியிருக்கிறாரே?

! தனித்து நின்று மட்டுமல்ல; எம். பி.எஸ். கட்சி, மூப்பனார் கட்சி, ஆர். வி. கட்சி, தங்கபாலு கட்சி என்று தனித் தனியே நின்றும் போட்டியிடலாம். வெற்றிபெற முடியாதே!

✠ கே. ஆர். ஜனார்த்தனன், தஞ்சாவூர்
? ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! நம்மிடமிருந்து நமது உணர்ச்சிகளை வேறுபடுத்திப் பார்த்து அவற்றை வெற்றி கொள்ள வேண்டும் என்று சமீபத்தில் டி.வி.யில் உபதேசித்தார். உம்: பயம். தத்துவ விசாரணை என்ற அளவில் கேட்க ரசமாயிருந்தது. அதைவிட குஷியாக இருந்தது அவரை மடக்கி மடக்கிப் பேட்டி கண்ட அம்மையார் போட்ட கேள்விகள்!

✠ பி. ஜே. ரத்தன், தஞ்சை
? இந்தியா — முன்னேற தாங்கள் கூறும் யோசனை என்ன?

! கோஸ்டா ரிகா நாட்டைப் பின்பற்றுங்கள்! அந்த நாட்டின் தேசிய கீதம்: ''உழைப்பும் அமைதியும் நீடூழி வாழட்டும்.'' படிப்பறிவு உடையவர்: 92 சதம். சுற்றிலும் சர்வாதிகாரங்கள் நிலவ இங்கு தழைப்பது ஜனநாயகம். ஒரு முன்னாள் ஜனாதிபதியின் முழக்கம்: ''கல்வி அறிவில்லாத ஜனநாயகம் ஒரு மாயை.'' ஒருவன் தாமதமாக வேலைக்கு வந்தால் முதலாளி அவனை கோபிப்பதில்லை. அணைத்தவாறு, ''என்னப்பா ஆச்சு?'' என்பார். ராணுவமே கிடையாது! ராணுவம் இருப்பின் ராணுவ ஆட்சி ஏற்படலாம்; மேலும் ராணுவத்துக்குச் செலவழிப்பதற்குப் பதில் கல்வி, சுகாதாரத்துக்குச் செலவழிக்கலாம் என்று நம்புகின்றனர். ஜனாதிபதி இல்லம் என்று ஏதும் கிடையாது. ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுமுன் வாழ்ந்த வீட்டிலேயே தொடர்ந்து வசிப்பார். காரியாலயத்துக்கு நடப்பார். மக்கள் நேரடியாக அவரை அணுகலாம்; குறைகளைக் கூறலாம். தேர்தலுக்கு ஆறு மாதம் முன்னர் நாடாளு மன்றம் நிறுவும் தேர்தல் டிரிப்யூனல், போலீஸ் படை மீது பூரண ஆதிக்கம் செலுத்துகிறது. ஜனாதிபதிகூட தேர்தல் டிரிப்யூனலை மீறி ஏதும் செய்ய முடியாது! (நன்றி: ரீடர்ஸ் டைஜெஸ்ட் மார்ச், 82)

✠ ஆர். செல்வராஜ், லால்குடி
? பல நாடுகளைத் தமது ஆதிக்கத்திலிருந்து விட்டுக் கொடுத்த பிரிட்டன், ஃபாக்லண்டு விஷயத்தில் விடாப்பிடியாக இருப்பதேன்?

! சாத்துவிகப் போராட்டம், பேச்சு வார்த்தை, உலக நாடுகள் அபிப்பிராயத்தை உருவாக்குதல் என்ற எத்தனையோ முறைகள் இருக்க அவற்றை விடுத்து அர்ஜென்டைனா ஆக்கிரமிப்பில் இறங்கியது தான் காரணம். வல்லரசான பிரிட்டன் ஆக்கிரமிப்புக்கு அடிபணிய முடியுமா? கௌரவப் பிரச்னை!


✠ ஆசைத்தம்பி, தாரமங்கலம்
? இன்று தேசிய உணர்ச்சி நம்மிடம் ஆழமாக இல்லையென்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கூறுகிறார்களே?

! ரொம்ப சரி. ஒரு சின்ன உதாரணம் பாருங்கள். என் நண்பர் ஹைதராபாத்திலிருந்து சென்னை வர வெயிட்டிங்லிஸ்டில் இருந்தார். பயண தினத்தன்று ஸ்டேஷன் வாசலிலிருந்த அறிவிப்பில் இவருக்கு பெர்த் போட்டிருந்தது. மகிழ்ச்சியுடன் விரைந்தார். ஆனால் டி. டி. ஆர்., தமது லிஸ்டில் இவர் பெயர் இல்லை என்று கூறி இடம் தர மறுத்தார். அத்துடன் விட்டிருந்தால் தேவலாம். 'கடைசிப் பெட்டியில் உமது ஆட்கள் (தமிழர்கள்) இருக்கிறார்கள். போய்க் கேள்' என்று குத்தலாகப் பேசினார். நண்பர் குரலை உயர்த்திய போது 'தமாஷுக்குச் சொன்னேன்' என்று மழுப்பினார். இப்படி எத்தனையோ. ஆனால் நம்மிடையே தேசிய உணர்ச்சி ஆழமாகஇல்லை என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கூறுவதுதான் விந்தை. 35 வருட காலத்தில் 33 வருட ஆட்சி இவர்களுடையதுதான். தேசிய உணர்வு இறுகாமல் தளர்ந்ததெனில் அதற்குக்காரணம் இவர்கள் கடைப்பிடித்து வந்துள்ள பல கொள்கைகளே.

பரிசு பெறுபவர்:

✠ ஜ. கே. ஜெயந்தி
L. 69, கனகா பார்க்
ஜெய நகர், 2 பிளாக், பெங்களூர்-11.


வேடிக்கை உல-கம்.
கேளிக்கைச் சுூ-கம்...
நியூட்ரின்
பபுல் கம்.
nutrine
BUBBLE GUM
ஊதிப் பார்...
உவகையின் உருவகம் இது.
மலையத்தனை, கடுகத்தனை
-விளையாட்டுக்கள்
எத்தனை எத்தனை!
நியூட்ரின் பபுல் கம்.
ஊதிக்களிப்பாய்
–உவகைச் சுரங்கம்
இன்பச் சுகம்
–அதுவே நிகரில்லாத
நியூட்ரின் பபுல் கம்.
nutrine
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
நியூட்ரின் சூயிங்-கம்
புரொடக்ட்ஸ் கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
சித்தூர்-517 002 (ஆ.பி.)
CAS-NC-1-82 TAM-A



பதவி
பணம்
பஜன்லால்
ஜனநாயகம்
மத்திய அரசின் பல்வேறு துறைகளில் தொடர்ந்து வரும் இந்தித் திணிப்பு
எலியை விரட்டி விட்டோம்!
ஆகாஷ் வாணி

மோசடிக்கு மேல் மோசடி!



சரண் சிங்கைப் பிரதமராக்கி ஆட்சியில் அமர்த்திய சஞ்சீவ ரெட்டிக்கு தபஸேயைத் தட்டிக் கேட்க தார்மீக பலம் இல்லை என்பதால் ஹரியானா ஆளுனர் செய்தது நியாயமாகிவிடாது.

ஹரியானா லோகதளத் தலைவர் தேவிலாலிடம் ஆதரவாளர்களுடன் **இரு தினங்களில்** வந்து தமது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்குமாறு கூறிவிட்டு, அன்று மாலையே இ. காங்கிரஸ் தலைவர் பஜன்லாலை அழைத்து முதல்வராக்கித் தமது பெரும்பான்மையை நிரூபிக்க **38 நாள்** அவகாசம் அளித்தது அதர்மத்தின் உச்ச நிலை.

இதைவிடப் பெரிய மோசடி ஒன்று உண்டெனில், அது, கட்சி தாவுவது என்ற மோசமான பழக்கத்தைத் தடுத்து நிறுத்தவே தாம் இப்படிச் செய்ததாக தபஸே கூறுவதுதான்.

கட்சி மாறிகள் எந்தக் கட்சிக்கு ஆட்சி அமைக்க சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளதோ அந்தப் பக்கம்தான் சாய்வார்கள். பஜன்லாலுக்குச் சத்தியப் பிரமாணம் செய்வித்து முதல்வராக்கிய பின், அவருக்குப் பெரும்பான்மை பெறுவதென்பது மனச்சாட்சியை விற்றுக் காசாக்குகிற அரசியலில் எளிதாகவே இருக்கும். சுயேச்சைகள் பலர் இ. காங்கிரஸ் பக்கம் சரிந்தார்கள். நேற்று இ. காங்கிரஸிலிருந்து விலகிச் சென்றவர்களை இன்று திரும்ப அழைத்து, அவர்களுக்கு அமைச்சர் பதவியும் தரப்படுகிறது. இத்தகைய கட்சியின் ஆட்சி நடக்கும்போது மக்கள் எந்த அளவுக்குத் தர்ம நியாயங்களை அதனிடம் எதிர்பார்க்க முடியும்?

இவ்வாறு அரசியலைச் சாக்கடையாக அடித்ததில் இந்திரா காந்தி தமக்குச் சம்பந்தமே இல்லாதது போலவும் பட்டுக்கொள்ளாமல் இருப்பது போலவும் காட்டிக் கொள்வது உருத்திராக்கப் பூனையையே நமக்கு நினைவூட்டுகிறது.

இதற்கு மறுபுறமாக தேவிலால் முதல்வராவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்திருந்தால் அந்தப் பக்கமும் பல எம். எல். ஏ.க்கள் சரிந்துதானே இருப்பார்கள்? மறுப்பதற்கில்லை. எனவேதான் அண்மையில் ஓய்வு பெற இருக்கும் பிரதம தேர்தல் கமிஷனர் ஷக்தர் அனுபவ ரீதியாகக் கூறியுள்ள யோசனை முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. 'சுயேச்சையாகவோ ஒரு கட்சியின் சார்பிலோ நின்று வெற்றி பெறும் ஒரு எம். எம். ஏ. அந்த நிலையிலிருந்து மாறினால் எம். எல். ஏ. பதவியை அவர் இழப்பார் எனத் தேர்தல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வந்து விடலாம்' என்கிறார்.

கட்சி மாறுவதை இவ்விதம் தடை செய்வது அபிப்பிராய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகக் கருதப்படலாம். கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஒருவருக்கு உரிமை இருக்க வேண்டும்தான். ஆனால் இ. காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் செய்து மக்களின் வோட்டுக்களைப் பெற்றவர் இ. காங்கிரஸ் அமைச்சரவையிலேயே இடம்பெறுவது மக்களை முட்டாள்களாக்குவதாகும். 'என் கொள்கைகளை மாற்றிக் கொண்டேன்; என் புதிய கொள்கைகளுக்கு உங்கள் ஆதரவை வேண்டுகிறேன்' என்று அவர் மீண்டும் மக்கள் மன்றத்தில் நிற்பதுதான் முறை.

ஷக்தரின் யோசனை அமலாக்கப் பட்டால் இரு பிரதான கட்சிகள் ஏறத் தாழ சம நிலையில் இருக்கும்போது தேசிய நோக்குடன் சர்வ கட்சி அமைச்சரவை மட்டுமின்றி நல்ல எதிர்ப்பு அணியும் உருவாக வாய்ப்பிருக்கும். மத்தியிலும் சரி, மாநிலங்களிலும் சரி கட்சிகள் ஒன்றை ஒன்று கவிழ்ப்பதே காரியமாயிராமல் ஒன்றோடொன்று ஒத்துழைக்க முன்வரும். அரசியலும் ஆட்சியும் பெருமளவு தூய்மை பெறும்.

ஆனால் நமது அரசியல் பெருந்தலைவர்களிடம் நிலவும் சுயநலம் ஷக்தரின் எளிய ஆரோக்கியமான யோசனையை ஏற்க அனுமதிக்காதே!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

1982 ஜூலை 13
துந்துபி வைகாசி 30
மலர் : 40 இதழ் : 46

கல்கி



ரவிகுல திலகன்

செம்பியன்

22

தமிழ் மன்னர்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டி அடிக்கடி யுத்தத்தில் இறங்கியது அந்நாளைய அராபியக் குதிரை வியாபாரிகளுக்கு மிகவும் லாபகரமாய் இருந்தது. போர்க்களம் எனில் குதிரைகள் இன்றியமையாதன. எனவே அராபியக் குதிரைகள் நல்ல விலை பெற்றதுடன் நிறையவும் இறக்குமதியாயின. யுத்தத்தில் குதிரைகள் மாய, மேன்மேலும் புதிய குதிரைகளை மன்னர்கள் வாங்குவார்கள். வேதனையென்னவெனில் களத்தில் மடிந்தவை தவிர லாயத்தில்



செத்தகுதிரைகளும் எண்ணிக்கையில் அதிகம். காரணம் அராபியக் குதிரைகளை நன்கு பாதுகாக்கவும் இனவிருத்தி செய்து பராமரிக்கவும் நமது அரசர்கள் அறியாதிருந்ததுதான். அராபிய வியாபாரிகளும் அவர்களுடன் வர்த்தகம் புரிந்த நமது வணிகர்களும் இந்த நுணுக்கங்களைத் தன்னலங்கருதி ரகசியமாகவே காத்தனர்.

இதனை அறிய வந்த முத்தரையர் திடுக்கிட்டதில் வியப்பில்லை.
''இப்படியும் ஒரு மோசடியா?'' என அவர் வினவ,

''மோசடி மட்டுமல்ல, மன்னவா! குதிரைகளைச் சரிவரப்பேணி வளர்க்கவில்லையெனில் அவற்றைக் கொடுமைப்படுத்துவதுமாகும். இரண்டுமே என் நண்பனுக்குப் பிடிக்காதவை. அதனால்தான் தன்னிடம் குதிரை வாங்குவோரைத் தான் நேரிலும் கண்டு பேச வேண்டும் என்று பிடிவாதமாக இவ்வளவு தூரம் வந்திருக்கிறான்! குதிரைகளின் இனவிருத்தி பற்றியும் நமக்கு அதிகம் தெரிவதில்லை. அந்த நுணுக்கங்களை அறிந்து கொண்டால் அராபியாவிலிருந்து கப்பல் கப்பலாக இடைவிடாமல் குதிரைகளை நாம் தருவித்துக் கொண்டே இருக்கவேண்டிய அவசியம் நேராது.''

முத்தரையர் எழுந்தார். அராபியனை அணுகிக் கட்டித் தழுவிக் கொண்டார். ''இவனால் நாம் எந்த அளவுக்குப் பயன் பெறுவோமோ பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் இவன் எண்ணங்கள் உயர்ந்தவை. பாராட்டுகிறேன்!'' தட்டிக் கொடுத்தார்.


சலாமிட்டான்.

''ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றான் ஜெயசிங்கன்.

'சரே'லெனத் திரும்பினார் முத்தரையர். பார்வையால் ஜெயசிங்கனைத் துளைத்து, ''நிபந்தனை? யாருக்கு யார் நிபந்தனை போடுவது!'' என்றார் அதிகாரமாக.

ஜெயசிங்கன் சிரித்தான். ''பெரிய காரியம் ஒன்றுமில்லை பிரபோ! இவனுக்குத் தமிழ்க் கலைகளை அறிய வேண்டும் என்று ஓர் அவா. இவனது உள்நாட்டுப் பயணத்துக்கு அதுவும் ஒரு காரணம். சிற்பம், ஓவியம் என்றால் நாழிகைக் கணக்கில் நின்று ரசிப்பான். கவிதை என்றால் மொழிபெயர்த்துக் கூறச் சொல்லி மெச்சுவான்....''

''அப்படியா! நேற்றுக்கூட பாண்டி நாட்டிலிருந்து ஒரு புலவன் தன் சீடனுடன் வந்திருக்கிறான். இன்று மாலை அரண்மனைக்கு வரச்சொல்லி இருக்கிறேன். உன் நண்பனை அழைத்து வாயேன். செய்யுள்களைக் கேட்



கட்டும்.''

'பாண்டி நாட்டிலிருந்து புலவர்கள்! ஒரு வேளை... ஒரு வேளை... அப்படியும் இருக்குமா? குவளை மூலமாகத்தான் வகுத்த திட்டத்துக்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பிருக்குமா? தனது முயற்சிகள் இறுதிக் கட்ட வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கின்றனவா?' — விஜயாலயன் மனப் பதைப்புடன் அப்போதே மாலை நேரமாக இருக்கக் கூடாதா என ஏங்கினான்.

''அனைத்திலும் நாட்டியம் — நாடகம் என்றால் இவனுக்கு உயிர். 'தமிழ்க் கலை

களின் உன்னத நிலையை முத்தரையர் ஆட்சியிலன்றி வேறெங்கும் காண முடியாது' என்று கூறி அழைத்து வந்தேன். கலையரசி உத்தமசீலியின் ஆடல் பாடல் திறன் உலகப் பிரசித்தியாயிற்றே! அதைக் காண வேண்டாமா இவன்?'' — சொல்லிக் கொண்டு போனான் ஜெயசிங்கன்.

''புலவர்களுக்கும் வணிகர்களுக்கும் ஒரு விதத்தில் ஒற்றுமை உண்டு'' என்று இடைமறித்துப் பேசினான் திவாகரன். ''இருவருமே புகழ்ந்துரையில் வல்லவர்கள். அவர்கள் பிழைப்பே அதனால்தானே நடக்கிறது! புலவர்களுக்குப் புகழ்ந்துரைத்தால் பரிசில்கள் தாராளமாகவே கிடைக்கும். வணிகர்கள் புகழ்ந்துரைத்தால் பேரம் பேசுதல் குறைகிறது. லாபம் அதிகரிக்கிறது!''

உத்தமசீலி கலீரென்று சிரிக்க, அராபியன் தன் உணர்ச்சிகளுக்குக் கடிவாளம் போட்டு இழுத்துப் பிடித்தான். ஆனால் ஜெயசிங்கனுக்கு அந்த அவசியம் இருக்கவில்லை.

''திவாகரா! நீ எல்லை மீறிப் போகிறாய்! எங்களையும் என்ன விஜயாலயனைப் போல் சுரணையற்றவர்கள் என்று நினைத்தாயா? அரசவையில் நீ சோழ இளவரசனை இழித்துரைத்தது அறிந்தும் அவன் மீசை துடிக்காதிருக்கலாம். ஆனால் நாங்கள் மானமுள்ளவர்கள்!''

கூறியவாறே சுவரில் பொருத்தப்பட்டிருந்த கத்தி கேடயங்களிலிருந்து ஒரு வாளை உருவினான் ஜெயசிங்கன். கண்ணிமைக்கும் முன் அதனைத் தன் உடைவாள் கொண்டு சந்தித்தான் திவாகரன். இரண்டுமே காலை இளம் பரிதியின் செவ்வொளியைச் சிதற அடித்தன.

''ஜெயசிங்கா!'' என்று அதட்டினார் முத்தரையர். ''இது என்ன? மன்னர் முன்னிலையில் இருப்பதையுமா மறந்தாய்?''

''அரசே! இவன் எங்களை மட்டுமா இழிவுபடுத்திப் பேசினான்? எங்கள் புகழுரைக்கு உமது கொற்றமும் இவள் கலைத் திறனும் அருகதை உடையவையல்ல என்ற அர்த்தமும் அதில் உள்ளடக்கம்தானே? மேலும் புகழுரைகளில் தாங்களும் உத்தமசீலியும் மயங்குவதாகவும் அதற்குப் பொருள் கொள்ளலாமல்லவா? நான் வாள் பிடிப்பது எங்களிருவர் மானத்தைக் காக்க மட்டுமல்ல; உங்களிருவர் கௌரவத்தையும் நிலைநாட்டத்தான்!''

ஜெயசிங்கன் பேசிக் கொண்டிருக்கும் போதே இருவரது வாள்களும் மோதிக் கொண்டிருந்தன. ஒன்றை ஒன்று உரசுவதும் பிரிவதும், கலப்பதும் சுழல்வதுமாக இருந்தன. தாக்கியபோது 'டணார் டணார்' என்ற ஒலி பிறந்ததோடு தீப்பொறிகளும் பறந்தன!

முத்தரையருக்குத் தர்மசங்கடமான நிலையாகி விட்டது. தமது ஆணையைக் கூட மதியாமல் திவாகரன் ஜெயசிங்கனை வம்புக்கிழுத்ததை அவர் வெறுத்தார். ஆனால் அவனைக் கண்டிக்கவோ திருத்தவோ முடியாத கையாலாகாத நிலையில் இருப்பது போலும் காணப்பட்டார். ஜெயசிங்கனின் வாதத்திலோ தர்ம நியாயம் இருப்பதை அவர் உணர்ந்ததால் அவனையும் அதட்டி அகலச் செய்ய முடியவில்லை. அயல் நாட்டான் எதிரில் இவ்விருவரும் தம்மை மதிக்காது சண்டை போட்டுக் கொள்வதானது அவருக்கு அவமானமாகவும் வெட்கமாகவும் இருந்தது. அரசர் கைகளைப் பிசைந்தவாறு வேதனைப் படுவதைப் பார்த்தான் அராபியன். அடுத்து உத்தமசீலியை நோக்கினான்.

'இந்த வாட்போரை நீங்களாவது தடுத்து நிறுத்தக் கூடாதா? உங்களாலும் அமைதி நிலவச் செய்ய முடியாதா?' என்று முக பாவத்தாலேயே அவன் கேட்டான். நெருக்கடி நிலையிலும் அந்தக் கலை நுணுக்கத்தை அவன் ரசித்தான். புருவங்களின் நெறிவில் வேதனையை வெளியிட்டாள்; விழிகளில் கவலையைத் தேக்கினாள்; தலையின் அசைவுகளால் வினாக்களை எழுப்பினாள். கன்னக் கதுப்புக்களின் துடிப்பும் கொவ்வை அதரங்களின் குவிப்பும் மௌன உரையாடலுக்கு உதவி செய்தன. பெருமூச்சில் நெஞ்சகங்கள் விம்மி மருவிய ஆடையின் உறுதியைச் சோதித்தன.

இதற்கிடையில் திவாகரனும் சரி, ஜெயசிங்கனும் சரி, ஒருவருக்கொருவர் சளைத்தவரில்லை என்பது போல் அந்த நீண்ட கூடத்தில் வாட் சிலம்பம் செய்தபடியே நாற் திசையிலும் நகர்ந்தனர்.

சுவரில் பொருத்தியிருந்த பல கேடயங்கள், ஆயுதங்களிலிருந்து ஒரு நீண்ட வாளை உருவினான் அராபியன். அதன் கனத்தைப் பரிசோதித்தான். பிடிமானலாகவத்தைக் கணிக்க 'விஷ் விஷ்' என்று அதனால் காற்றைக் கிழித்

நிரந்தரமானது



உறுதியான அஸ்திவாரமே நிரந்தரம் பெற்றது.

ஆலமரத்தின் வேர்களின் அமைப்பு அது அந்த மரத்திற்கு தருகின்ற உறுதியான அஸ்திவாரத்தினையும் அதனால் அளிக்கப்படுகின்ற நிரந்தரத்தன்மையுமே என்று வெகுவாக அறியப்படுகின்றது.

பல்லாண்டுகளாக ஆலமரம் கம்பீரமாகவும், தரையில் உறுதியாகவும், தனது கிளைகளையும் கூட வேரூன்றி நிற்கச் செய்து சூரிய வெப்பத்தினின்றும், மழையிலிருந்தும் பாதுகாப்பை அளிக்க வல்லது.

அஃதே போன்று—பாங்க் ஆப் தஞ்சாவூர்... உறுதியாகவும் நிரந்தரமாகவும் வேரூன்றி நிலைபெற்று தனது பரந்த கிளைகளின் மூலம் 80 ஆண்டுகளுக்கு மேலாகவே பலதரப்பட்ட வங்கி வசதிகளை மக்களுக்கு அளித்து வருவதோடல்லாமல் அவர்களின் பணசம்பந்தமான பிரச்சனைகளுக்கெல்லாம் வழிவகை செய்து உதவி வருகின்றது.

ஸேவிங்ஸ் பாங்க்—பிக்ஸட் டிபாஸிட்—மினி டிபாஸிட்—பொற்குவியல் டிபாஸிட்—ரிகரிங் டிபாஸிட்டுகள் மற்றும் காஷ் சர்டிபிகேட்டுகள்.

விவரங்களுக்கு அணுகவும்:—

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்

(பதிவு அலுவலகம்: 1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்-613 001)

(தமிழ் நாடு)

B.K. மாதவன்,
சேர்மன்.

VSK: BTL: 140

தான். உறுதியை அறிய வளைத்து விட்டான். விண்ணென்று நிமிர்ந்தது. நாலே எட்டில் கூடத்தை அளந்து யுத்தம் புரிந்துகொண்டிருப்பவரை நெருங்கி வாளை இடையில் புகுத்தினான். இரண்டே வீச்சில் திவாகரனின் வாள் அவன் கரத்தினின்றும் விடுபட்டு எட்டத்தில் போய் 'டணார்' என்ற சத்தத்துடன் விழுந்தது. அவன் திகைப்பும் வியப்புமாகக் கத்தி சென்று விழுந்த திக்கை நோக்கினான். அடுத்து அராபியனின் பக்கம் அவன் திரும்பியபோது முகத்தில் வெட்கமும் கோபமும் போட்டியிட்டுப் பொறிந்தன. களைப்பில் மூச்சிரைத்தது. உடல் வியர்வையில் குளித்தது.

கீழே விழுந்த வாளின் பிடியில் தன் கையிலிருந்த வாளின் கூர் முனையை நுழைத்து அதனைத் தூக்கி எடுத்து திவாகரனின் பக்கம் நீட்டினான் அராபியன். இதன் மூலம் அதனைக் குனிந்து பொறுக்குகிற அவமானத்தைத் திவாகரனுக்குத் தவிர்த்தான்; தனக்கும் தவிர்த்துக் கொண்டான். தரையில் கிடந்த வாள் உறையுள் புகுந்தது.

எதிரியின் வாள் தெறித்து விழுந்து விட்டமையால் என்ன செய்வது என்று தெரியாமல் நின்ற ஜெயசிங்கனை நோக்கித் தனது வாளை விட்டெறிந்தான் அராபியன். பறந்து வந்த அதன் கைப்பிடியில் லாவகமாகத் தன் இடக்கர விரல்களை நுழைத்துப் பற்றிக் கொண்ட ஜெயசிங்கன், இப்போது தன்னிடமிருந்த இரு ஆயுதங்களையும் கவரில் உரிய இடத்தில் பொருத்திவிட்டுத் திரும்பினான்.

''என்னதான் கோபமூட்டப்பட்டாலும் மன்னர் முன்னிலையில் அவர் ஆணையை மீறி யுத்தம் புரிவது தவறு. நமது தன்மானத்தைக் காத்துக் கொள்ள வேறு இடமும் வேறு சந்தர்ப்பமும் கிட்டாமல் போகாது'' என்றான் அராபியன்.

ஜெயசிங்கன் மொழிபெயர்க்க, ''வேண்டாம், உங்களிடையே என்றுமே சச்சரவு வேண்டாம்'' என்றார் மன்னர் பதற்றத்துடன்.

''வியாபாரத்தில் மட்டுமல்ல, வாட்போரிலும் வல்லவர்கள் என்று உணர்த்திவிட்டீர்கள்'' என்றாள் உத்தமசீலி.

''ஆ! வாணிபத்துக்குப் போர்த் திறனின்றி முடியுமா? முத்தரையர் நாட்டில் திருடர்கள் இல்லாதிருக்கலாம். ஆனால், நாங்கள் மதிப்பு மிக்க பொருட்களைச் சுமந்து கொண்டு நாலு திசைகளிலும் செல்பவர்கள். தற்காப்புக்காகவேனும் பல்வகைப் போர்க் கலைகளையும் பயில்வோம். எனது அராபிய நண்பனோ கடல் வாணிபம் செய்பவன். எப்போதும் கடற் கொள்ளைக்காரர்களின் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பவன்!''

''இவர் வாழ்க்கை ரொம்பச் சுவாரஸ்யமாய் இருக்கும்போலிருக்கிறதே'' எனஇள முறுவலுடன் அராபியனை ஏறிட்டுப் பார்த்தாள் உத்தமசீலி. அகன்ற மார்பின் மீது பார்வையை ஓடவிட்டாள். பூமழை பொழிந்தது விஜயாலயனுக்கு மட்டும். சிலிர்த்தான். ஜெயசிங்கன் உதவியுடன் தான் அவளைப் புரிந்து கொண்டது போல் நடித்து அவன் மூலமாகவே பதிலும் சொன்னான்: ''என் வாணிபம் பற்றியும் கடல் பயணங்கள் குறித்தும் என் நாட்டைப் பற்றியும் எத்தனையோ ஆச்சரியமான உண்மைக் கதைகளைக் கூற முடியும். எழிலரசிக்குக் கேட்க நேரம் இருக்க வேண்டுமே?''

''கல்வி கற்கும் நேரத்தை இதற்கென ஒதுக்கினால் ஆயிற்று'' என்றாள் உத்தமசீலி. ''உங்கள் அனுபவங்களைக் கேட்பதே கல்வி தானே?''

''அத்துடன் வனபோஜனத்தையும் இணைக்கலாமே?'' என்று யோசனை கூறினான் ஜெயசிங்கன். ''சித்திரான்னங்களை ருசித்தபடியே சாவகாசமாகக் கதை பேசலாம்...அதாவது மன்னருக்கு மறுப்பில்லை என்றால்!''



தெரியாது?

கற்பென்றால் வெங்காயம்
கடவுளென்றால் கத்தரிக்காய்
என்று சொன்ன
தந்தைக் கட்சியிலிருந்து
பிரிந்தவர் இருவரும்
'கொடுங்கள் கண்ணகி
கோயிலை எமக்கு!' என்று
கேரளத்தைப் பார்த்துக்
கேட்பது தெரியாது?

பாக்லண்டா
பால்க்லண்டா? என்ற
சொற்போரில் ஒரு
சின்ன வெற்றி
'சாவி'க்குக் கிடைத்தது:
தினமணியில் எண்ணையை
எண்ணெயாக மாற்றிவிட்டார்களே,
தெரியாது?

அரியானாவில் ஆளுநர்
அப்படியொன்றும்
அக்ரமம் பண்ணவில்லை.
தபலே நிச்சயம்
தப்பு செய்யமாட்டார்.
அன்றொரு நாள்—
மெஜாரிடி இன்றியே
சரணை சிம்மாசனத்தில் அமர்த்திய
குடியரசுத் தலைவரே அவர்
குரு. தெரியாது?

— சாருகேசி

முத்தரையரின் கரங்களைப் பற்றிக் கொண்டான் உத்தமசீலி. "சரி என்று சொல்லுங்கள் பெரியப்பா!" என்றான் ஆவலுடன்.

"ஆகட்டும் குழந்தாய்" என்று அவள் சிரத்தைவாஞ்சையுடன் தடவிக்கொடுத்தார் மன்னர். "அதை நாளைக்கு வைத்துக் கொள்வோம். இன்று மாலை அரண்மனைக்கு வருகிறீர்கள் அல்லவா?"

"கேட்கவும் வேண்டுமா அவசியம் வருகிறோம்" என்றான் ஜெயசிங்கன்.

விடைபெற முற்பட்டபோது ஜெயசிங்கன் கரத்தையும் திவாகரன் கரத்தையும் இணைத்து வைத்தார் மன்னர். "ஜெயசிங்கா! உனக்குத் தெரியுமோ தெரியாதோ, திவாகரன் என் தம்பி மகன். இளம் வயதிலேயே என் தம்பி என் சார்பில் போரிட யுத்தகளம் சென்று வீர சொர்க்கம் எய்தினான். அன்று முதல் அவன் மக்களான இருவரையும் கண்ணே போல் காப்பது என் கடமையாயிற்று. நான் பெற்ற மக்களை விடவும் இவர்களிடம் எனக்குப் பாசம் அதிகம்!"

"தெரிகிறது பிரபோ! நிறையவே செல்லம் கொடுத்து வளர்த்திருக்கிறீர்கள்! திவாகரனின் அகங்காரம், பிடிவாதம், முரட்டுத்தனம் அனைத்துக்கும் காரணமும் புரிகிறது."

"புரிந்து விட்டதல்லவா? எச்சரிக்கையாயிரு!" என்றான் திவாகரன்.

"பார்த்தாயா, பார்த்தாயா! மறுபடி சண்டையை ஆரம்பித்து விட்டாயே!" என்றார் மன்னர், கெஞ்சலும் கொஞ்சலுமாக. பிறகு வணிகரை நோக்கி, "ஜெயசிங்கா! வெளித் தோற்றத்தில் ஏமாறாதே! உண்மையில் திவாகரனுக்கு நல்ல மனசு. இன்று நடந்ததை மறந்துவிடு" என்றார்.

"ஆகட்டும் பிரபோ! இங்கு நடந்த சொற்போர், வாட் போர் இரண்டையும் இந்தக் கணமே நான் மறந்து விடுகிறேன். ஆனால் என் நண்பனைப் பற்றி நான் ஏதும் கூற முடியாது. இவன் மறப்பானா என்பதும் எனக்குத் தெரியாது!"

"அவனைப் பற்றி என்ன? நாளைக்கே கப்பலேறப் போகிறவன்" என்று அலட்சியமாய் மொழிந்த முத்தரையர், தொடர்ந்தார்: "திவாகரா! நல்ல நண்பர்களாக விளங்கக் கூடியவர்களை யெல்லாம் பகைத்துக் கொள்ளாதே அப்பா!"

"ஹூம்" என்றான் திவாகரன். அது, 'அப்படியே ஆகட்டும்' என்று முத்தரையருக்கு அர்த்தமாயிற்று. 'உங்கள் உபதேசம் இங்கு யாருக்கு வேண்டும்?' என்பது போல் மற்றவர்களுக்குத் தொனித்தது!

(தொடரும்)

◆◆

ஆன்றோர் மொழி...



● அருணகிரிநாதர் எல்லாத் தெய்வங்களையும் பாடியிருக்கிறார்என்றாலும் அவருடைய பாட்டிலே ஒரு விசேஷம் உண்டு. சாட்சாத் அம்பிகையைப் பாடினாலும் முடிவில் முருகனைப் பாடியேபாட்டை முடிப்பார். தாயைப் பாடினாலும் சேயைப் பாடி முடிப்பார். மாமனைப் பாடினால் மருகோனைச் சொல்லி முடிப்பார். அப்பனைப் பாடும்போதும் குமரனை ஸ்தோத்தரித்து முடிப்பார். தாய்க்குச் சேயே மாமனுக்கு மருகோனே, அப்பனுக்குக் குமரனே என்று குஹனுடைய முத்திரையை வைத்துப் பாட்டை முடிப்பார். முருகனுடைய முத்திரை இல்லாமல் பாடியது இல்லை. அப்படிக் குஹனுடைய ஸ்தலங்கள் எல்லாவற்றையும் அவர் பாடினார்.

சுப்பிரமணிய சுவாமியிடமும் ஒரு விசேஷம்; அவருக்கு எல்லா ஆசிரமங்களும் உண்டு. அவர் பாலசுப்பிரமணியராக, பால் வடியும் குழந்தையாக இருக்கிறார். திருவேரகத்தில் பிரம்மச்சாரிக் கோலத்தோடு இருக்கிறார். பழனியில் ஆண்டியாக இருக்கிறார். காவியைக் கட்டிக் கொண்டு நிற்கிறார். இங்கே பிரம்மச்சாரியாக யக்ஞோபவீதத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார். திருத்தணிக்குப் போனாலும் சரி, திருச்செந்தூருக்குப் போனாலும் சரி பூரண கிருகஸ்தாசிரமத்தில் தேவயானை, வள்ளி சமேதராகக் காட்சி அளிக்கிறார். எல்லா ஆசிரமங்களுடைய முறைகளை வகுத்துக் காட்டியவர் அவர். அவருக்குச் சுப்ரமணியன் என்று பெயர். அவரது திருமுடி மண்டலத்தில் ப்ரம்ம தேஜஸ் ஜொலிக்கிறது. அதற்குப் பிரமண்யம் என்று பெயர்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

● இரை தேடித் தம்மைக் காத்துக்கொள்ளும் வகை அறிந்து பிழைக்கத் தெரிந்தாலே போதும். பிராணிகளுக்கு அதற்குமேல் அவற்றுக்கு வேறு பயிற்சி ஏதும் தேவையில்லை. மனிதனோ அப்படி இல்லை. சமூகத்தில் ஒருவனாக வாழவேண்டியவன். அவனுக்குப் பிழைக்கத் தெரிந்திருப்பதோடு சமூகத்துடன் ஒத்து வாழவும் தெரிந்திருக்க வேண்டும்.

-ரவீந்திரர்

● நான் பதவி ஏற்ற சில மாதங்களுக்குள்ளேயே ஜனாதிபதியாக இருப்பதென்பது புலி மீது சவாரி செய்வது போல என்று தெரிந்து கொண்டேன்! ஒரு மனிதன் புலி மீது இடைவிடாது சவாரி செய்து கொண்டே இருக்க வேண்டும்; அல்லது அதனால் விழுங்கப்பட்டுவிட வேண்டும்.

- ஹாரி எஸ். ட்ரூமன்



மனிதனுக்குத்தான் என்ன கல்மனம்? ஆண்டவன் மிக மிக மென்மையாய் படைத்த மலர்களுக்கு எப்படி வெல்லாம் முரட்டுப் பெயர் வைத்திருக்கிறான்.

க்ளாரிக்காமாரி கோல்டு! செட்ரஸ்டோரடா!

பெயர்தான் பாடனி கடினம். ஆனால் மலரைத் தொட்டாலோ பத்துப் பெண்களைத் தொட்ட சுகம் தெரிகிறது.

அதன் தேனை உறிஞ்ச வண்டு சமூகமே காத்திருக்கும் போலிருக்கிறது.

இந்த வருட உதகை ஃப்ளவர் ஷோவில், போதைப் புன்னகை வீசிய மலர்களின் எண்ணிக்கை நாலு லட்சம்!

இந்த மலர்களின் மத்தியில், ஒரு ரசனை இல்லாத வெள்ளைச்சாமியும் வைரமுத்துவாகி விடக்கூடும்.

ரோஜாக்கள் மட்டும் இருநூறு வகை.

பஸ் ஸ்டாண்டில், பஸ்ஸில், க்யூவில், நுழைவாசலில் இந்த வார்த்தைகளைச் சொல்லாதவர்கள் யாருமில்லை—

''கறுப்பு ரோஜாவாமே பார்க்க வேண்டும்!''

பார்த்தேன்.

பல வண்ண ரோஜாக்களின் மத்தியில் ஆண்டவனின் ஓரவஞ்சனையை நினைத்து ஏங்கியபடி காட்சி தந்தது.

இமாலய தேவதாருவில் குளுமை தெரிந்தது. வெளிநாட்டிலிருந்து விசா இல்லாமல் வந்தவை பல.

கலைப் பொன்னி



வண்ண ஓவியங்கள்
கொலாஜ் சித்திரங்கள்
தென்னாட்டு நடனங்கள்
மேல் நாட்டுப் பாடல்கள்
என்றிப்படிப் பலவற்றில்
பயிற்சியும் தேர்ச்சியும்
பெற்று வரும் பொன்னியை
''கலைப் பொன்னி''
எனத் தோழிகள்
அழைப்பதிலும் — கல்கி
அட்டையை அவர்
அழகு படுத்துவதிலும்
அதிசயமென்ன?

—சிக்கி

வண்ணப்படம்: ஹரீஷ்

மலர்களைப் பார்க்க வந்தவர்கள் சிலபேர்! இம்மலர்களைப் பார்க்க வந்த மன் ஏஜ் மலர்களைப் பார்க்க வந்தவர்களோ பல பேர்!

உதட்டில் உற்சாகமும் உடையில் நவீனமுமாய்ப் பவனி வந்தனர் (பிகினிதான் பாக்கி) பதினாறு வயது மலர்கள்.

மலர்க் குவியலைப் பார்த்தவாறு இருந்த ஓர் அழகிய குஜராத்திப் பெண்ணைப் புகைப்படம் பிடிக்க, அவள் சட்டெனத் திரும்ப, அவள் அனுமதி இல்லாமல் எடுத்ததற்கு எங்கே பதம் பார்க்கப் போகிறாளோ என்று பயந்து மன்னிப்புக் கேட்கலாம் என்று நெருங்கினால் 'So sweet of you!' என்றாள்.

காமிராவுக்குப் பல்லெல்லாம் Cheese: இத்தனை சந்தோஷத்துக்கும் மத்தியில்—

''பையன் ஊரும் சொல்ல மாட்டேன் என்கிறான். பேரும் சொல்ல மாட்டேன் என்கிறான். அழுகிறான். அழுகையை வைத்து அடையாளம் கண்டு கொள்ளுங்கள்....''

சோலோவாக அழுகை கேட்கிறது மைக்கில். கலை நிகழ்ச்சி என்ற பெயரில் சிங்கார மலர்களுக்கிடையில் சித்ரவதைசெய்தார்கள்.

ஒருவன் திருப்பி வைத்த குடைக்குள் அழகிய மலர்களை விற்றுக் கொண்டு வர, அட மனைவிக்கு வாங்கிப் போகலாம் என்றால் ''சார், இது ப்ளாஸ்டிக்'' என்றான்.

பிரயாணிகளின் பக்க பலமாய் சேரன் தன் படை பலத்தில் நூறு அனுப்பப் போவதாகக் கோவை மாலை பத்திரிகை முன் கூட்டியே அறிவித்தது.

மலையடிவார மேட்டுப்பாளையத்தில் பத்ர காளியம்மன் அமாவாசைக் கூட்டத்தோடு இந்த ஃப்ளவர் ஷோ கூட்டமும் போட்டி போட்டது.

வருகை தந்த முதல்வருக்கு முகஸ்துதி வரவேற்புகள் ஏராளம்.

மலர் விழா ஏற்பாடு செய்த உதகமண்டல ஆட்சியாளர் ஜெயந்தி ஏக பிஸி! மலர்களிடையே மலராக வளைய வந்துகொண்டிருந்தார். ஒரு Royal grace, Royal beauty என்பார்களே அது ரொம்பத்தான் பொருந்துகிறது ஐ.ஏ.எஸ். ஜெயந்திக்கு!

உதகைக்கு அன்று மன்மதன் வந்திருந்தால் மலர்விழா வண்ண மலர்களில் எதைத் தன் பூவாளியில் தொடுப்பது என்ற யோசனையிலேயே மூழ்கியிருப்பான். **-பத்மஜா**

பட்டை தீட்டிய வைரங்கள்!

காடு

காடு!
குறிஞ்சியின் குழந்தை!
காடு!
முடி வெட்டிக்கொள்ளாத
மூத்த பூங்கா
காடு!
நிலங்களின் ஹிப்பி!
காடு!
தாவரங்களின்
சுயராச்சியம்!


1947 ஆகஸ்டு 15

அவன்
ஒரு
பட்டு வேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது—
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது!

சினிமா

வெள்ளித் திரையில்
இன்னும்
பல்லிகளையே
பார்த்துக் கொண்டிருப்பதா?
திரைப்படம்
இருட்டில் காட்டப்படுவதாய்
இருக்கட்டும்
ஆனால் — அது
வாழ்க்கையின் வெளிச்சத்தில்
எடுக்கப்படட்டும்!

வைரமுத்துவின் பட்டை தீட்டிய வைர மணிகளான புதுக் கவிதைகள் ''இன்னொரு தேசிய கீதம்'' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளன. கலைஞன் பதிப்பகம், சென்னை-17. விலை ரூ. 8. புத்தக வடிவமைப்பு: ஆதிமூலம்



ஞா		உடலுக்கும் எலும்புக்கும் நல்ல வளர்ச்சி
தி		சுத்தமான பிரகாசமான கண்கள்
செ		ஆரோக்கியமான அடர்த்தியான கேசம்
பு		வழவழப்பான இளமை பொருந்திய சருமம்
வி		உறுதியான வெண்மையான பற்கள்
வெ		குறைவான கொலஸ்டரால் லெவல்
ச		இருமல், ஜலதோஷம் மற்றும் கிருமிகளை எதிர்க்கும் சக்தி

உங்கள் குடும்பத்திற்கு வாரத்தின் ஏழு நாட்களும் 'ஸெவன் ஸீஸ்' கொடுங்கள்.



வைடமின் A மற்றும் D நிறைந்த காட்லிவர் ஆயில் எலும்பு மற்றும் உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது.

வைடமின் A உள்ள காட்லிவர் ஆயில் உங்கள் கேசத்தை அடர்த்தியாகவும் மினுமினுப்பாகவும், உங்கள் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், இளமை பொருந்தியதாகவும், உங்கள் கண்களை சுத்தமாகவும் பிரகாசமாகவும் ஆக்குகிறது.

காந்தியுள்ள இயற்கையான ஆரோக்கியத்தைப் பெற தினமும் ஸெவன்ஸீஸ் உட்கொள்ளுங்கள்.

98 நாடுகளில் பிரபலமடைந்த குடும்ப டானிக் 'ஸெவன் ஸீஸ்' உடல் ஆரோக்கியத்தை ஏழு விதங்களில் உருவாக்குகிறது - இயல்பாக.

CHAITRA-LAP-H TAM

10

''நீங்க யாருன்னு....''என்று முதியவன் சந்தேகத்துடன் வினவினன்.

அவர்களில் ஒருவன் வேட்டியை மடித்துக் கட்டினன். உள்ளிருந்த காக்கி அரை நிஜார் லேசாகத் தெரிந்தது. முதியவன் வெல வெலத்துப் போனன்.

''வாய்யா!'' — முதியவனின் கையைப் பிடித்து இழுத்தான்.

''விடுங்க. நானே வரேன். வேண்டா முங்க. இப்ப பிஸினஸ் நேரம். அங்கே போனு நல்லா இருக்காது.''

''ஆளு நீயா நினைச்சால் அங்கே போய்க் கலாட்டா செய்வேன்னு பயமுறுத்துவே இல்லே!'' இருவரில் முரட்டுத்தனமாகக் காட்சியளித்தவன் கேட்டான்.

''நானு? நான் எதுக்கு அவரைக் கலாட்டா செய்யணும்?''

''எதுக்கு? பணத்துக்குத் தான். இதோ இந்தப் பிள்ளையாண்டான்கிட்டே. இருந்துஇருபது ரூபாயை ஏமாத்தினது மாதிரி அவன் கிட்டே. ரெண்டாயிரம் வாங்குவே! நடய்யா!''

முதியவனுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது.

''ஐயா!''

''உண்மையைச் சொல்லிடு. அந்தப் பொண்ணை வச்சுத் தானே நீ பொழைக் கிறே?''

''இல்லிங்க.... வந்து....''

''பளார்....''

முரட்டுத்தோற்ற முடையவனின் கை முதியவனின் கன்னத்தில் பதிந்தது.

''ஆமாமுங்க!''

ராமநாராயணன் சிரித்தான். ''ஏன்யா கிழவா! நீ அந்த ஸேட் கிட்டே உம் பொண் முழுகாம இருக்கா. அதுக்கு அவன்தான் காரணம்னு சொல்லிப் பயமுறுத்தினியா இல் லேயா?''

''அவருதான் இங்கே அடிக்கடி வந்து போருரு.''

''அவரு மட்டும் தானு?''



''வந்து....''

முரட்டுத் தோற்றமுடையவனின் கை மீண்டும் ஓங்கியது. கிழவனுக்குப் பயம் அதிகரித்தது.

''இல்லீங்க. வாடிக்கையா இன்னும் சில பேர் வருவாங்க!''

''ம்... அப்படி வா வழிக்கு. அப்ப நீ ஏன் அந்த ஸேட்டோட குழந்தை அந்தப் பொண்ணு வவுத்துலே வளருதுன்னு சொன்னே?''

''ஸார்.....''..முரட்டுத் தோற்ற முடையவனின் இரும்புக்கரம் முதியவனின் இடதுகை மணிக்கட்டைத் திருப்பியது.

''கத்தாதே! கத்தினே விஷயமே வேறே ஆகிடும்.''

''இல்லீங்க! அவருக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யப் போறாங்கன்னு வேணி சொல்லிச்சு.. அதுக்குப் பிறகு அவரு வரமாட்டாருங்களே.''



''அதுக்காக மொத்தமா ஒரு தொகை கிடைக்கும்னு அவனே நீ பயமுறுத்தினியா?'' ராமநாராயணன் இடை மறித்தான்.

''ம்...'' கிழவன் மிடறு விழுங்கினான்.

''ஜாக்கிரதை! அந்தக் கடைப் பக்கம் வந்தே கையோ காலோ போயிடும். புரிஞ்சுதா. அந்தச் சின்ன ஸேட்டுக்கிட்டேஎவ்வளவு பணம் பிடுங்கித் தின்னிருப்பே? இனிமே அந்தப் பக்கம் உன் நிழல் கூடப் படக் கூடாது. பட்டதுன்னு நீ, வேணி எல்லாரும் ஒட்டு மொத்தமா கம்பி எண்ணனும் தெரிஞ்சுதா!''

''சரிங்க!.... ஏதோ நீங்களாவது சொல்லி இத்தனை நாள் பழக்கத்துக்காக ஏதாவது தொகை தரச் சொல்லுங்க...''

''ம்... யோசிப்போம்.''

''போலாம்யா...'' ராம்நாராயணன் புறப்பட்டு விட்டான். அவன் சகாக்கள் பின்தொடர்ந்தனர்.

அன்று இரவு அவர்கள் இருவருக்கும் தலா ஐம்பது ரூபாயும் கிழவனிடம் ஐம்பது ரூபாயும் கொடுத்துவிட்டு எண்ணூற்றைம்பது ரூபாயுடன் தன் எதிர்காலத் திட்டத்தை மனத்தில் தீட்டியபடி அவன் சிந்தாதிரிப் பேட்டையை நோக்கி நடந்தான்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கென சில நியதிகள் உள்ளன. ஒருவனைப் பலிகடா ஆக்குவதன் மூலமும் பலரைத் தன் காரிய வெற்றிக்காக உபயோகித்துக் கொள்வதினுமே வெற்றி கிடைக்குமென்றால் அதைச் செய்து தீரவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மாடியில் வசிக்க வேண்டுமென்றால் படிகளை மிதித்துத்தான் போகவேண்டும். வாழ்க்கையிலும் ஒரு உன்னத நிலைக்கு வரவேண்டுமென்றால் பல மனிதர்களை நாம் நம்முடைய படிகளாக உபயோகித்துக் கொள்ளத்தான் வேண்டும். அதுதான் லௌகீக வெற்றியின் அடிப்படைச் சூத்திரம்.

அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மறுநாள் அவன் சேட்ஜியின் கடைக்கு வேலைக்காகச் செல்லவில்லை.

பல் பொடி-வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டான்.

இவையெல்லாம் நடந்து முப்பத்தேழு ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்று இந்த ராம்நாராயணன் ஒரு லட்சாதிபதி. அவர் தமக்குள் சிரித்துக் கொண்டார்.

11

ராமநாராயணனின் மனைவி நீலா....... அவர் எதிரில் வந்து நின்று கொண்டாள். அவளுக்கு வயது ஐம்பத்திரண்டு இருக்கும். ஆனாலும் செல்வச் செழிப்பின் காரணமாக முதுமை தெரியவில்லை; பளிச்சென்று இருந்தாள்.

''என்ன நீலா?''

''என்னத்தைச் சொல்றதுன்னே எனக்குப் புரியல்லே. உங்க பிள்ளையாண்டான் ராத்திரி வீட்டுக்கு வரல்லியாம். மாதங்கி அழுதுண்டு இருக்கா. நேத்திக்கு அவளைச் சினிமாவுக்குக் கூட்டிண்டு போறேன்னு சொல்லியிருந்தானாம். விடிஞ்சும் ஆளைக் காணல்லே. நீங்க

ளாவது அவளை ஜாடை மாடையா கண்டிக்கக் கூடாதா?''

சில விநாடிகள் அவர் மௌனமாக இருந்தார். தொண்டையைச் செருமினார். வழக்கம் போலத் தம்முடைய வழுக்கைத் தலையைத் தடவி விட்டுக் கொண்டார். 'இதோ பார் நீலா! அவனுக்கும் வயசு முப்பத்திரண்டு ஆயிடுத்து. தோளுக்கு மிஞ்சினாத் தோழன்பா. ரெண்டு குழந்தைகளுக்கும் தகப்பனாயிட்டான். நான் இனிமே அவனைக் கண்டிக்கிறது நல்லா இருக்குமா? போகட்டும் விடு. தன்னால சரியாப் போயிடும்!''

''நீங்க அந்தக் கிறிஸ்துவப் பெண்ணுக்கு உங்க ஆபீஸிலேயே வேலை போட்டுக் கொடுத்தது தப்பு. அவ பேரு என்ன? கில்டாவா கோல்டாவா?''

''ஹில்டா ஜான்சன்!''

''அவளைத்தானே இவன் சுத்திண்டு இருக்கானாம். இது கொஞ்சம் கூட நல்லாயில்லே. சம்பந்தி அன்னிக்குவந்திருந்தார். ஜாடையா அவர்கூட இதைப் பத்திச் சொன்னார்.''

''சொல்லுவார்! அவர் பிள்ளையோட லட்சணம் எனக்குத் தெரியாதா? ஹோட்டல் ட்ரீம்லாண்ட்லே ரூம் போட்டுக் கும்மாளம் போடறான். கேட்டால் பிஸினஸ் பிரமோஷன் கான்டாக்ட்டும்பான். அவா அவாளுக்குத் தங்களோட முதுகிலே இருக்கிற அழுக்குத் தெரியறதில்லே. மத்தவாளைக் குறை சொல்ல வந்துடறு!''

''நீங்களே உங்கள் பிள்ளையைக் கெட்டுப் போகச் சொல்லுவேள் போலிருக்கே!''

''இதெல்லாம் ஒரு வயசிலே அப்படித்தான் இருக்கும். தன்னாலே எல்லாம் சரியாய்ப் போயிடும். எந்தப் பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளை ஒழுங்கா இருக்கான். இதோ பார் நீலாம்பா! புத்திக்கு வேலை தர்றவனுக்கு இந்த மாதிரி டைவர்ஷன் வேண்டியிருக்கு. பெண்டாட்டிக் கிட்டே ரொம்ப விசுவாசமா நடந்துக்கிறப்பலே நடிச்சிண்டு அவனவன் ஒரு கீப்பரை வச்சண்டுதான் இருக்கான். இதுக்கெல்லாம் கட்டுப்பாடு விதிக்க முடியுமா? இல்லே சட்ட திட்டம் பண்ண முடியுமா? ஒரு லெவல்லே இதெல்லாம் சகஜமா நடந்திண்டிருக்கு. அதனாலேயே இதுதான் சரின்னு நான் சொல்லல்லே. இந்த மாதிரி விஷயங்களைப் பெரிசு பண்ணாம இருக்கிறது நல்லதுங்கறேன்!''

''நல்லா இருக்குநீங்க சொல்றது?முதல்லே அந்தப் பொண்ணு ஹில்டாவை வேலையை விட்டு விட்டுக்கு அனுப்புங்கோ.''

''அனுப்பிச்சா செலவுதான் ஜாஸ்தியாகும். அவளை டிஸ்மிஸ் பண்ணிட்டா உன் பிள்ளை அவளைப் போய்ப் பார்க்கிறதை நிறுத்திடுவானோ? போடி பைத்தியம். விட்டுத் தள்ளு. நான் நாசூக்கா அவன் கிட்டே சொல்றேன்.''

நீலாம்பாள் கோபத்துடன் கேட்டாள்: ''நீங்க இப்படித்தான் இருந்தேளா? மாதங்கியை லவ் பண்ணித்தானே கல்யாணம் செஞ்சிண்டான் உங்க பிள்ளை. இப்போ எங்கே போச்சு அந்த லவ்? சூடு ஆறிப் போயிடுத்தா? புருஷாளுக்கே ஒரு பொம்மனாட்டி யௌவனமா இருந்தாத்தான் கவர்ச்சி ஏற்படறுப்பல இருக்கு. இன்னிக்கு ரெண்டு குழந்தைக்கு மாதங்கி தாயாயிட்டா. அதனால அவ பழசாப் போயிட்டாப்பல இருக்கு!''

ராம நாராயணன் சிரித்தார்.

''சிரியுங்கோ! நம்மவீட்டுக்கு வந்திருக்கிற பொண்ணு அங்கே மூக்கைச் சிந்திண்டிருக்கா. எனக்குப் பத்திண்டு வர்றது. நீங்க அவ்ளுட்டம் இருக்கச்சே இப்படித்தான் கெட்டு அலைஞ்சேளா?'' மோவாயை ஒரு திருப்புத் திருப்பிக் காட்டிவிட்டு நீலாம்பாள் போய்விட்டாள். அவர் நினைவு மீண்டும் பழைய விஷயங்களை அசை போட்டது.

பல்பொடி வியாபாரம் சுமாராகத்தான் நடந்தது. மென்தாலும் பிரெஞ்சாக் பவுடரும், கருவேலம்பட்டைப் பொடியும், தகர டப்பாக்களும், லேபிள்களும் அப்பப்பா! ஐம்பது அறுபது ரூபாய் லாபம் சம்பாதிக்கப் படாத பாடு பட வேண்டியிருந்தது. கடை கடையாக ஏறி இறங்கி வசூல் பண்ணுவது பெரும் பாடு!

தாயிடம் தான் சூளுரைத்து வந்தது ராம நாராயணனின் மனத்தினின்றும் நீங்கவேயில்லை. எப்படியும் வாழ்க்கையில் முன்னேறிவிட வேண்டும். தானும் காரும் பங்களாவும் டெலிபோனுமாக நான்கு பேர் மதிக்கப் பெரிய மனிதனாக வாழ வேண்டும். இந்தத் தணியாத ஆசையின் உந்துதல் அவனைத் தூக்கமின்றித் தவிக்க வைத்தது. வியாபாரத்தில் சரக்கின் தரம் மட்டும் நன்றாக இருந்து விட்டால் போதாது. மக்கள்மத்தியில் அதற்கு ஒரு பாபுலாரிடி ஏற்பட வேண்டும். அதற்கு விளம்பரம் செய்ய வேண்டும்.

தன் பற்பொடி வியாபாரத்துக்கு விளம்பரம் கொடுக்கச்சென்ற அவனுடைய வாழ்க்கையே திசைமாறும் என்றுஅவன் கருதவில்லை.

''நமஸ்காரம் ஸார்!'' குரல் கேட்டுப் பத்திரிகைச் சொந்தக்காரர் தலை நிமிர்ந்தார். தம் எதிரே வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''வேலை எதுவும் காலி இல்லேப்பா!''

''நான் வேலை தேடி வரல்லே ஸார், விளம்பரம் கொடுக்க வந்திருக்கேன்,''

''உட்காருங்க!''

சிறுவன்: அம்மா..! நானும் போய்க் கடலில் குளிக்கிறேன்..!''
தாய்: வேண்டாம் கண்ணு.. ரொம்ப ஆழமா இருக்கும்..!''
சிறுவன்: ''அப்பா மட்டும் குளிக்கிறார்..!''
தாய்: ''அவர் இன்சூர் பண்ணியிருக்காராம் கண்ணு..!''
-நாகுவேலன்



ராமநாராயணனுக்கு வியப்பாக இருந்தது. சற்று முன் ஒருமையில் பேசியவர் இப்போது மரியாதை தருகிறார். அது தனக்களிக்கப்பட்டதல்ல. விளம்பரத்துக்காகத் தான் செலுத்தப் போகும் பணத்துக்காக என்று அவனுக்குப் பட்டது.

''தாங்க்யூ! உங்க பத்திரிகையிலே அரைப் பக்கம் விளம்பரம் தரணும். என்ன சார்ஜ்?''

''பத்து ரூபாய்.''

அம்பது படி அரிசி வாங்கலாம். ஒரே ஒரு வாரத்துக்குள் எத்தனை பேர் கண்களில் அந்த விளம்பரம் தென்படும்?

'நான்கு வாரங்களுக்குத் தொடர்ந்து வெளியிட வேண்டுமானால் என்ன ஸார் சார்ஜ் பண்ணுவீங்க?''

''நாற்பது ரூபா!''

''சலுகை கிடையாதா?''

''சரி, ஒரு இரண்டரை ரூபாய் குறைக்கலாம்.''

''இல்லே ஸார். அதிகம் உங்க ரேட். நான்...... அந்தப் பத்திரிகையிலே விசாரிச்சேன். அவங்க கன்செஷன் தராங்க. ஆனா உங்க பத்திரிகையிலே வர்றதைத்தான் நான் விரும்பறேன். ஏன்னா நீங்க போடற விதம் நல்லா இருக்கு. எழுத்துக்கள் தெளிவா, பெர்சா, அழகா இருக்கு. கன்செஷன் தரணும் ஸார்.''

''சரி அஞ்சு ரூபா குறைச்சுக்கிறேன்.''

''நோ! பத்து ரூபா குறைக்கணும் ஸார்''

''கட்டுப்படியாகாது!''

''உங்க இஷ்டம்!'' அவன் எழுந்து புறப்பட்டான்.

''தம்பி!'' முதலாளி கூப்பிட்டார்.

''முப்பத்தி ரெண்டா இருக்கட்டும். வெளியிலே யாராவது கேட்டால் நாற்பதுன்னு சொல்லு.''

''சரி ஸார்!''

''மேட்டர் கொடுக்கும்போது பாதிப் பணம் கட்டிடணும்.''

''முழுசாக் கட்டிட்டால்!''

''என்னது? ஓகே! நீ கேட்ட முப்பதுக்கே போடறேன்!''

''ஓகே! இந்தாங்க மேட்டர். அவன் ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தான். சதுரம் போட்டு எழுதியிருந்தான். பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

''தம்பி! யார் கம்பெனி இது?''

''ஏன், என்னுடையதுதான் ஸார்!''

''நீ பிஸினஸ் பண்றியா?''

''ஆமாம்!''

''வெரி குட்! உன் போட்டோவை ப்ளாக் எடுத்துப் போடலாம். என்ன சொல்றே?''

''சரி! சாயந்திரம் நாலு மணிக்கு பாஸ் போர்ட் சைஸ் கொண்டு வந்து தர்றேன்!''

அடுத்த வாரம் விளம்பரம் வந்தது. பல்பொடி வியாபாரத்தில் முன்னேற்றம் இல்லை. நான்கு வார விளம்பரங்களுக்குப் பிறகு வெளியூர் ஆர்டர்கள் வந்தன. முன்பணம் செலுத்த எல்லோரும் முன்வரவில்லை. முன்பின் தெரியாத ஆர்டர்களுக்குச் சரக்கு அனுப்புவது என்பது சரியாகப் படவில்லை. ஒருசிலர் முன்பணம் அனுப்பியிருந்தனர். அவர்களுக்கு மட்டும் அனுப்பினான்.

ஆனால் அவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு உட்படாத ஒன்று நடந்தது.

அவனுடைய விளம்பரத்தின் மூலம் அவனுடைய போட்டோவைப் பார்த்து, விலாசத்தைக் குறித்து அவனுடைய அண்ணன் கடிதம் போட்டிருந்தான். அம்மாவுக்கு உடல் நலம் இல்லை என்பது தெரிந்தது. அம்மாவைப் பார்ப்பதற்காகவாவது தான் திருச்சி போக வேண்டிய கட்டாயம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் திருச்சியில் அவன் தங்கிய நான்கு நாட்களில் அவனுக்கு மற்றொரு முக்கியமான திருப்பம் ஏற்படும் என்று அவன் நினைக்கவே இல்லை.

எந்த ஹோட்டல் வாசலில் கிளீனர் மருது பாண்டியைச் சிநேகம் பிடித்து லாரியில் சென்னைக்கு வர இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் இரவு நேரத்தில் ஒரு நாள் நின்றானோ அதே ஹோட்டலில் அறை எடுத்துக் குளித்து, டிபன் சாப்பிட்டுவிட்டு ஸ்ரீரங்கத்துக்கு அண்ணன் வீட்டுக்குச் சென்றான் அவன். அம்மாவுக்கு ஒன்பது கஜம் புடவை, இரண்டு அண்ணன் குழந்தைகளுக்கு பிஸ்கோத்து, ஆப்பிள், திராட்சை என்று வாங்கிக் கொண்டான்.

வாசலில் வந்து நின்ற தம்பியைப் பார்த்ததும், அண்ணனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ராமநாராயணன் இப்போது நன்றாக வளர்ந்திருந்தான். இடது கையில் கடிகாரம், நல்ல உயர்ந்த ரகத் துணியில் பேண்டும், சட்டையும் அணிந்திருந்தான். அவன் அண்ணன் சுப்புராமன் வியந்து நோக்கினான். சுதாரித்துக் கொண்டு சொன்னான்: ''வா!.....''

மௌனமாக இருவரும் உள்ளே நுழைந்தனர். குழந்தைகள் எட்ட நின்று மிரட்சியுடன் பார்த்தன. அம்மா நார்க் கட்டில் ஒன்றில் படுத்திருந்தாள். ஆளரவம் கேட்டு மன்னி கூடத்துப் பக்கம் வந்தாள், அவள் கருத்தரித்திருந்தாள். முன்பிருந்த செழுமை இப்போது அவள் உடம்பில் இல்லை.

''அம்மா! ராமன் வந்திருக்கான்!'' என்றான் சுப்பு.

அம்மா கண் திறந்து பார்த்தாள்.

ராமநாராயணன் ஒன்றும் பேசவில்லை.

குழந்தைகளை அருகே வரும்படி சைகை காட்டினான். பழங்களையும் பிஸ்கோத்துப் பொட்டலத்தையும் நீட்டினான்.

''வாங்கிக்கோ!'' அம்மா சொன்னாள்.

''உங்க சித்தப்பா மெட்ராஸ்லேருந்து வந்திருக்கா!'' என்றாள்.


''அம்மாவுக்கு என்ன உடம்பு?''

''சாதாரணமாக் காய்ச்சல் வந்தது. ரெண்டு நாளிலே சரியாப் போயிடும்னு நினைச்சோம். போகல்லே. ரொம்ப அனிமிக்கா இருக்கிறதா டாக்டர் சொல்றார். ஒண்ணு விட்டு ஒரு நாள் விழுக்காடு பத்து ஊசி போடணுமாம்....''


அண்ணா சுப்பு பேசிக் கொண்டே போனான். இவனுக்கு அதில் கவனம் செல்லவில்லை. வழக்கமான பாட்டுத்தான். செலவுக்குப் பணம் இல்லை. அம்மாவைப் பிழைக்க வைக்க வேண்டுமென்றால் நூறு ரூபாயாவது வேண்டும்.

(தொடரும்)

அழகே உன்னை
ஆராதனை செய்கிறேன்
மலரே மலரே
ஆராதனை செய்கிறேன்



EP. OSIC-136 82





கனவுகள் ஜோராயிருக்கும்

லட்சுமி ராஜரத்தினம்

ஜன்னல் வழியே ஊசி ஊசியாக இறங்கும் மழைத் தூறல்கள் — ஆனந்தப் பண் பாடும் இடிகள் — ஒளிச் சிதறலை வெளியிடும் மின்னல்கள்—

ஒன்றுக்கும் அசையாமல் குழந்தை ராமு கட்டையாகக் கிடந்தான். மெல்ல ஜன்னலைச் சாத்தினாள் ஜானு. இந்தப் பயங்கர சப்தமாவது குழந்தையை நினைவுக்குக் கொண்டு வராதா? கண்ணீர் பொங்கக் குழந்தையின் பக்கமே பார்த்தாள்.

இந்த உலகத்துக்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? என்பது போல் கண்களை மூடிக்கொண்டு—

இனிமேல் கண்களைத் திறக்கத்தான் வேண்டுமா என்று யோசிப்பது போல்—

'ராமு கண்ணைத் திறடா' என்று ஓவென்று கத்த வேண்டும் போல் அடிவயிற்றைப் பிசைந்தது. புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டாள். மருத்துவ மனையில் அழக்கூடாது என்ற கட்டுப்பாடு. ஆனால் பாசம் வயிற்றைத் துடிக்க வைக்கும் கொடுமை!

முதல் நாள் பள்ளிக்கூடம் போன குழந்தை எங்கே விழுந்தான் என்று தெரியாமல் தலையில் பட்ட அடியில் ரத்தம் கொட்டக்கொட்ட அங்கே கொண்டு வந்தார்கள். பதறிப்போய் ஜானு ஓடி வந்தாள். இன்னும் குழந்தைக்கு நினைவு வரவில்லை.

இன்னும் கணவன் போன துக்கமே ஆறாமல் நின்றது. காதல் திருமணம் என்று இரு வீட்டாரும் ஒதுக்கி வைத்து விட்டார்கள். சாவு, வாழ்வு என்று எதற்குமே வரவில்லை. ஸ்கூட்டர் விபத்தில் மாண்ட ராகவனின் பிடி அவளை விட்டு நழுவியபோது — மகனின் கைதான் இனி சாசுவதம் என்று நம்பினாளே?

இதுவும் பொய்யாகி விடுமா?

முகத்தைச் சீராக்கிக் கொண்டு நிமிர்ந்த பொழுது நர்ஸ் பின்தொடர டாக்டர் வந்தார்.

"டாக்டர், குழந்தைக்கு இன்னும் நினைவு வரவே இல்லையே?"

குழந்தையின் மீதே பார்வை படிந்திருந்த டாக்டர் நரேன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ஓ... இவன் முதல் நாள் வந்த டாக்டர் இல்லை. அவர் நடுத்தர வயதினர். இவன் இளைஞன். அவளைப் பார்த்த நரேன் நர்ஸிடம் ஏதோ கேட்டான். அவள் பதில் சொன்னாள்.

"குழந்தைக்கு வயசென்ன?"

"அஞ்சு முடிஞ்சிருக்கு."

அவன் சார்ட் ஷீட்டை எடுத்துப் புரட்டினான். உதடுகள் இறுகின. அதைப் பார்த்து அவள் மனத்தில் ஓர் இடி இறங்கியது.

"டாக்டர், குழந்தைக்கு...."

அவன் அவளைப் பார்த்தான். "ஒண்ணுமில்லே... தைரியமாக இருங்க. நாங்களும் மனிதர்கள்தான். கடவுளை நம்பி வைத்தியம் செய்கிறோம். நல்ல காலம் சரியான சமயத்தில் வந்துட்டீங்க" என்றான் அவன்.

அந்தப் பதிலே சற்று நிம்மதியாக இருந்தது. அவன் சற்று உன்னிப்பாகக் குழந்தையைப் புரட்டிப் புரட்டிப் பரிசோதனை பண்ணினான். மருந்துச் சீட்டுக்களில் மருந்துகளை எழுதினான்.

"ராத்திரிக்குள் வாங்கிட்டு வந்துடுங்க. ராத்திரி இந்த ஊசி போடணும்."

அவள் சீட்டைப் பெற்றுக் கொண்டாள்.

"குழந்தைக்கு என்ன?"

"டிடர்னஸ்."

அவன் விலகித்துப் போனான்.

மழை விடவில்லை. சீட்டைப் பெற்றுக் கொண்டவள் அறைக்குள் நின்று கொண்டே இருந்தாள். சற்றுப் பின் தங்கிய நர்ஸைப் பெரிய டாக்டர் எங்கே என்று விசாரித்தாள்.

"அவர் ஊருக்குப் போயிருக்கார். இவர்தான் இன்னும் ஒருமாசம் போல வருவார்."

நெஞ்சில் இனம் ஊற்று ஒன்று மெல்லப் படர்ந்தது. டாக்டரின் மீது உள்ள நம்பிக்கையா அல்லது நரேன் அவள் இறந்துபோன கணவனின் சாயலில் இருந்ததினாலா? இழந்து விட்ட ஒன்றை மெல்லக் கைப்பற்றியது போல ஏன் ஓர் உணர்வு எழ வேண்டும்?

இரவு பத்து மணி. உணவை முடித்துக் கொண்டு வந்த நரேன் தன்னறையில் ஒரு புத்தகத்தில் மூழ்கி விட்டான். நிழல் சாயவே தலையை நிமிர்த்தியபோது ஜானகி அவன் முன்பு நின்றாள்.

"மருந்து வாங்கிட்டு வந்துட்டீங்களா?"

"இல்லே."



அவன் அதிர்ந்து போனான். "ஊசி போட வேண்டுமேம்மா" இளம் சினம் முகத்தில் சிறு செம்மையைக் கொடுத்தது.

அவள் மௌனமாக நின்றாள்.

"ஏம்மா, வாங்கல்லே?"

மெல்ல விசும்பிய ஜானகி "என்கிட்டே அவ்வளவு பணம் இல்லே" என்றாள் கேவலுடன்.

"இதை ஏன் என்கிட்ட முன்னாலேயே சொல்லல்லே? குழந்தையோட சீரியஸ்னெஸ் தெரியாது?"

"எப்படிச் சொல்றதுன்னு தெரியல்லே."

அடுத்த கணம் போனைச் சுழற்றினான். தெரிந்த மருந்துக் கடை ஒன்றுக்கு போனில் பேசி மருந்தை வரவழைத்தான். அவனுடைய பரபரப்பு மகனின் ஆபத்தை உணர்த்தியது.

"டாக்டர்!"

ஊசி போட்டுவிட்டு அறைக்கு வந்தவன் பின்னாலேயே அவள் வந்து அழைத்தாள்.

"என்னம்மா?" இந்தக் கனிவு அவளை அசைத்தது.

"மருந்து ரொம்ப விலை ஜாஸ்தி போல் இருக்கே? இந்தச் சங்கிலிதான் என்கிட்ட இருக்கு."

அவன் கண்களில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

"உங்க கிட்ட இல்லேன்னு நான் பணம் தரேன். சங்கிலியைப் போட்டுக்குங்க. எனக்கும் மனசு இருக்கு."

கண்களில் லேசான நீர்த் திவலை படிந்தது. இவன் தெய்வத்துக்குச் சமமானவனா? கை கூப்பினாள்.

அடுத்த சில தினங்கள் — அவன் வரவை அவள் ஆவலோடு எதிர்பார்த்தாள். குழந்தையைப் பரிசோதிக்கும்பொழுது முகத்தில் ஏற்படும் மாறுதல், இலேசான சிரிப்பு, பதற்றம் இல்லாத பேச்சு — அவனைப் பற்றி அவன் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

"வாழ்க்கையை இழந்திட்டா அப்படியே தான் இருக்கணுமா மேடம்?" என்று அவன் கேட்டபொழுது குழம்பித்தான் போனாள்.

இதற்கு என்ன பொருள்? உடலைச் சீராக்கும் இவர்கள் வாழ்க்கையையும் சீராக்க முன்வருவார்களா? சிந்தனை முற்றுப் பெறவில்லை. விடை தெரியாத கேள்வி. ஆனால் நரேன் வந்தால் ஏற்படும் பரபரப்பு — துடிப்பு வாழத் துடிக்கும் இள மனத்திற்குக் கற்பனை தாராளமாகவே கனவுகளைக் கொடுத்து விடுகிறதே!

"குழந்தைக்குக் குணமாகி விட்டது. நாளைக்கு அழைத்துப் போகலாம்" என்று அவன் சொன்னபோது — மகிழ்ச்சிக்குப் பதில் ஏமாற்றம்தான் ஏற்பட்டது. இவனைப் பார்க்காமல் இருக்க முடியுமா? நெஞ்சில் ஏக்கக் கசிவுகள் கசிந்தன.

"பில் என்ன ஆச்சுன்னு தெரிஞ்சா...." என்று இழுத்தாள்.

"நான் சரி பண்ணிக் கொடுத்திடறேன்" என்றான் நரேன்.

"என்னாலே சிரமம்...." என்று தழுதழுத்தவள், தலையைக் குனிந்து கொண்டாள்.

"நான் இங்கே வேலை பார்த்ததற்கு எனக்கு வரவேண்டிய பணத்தில் கொடுத்துக் கொள்கிறேன்."

நெஞ்சு நிறைந்த நன்றியைச் சுமந்து கொண்டு வீடு திரும்பினாள் ஜானகி. ராமு பழையபடி பள்ளிக்கூடம் போகத் தொடங்கினான். ஜானகி வேலைகளில் மூழ்கினாலும் புழுக்கத்திடையே வீசும் தென்றலாக நரேனை நினைத்துக் கொண்டாள். பெருமூச்சு நெஞ்சைப் பிளந்தது.

இப்படி ஒரு மறுமலர்ச்சியைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா? அக்கினியாகத் தகிக்கும் இளமையைத் தண்ணீர் விட்டு அணைக்க இது ஒன்றுதான் வழியா? ராமுவுக்கு இந்த ஏற்பாடு எப்படி? விரிசல் விழுந்த சுவரில் ஒட்டுப் போடும் சிமெண்ட்டாகத் தனியாக ராமு நிற்க நேரிடுமா?

ராமு பரபரப்பாகப் பள்ளியிலிருந்து ஓடி வந்தான்.

"மம்மி, மம்மி, உங்களுக்கு ஒரு நியூஸ் தெரியுமா?"

"என்னடா கண்ணு?"

"டாக்டர் நரேன் எங்க பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில்தான் இருக்கார். நான் இன்னிக்கு அவரைப் பார்த்தேன். என்னைக் கூப்பிட்டு விசாரித்தார்."

"என்ன கேட்டார்?"

"அம்மா சௌக்கியம்தானேன்னு கேட்டார்."

இந்தக் கேள்வியில் அவளுக்குத் தனியான அர்த்தம் தொனித்தது. தன்னை நரேன் ஞாபகம் வைத்திருக்கிறாரா?

"எனக்கு பிஸ்கட், கேக், மாம்பழம் எல்லாம் கொடுத்தார்."

மற்றதெல்லாம் ஜானகியின் காதில் விழவில்லை.

மறுநாள்பள்ளிக்கூடத்துக்குத்தன்னுடன் அம்மாவும் கிளம்பியது ராமுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நீ எதுக்கும்மா வரே?"

குழந்தையின் கேள்வியால் ஜானகி தடுமாறிப் போனாள். "உடம்பு சரியில்லாத போது நிறையப் பாடம் நடந்திருக்குமே அதைப் பற்றிக் கேட்கத்தான்" என்று சமாளித்தாள் ஜானகி.

நரேனின் வீட்டைக் கண்டு பிடிப்பது ஒன்றும் சிரமமாக இல்லை. போகும் பொழுதே காம்பவுண்ட் சுவரில் "டாக்டர் நரேன், எம். பி. பி. எஸ்" என்ற எழுத்துகளை அவள் கண்டு பிடித்து விட்டாள். இவ்வளவு சின்ன வயதில் பிரபலமானவரென்றால்? தன்னை விட நான்கைந்து வயது பெரியவனாக இருப்பானா? மனம் கம்ப்யூட்டர் ஆகியது.

அவனைக் கண்டதும் அவள் கண்கள் ஒளி பெற்றது போல அவளுக்குத்தோன்றியது.

"வாங்க ஜானகி" என்று வரவேற்றான்.

அவள் மெல்ல அறையைச் சுற்றிக் கண்களை ஓட்டினாள். அழகாகப் பளிச்சென்று இருந்தது.

"இரண்டு மூன்று நோயாளிகள்தான்... அனுப்பி விட்டு வருகிறேன்" — அந்தச் சுறுசுறுப்பும் இங்கிதமும் --

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்!



அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்

ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடிந்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

சுலபமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கி கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.




கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.



பலன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.

கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்



DC-G-74 TM

“மாறுவீர் நியூட்ரமுல் வீரராய்” மா மல்லர் தாராசிங் கூறுகிறார்.



திடவுடல் அமைத்திட
தித்திக்க ஒரு சொல்,
தீரர்தாரா வாயால்:
நியூட்ரமுல். அமுல்
படைப்பு. அத்தனையும்
சத்து: அமுல் ஆடைப்
பால். அருமையான
மால்ட். இன்றியமையாப்
புரதம். இன்னமுதக்
கோக்கோ.
வைட்டமின்கள். உலோக
தாதுக்கள். ஓகோ சுவை
விருந்து! விலையோ மிக
மலிவு—போர்ன்விடா
பூஸ்ட், மால்டோவா
எதனையும் விட!

விற்புருதல் விடுப்போர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த்-388 001

அவள் மாத இதழ் ஒன்றில் ஆழ்ந்தாள். அவன் சில கணங்களில் வந்து விட்டான்.

''என்னுடன் இங்கேயே டிபன் சாப்பிடலாம்'' — வற்புறுத்தலாக ஒலித்த குரல். மீற முடியவில்லை.

''வீட்டிலே சாப்பாடு செய்து வைத்திருக்கிறேன்.''

''பரவாயில்லே; என் கூட டிபன்தான் சாப்பிடுறீங்க.''

சமையற்காரர் உணவு மேஜை மீது இரண்டு தட்டுக்களில் டிபன் வைத்தார்.

''நேத்து ராமு வந்தான். ரொம்பக் க்ளெவர் ஃபெல்லோ'' என்று நரேன் சொன்ன பொழுது காரணமில்லாமல் புல்லரித்துப் போனாள் ஜானகி.

மழை வருவது போல வானம் மூட்டம் போட்டிருந்தது. ராமு விளையாடப் போய் விட்டான். ஜன்னலருகில் அமர்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானு. மழை வருமா? அவள் கவனத்தைத் திருப்புவது போல் அந்த வெள்ளை நிற பியட் வந்து நின்றது. கம்பீரமாக நரேன் இறங்கி வந்தான்.

அவள் பரபரப்பாகக் கதவைத் திறந்தாள். அவன் சுவாதீனமாக அவள் திகைப்பை ரசித்த வாறு உள்ளே வந்தான். அவள் சமாளித்துக் கொண்டு வரவேற்றாள்.

''ரொம்பத் திகைச்சுட்டீங்க இல்லே? என்னை எதிர்பார்க்கவில்லே. அப்படித்தானே?''

அவள் மெல்லியதாகச் சிரிப்பைச்சிந்தினாள். இவனுக்குத் துணிச்சல் அதிகமோ? உள்ளே சென்று ராமுவுக்காக வைத்திருந்த இனிப்பைத் தட்டில் நிறைத்துக் கொண்டு வந்து வைத்தாள்.

''நான் தித்திப்பான செய்தியைக்கொண்டு வந்திருக்கேன்னு தெரியுமா?'' என்றவன், இனிப்புத் துண்டை வாயில் போட்டுக்கொண்டான்.

ஒரே கணத்தில் என்னவோ எண்ணச் சிதறல்கள். காலைக் கீழே ஊன்ற முடியாத நடுக்கம். என்ன சொல்ல வந்திருக்கிறான்?

''எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது.'' அருகில் உள்ள தோல் பையிலிருந்து அழைப்பிதழை எடுத்து நீட்டினான்.

அவள் மௌனமாகப் பெற்றுக் கொண்டாள்.

''எனக்கு அதிகமா உறவுன்னு யாரும் இல்லே. உங்களைப் பார்த்தது முதல் எனக்கு இறந்துவிட்ட என் தங்கை ஞாபகம்தான் வருது. என் தங்கையா நினைக்கிறேன். — இந்தக் கல்யாணத்துக்கு நீங்க வரணும்.''

அவன் தெளிவாகச் சொல்லி விட்டான். அவனால் சொல்ல முடிந்தது. ஆனால் அவளால்? ஜன்னல் வழியே மூட்டம் கலைந்த வானம் தெரிந்தது. மழையைக் கொண்டு வருவது போன்ற பிரமையைக் கொடுத்தது. ஆனால் மழை வரவில்லை.

''அம்மா, என்னம்மா இப்படியே உட்கார்ந்திருக்கே? ''ராமு தோளைப் பிடித்து உலுக்கினான்.

''ஒண்ணுமில்லே ராமு. சில தினங்களாக ஒரே கனவைக் கண்டேன். ஆனா அது கனவு! பலிக்காதுனு — நினைவாகாதுனு புரிய இவ்வளவு நாள் ஆச்சு'' என்றாள் பெருமூச்சுடன்.

''அசட்டு அம்மா! கனவு நினைவாகுமா? கனவு காண்கிறவரைக்கும் தான் ஜோரா இருக்கும். இதுகூட உனக்குத் தெரியல்லையே!'' என்று சிரித்தான் ராமு.

எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் — ஒரு அனுபவம்!


முகவரி: கவிஞர் வி. து. இராமலிங்கம்
செம்மிய மங்கலம்
போளூர் வட்டம்
வ. ஆ. மாவட்டம் 606904


தகுதிகள்: இளங்கலை படித்துள்ளேன் 1976 ஆண்டு ஓவியம் அயர் லோவர் 1972 ஆண்டு டி.டி.சி. புடன் முடித்துள்ளேன்-1974 ஆண்டு. தனித்தகுதிச் சான்றுகள் 25 பெற்றுள்ளேன், வானொலியில் 7 முறை கவிமலர் வழங்கியுள்ளேன். நாடகம் சில படைத்துள்ளேன்.

வயது: 28

வேலைதேடி ஓடிவந்த
  காலை ஐய்யா — தேடி
விறகை ஒடிந்ததுஎன்
  காலும் ஐய்யா
காலை ரெண்டு வாங்கினாலும்
  போதுமய்யா பணம்
காலைத் தொட்டு ஓடிவந்து
  சேரும் ஐய்யா
காலை வாங்கும் பணம் கூட
  இல்லை ஐய்யா — எனக்கு
கவலை தீரும் வழியொன்றைக்
  காட்டுங் கையா!
ஆளை பார்த்து வேலைதரும்
  நிலையம் இல்லை — இது
ஆளைப் பார்த்து வேலைதரும்
  அரங்கமய்யா!
பதிவுசெய்ய வேண்டுமென்று
  வந்து விட்டால் — அதற்குப்
பாதிப்பொழுது வேண்டி
  உள்ளதய்யா!
புதுப்பிக்க வேண்டுமென
  வந்துவிட்டால் ஐயோ
பொழுதெல்லாம் போய்
  இரவும் ஆகுதய்யா
உள்ளத்து அழுக்குதனைப்
  போக்குதற்கு — மேல்
உருவத்தில் நீரிட்டுக்
  கழுவுதல் போல்
வேலை தேடித் தருகின்ற
  முயற்சியில்லை — ஆனால்
விளம்பரத்துப் பலகைகளோ
  கொஞ்சம் இல்லை.
தனிவேலை ஏதும்செய்ய
  வசதி இல்லை — இந்தத்
தரம்குறைந்த நிலையம் விட்டால்
  வழியும் இல்லை.
மணிக் கணக்கில் நிற்கின்ற
  நாங்கள் எல்லாம்
மனிதர்களாய்க் கண்களுக்குப்
  படவும் இல்லை.
கனிவாக பணிவாகப்
  பேசினாலும் — அவர்கள்
கடுகதுதான் பொரிதலைப் போல்
  பேசுகின்றார்.
பொறுமையாக என்றும்பேச
  மாட்டாரோ — எனக்கு
போட்டொரு வேலைதர
  மாட்டாரோ!




மணியன்
''ரெண்டு மாசத்துக்கொரு முறை 'டூர்' கௌம்பிடறே! பரீட்சையிலே பத்துக் கேள்விக்கு மேலே பதில் எழுத மாட்டேன்றே!''
ஜெயகாந்தன்
''பெரியவனானதும் என்னுடைய லட்சியம் என்னவென்று யோசிக்கும் வேளையில் நான் ஒரு பொதுவுடைமைவாதியாகவோ, அரசியல் வாதியாகவோ, இலக்கிய வாதியாகவோ, திரையுலக வாதியாகவோ, இலக்கிய சிந்தனை வாதியாகவோ....''
''இதுவரைக்கும் மத்தப் பிள்ளைகளுக்கு உதவி செய்து பெயர் வாங்குறதுலேயே உன்னை மறந்துட்டே. இப்பவாவது தனக்குன்னு படிக்க முயற்சி பண்றியே, சந்தோஷம்!''
''ஸ்கூல்லே சேர்ந்து நாலு வருஷமாகுது! இன்னும் சொந்தப் பேரைச் சொல்லாமே பராசக்தின்னு சொல்லிண்டு குழப்பறியே, ஏன்?''
பராசக்தி
''நீ ரொம்பப் புத்திசாலிப் பையன் தான். ஆறு ஒரு கேள்விக்குப் பதில் எழுதணும்னு ஐந்து பக்கத்துக்கு எழுதறியே ஏன்?''
பள்ளிக்கூடத்தி
இவர்கள்!
கருத்து: அ. குமார்



''இந்தப் பையன் யாருப்பா? புதுசா இருக்கு?''
''நம்ம ஸ்கூலிலே ஏற்கனவே இருந்த ஒரு பையனுக்குப் பதிலா வந் திருக்கிற 'ஆக்டிவ்' ஸ்டூடண்ட்.' சார்!''
ருப்பா இது? இவ்வளவு பெரிய இந்தச் சின்னக் ஸ்கூலிலே து?''
''ஏற்கெனவே ஐயராத்துப் பொண் ணுங்களுக்கு அதிகமா செல்லம் கொடுக் கிறேள்னு பேசறது போறுதா? நான் வேறே எதையாவது சொல்லி மாட்டிக் கணுமா?''
''எங்களைப்பார்த்து ஒண்ணுமே சொல் லலியே சார்!''
க ஸ்கூல்லே இருக்கிற பசங்க எல்லாம் அவங்கவங்க வீட்டுக் கதையை யெல்லாம் கேட் டுட்டாத்திருக்கியாமே.
'ஸ்கூலுக்கு ஒழுங்கா வர்றதிலேருந்து படிப்பதிலே எல்லாத்திலேயும் கெட்டிக் காரப் பையன்தான். பாராட்டலாம்னு ஆளே கிடைக்கிறதில்லே....''
''முதன்முதலா உனக்கும் சரித்திரப் பாடத்திலே பிடிப்பு ஏற்பட்டிருக்கிற தைப் பார்க்கச்சே உங்க அப்பா மாதிரியே நல்ல பேர் எடுக்க முயற்சி செய்வேன்னு தோணுது.''
இராஜேந்திரன்

ஆண்மைவல்லமை

வருஷம் முழுசாக வரும் வைகாசியோடு ஒன்றாகப் போகிறது. ரேவதி மகேஷ் விவாகம் ஜானவாச ரிசப்ஷனோடு நடந்தது. இந்தப் பதினொருமாத இடைவெளியில் ரேவதி பத்துத் தடவை தாயைப் பார்க்கத் தனியாக வந்து விட்டாள்.

முதல் தடவை கொஞ்சம் மலர்ச்சியோடு வந்தாள். அடுத்து நம்பிக்கையோடு. அதற்கடுத்து எப்படியும் முடிந்துவிடும்' என்கிறமாதிரி நம்பிக்கையோடு.

ஏழாவது மாசத்தில் தொடைபூராவும் தீத்தழும்போடு வந்தாள். எட்டாம் மாசம் பின் மண்டையில் கரித்தாள் கட்டோடு! ஒன்பதில் 'அம்மா, நான் அங்கே போக மாட்டேன். அவரைப் பார்க்க மாட்டேன். என்னைச் சித்ர வதைப்படுத்தறார். வலி தாங்கலேம்மா. ராத்திரி தூக்கம் வரமாட்டேங்கறது. பகல்ல சமையல் வேலை கூட பார்க்க முடியல.' என்ற புலம்பலோடு....

''தெய்வமே'' —விசாலாட்சி தியாக மாறி எரிந்தாள். பனியாகி விழியிரண்டில் கரைந்தாள்.

இன்றுவரை நிலை மாறக் காணோம்.

வழி தெரியக் காணோம்.

எங்கே போகப் பத்தாயிரத்துக்கு?

ஆபீஸில்....

''சார், எனக்கு எப்படியாவது ஹெல்ப் பண்ணுங்கோ சார். ப்ளீஸ். அக்கா கஷ்டம் சகிக்கலே சார்.''

சீஃப்அக்கவுண்ட்டண்ட் உருக்கத்தோடும்பொறுப் போடும் பதில் சொன்னார்.

''வினு அதிகப்பட்சம் இரண்டாயிரம் தரலாம். நீ பார்க்கிற மெஷினிஸ்ட் போஸ்ட்டுக்கு லோன் அதுக்கு மேலேதர ரெஸ்டிரிக்ஷன்ஸ் இடம் தரலே. மை பர்சனல் எஃபோர்ட்ஸ் உனக்கு அதிகபட்சம் ஓராயிரத்தை வாங்கித் தரும். சொச்சம் ஏழாயிரத்துக்கு ஐ கான்ட்... ஐ கான்ட் ஹெல்ப் யூ வினு.''

கவலையோடு வந்த அவன் விலை ஆன் செய்து வேலைக்குள் புகுந்தான்.

'விர்ர்ர்ர்ரி....ப்பிங்ங்ங்....சக்கரம் 2600 ஆர்.பி.எம். அசுரவேகத்தில்சுற்றி, உராய்ந்து இரும்பைக் கடித்துத் துப்பியது.


நடுவே உடம்பில் ரத்தச்சூடு அதிகமாக. ரேவதியின் கண்ணீர் முகம் முன்வந்து. முன்வந்து நிற்க, ரெத்தை தன் வசமாக்கிக் கொண்டது மயக்கம்.

துவண்டு, அசுரத்தில் ஓலமிட்டுச் சுழலும் வீலின் மேல் விழ, அது மார்புச் சதையை எலும்பு வரை பாய்ந்து கடித்துத் துப்பி விட்டது.

விடியலில் ரேவதி வந்து உசுப்பினாள்.

''உன்ற வந்து படு வினு. விடிஞ்சுடுத்து'' என்றாள்.

''நமக்கெல்லாம் விடியாதுக்கா' — சொல்லத் தோன்றிய கருத்தை அடக்கிக் கொண்டு மெல்ல நிமிர்ந்தான். மார்பு மருந்




தாராயோ...

ஆக் கட்டு விலகியிருந்தது. புன் விகாரமாய்த் தெரிந்தது. ரேவதி அடுத்த விநாடியே போலியாகி விழிநீர் சிந்தினாள்.

"அத்திம்பேர் வந்திருக்கார்."

''அத்திம்பேரா!....'' — ஆவல் மேலிட்டோடு ஏணியில் வேகமானாள் ரேவதி.

'இந்தப் பெண்கள்தான் எத்தனைபுரியாத புதிர்! நெருப்பிலிட்டு வாட்டினாலும் கோண்



இந்திரா சௌந்திரராஜன்

டவன் என்றால் குதூகலிக்கிறார்களே. இந்த மண்ணின் விசேஷமா இது?

நல்ல விடியலில் தெளிவில் அவனுள் சிந்தனை.

''வாங்கோன்னா... எப்ப வந்தேள். காப்பி போடட்டுமா?''

மகேஷ் மகிழ்வோடு சிரித்தான். 'இப்பத் தான் வந்தேன் ரேவதி. நீ காப்பி போட்டுக் கொண்டு வா....' என்றான்.

ரேவதிக்கு அந்த வாஞ்சையான பேச்சு அவளைச் சந்திர மண்டலத்துக்குள்ளேயே தள்ளின மாதிரி இருந்தது.

காப்பியோடு ரேவதி வந்தபோது. விசாலாட்சி தலை கவிழ்ந்திருந்தாள்.

'என்ன பேசியிருப்பார்கள்?' பல் துலக்கி விட்டுக் காப்பி குடிக்கவந்த வினு வெறுப் போடு மகேஷைப் பார்த்து. ''வாங்கோ அத்திம்பேர்'' என்றான்.

''சௌக்கியமா வினு....'' — மகேஷ்.

''உம்.''

''என்ன மார்ல கட்டு?''

''ஒர்க் பண்ணச்சே ஒரு ஆக்ஸிடெண்ட்.''

''கேர்ஃபுல்லா வொர்க் பண்ணனும். ஸேஃப்டி பர்ஸ்ட். வொர்க் நெக்ஸ்ட்தான். ஆக்ஸிடெண்ட் எல்லாம் ரிமார்க்.''

''வாஸ்தவம் தான். ஆக்ஸிடெண்ட் சமயத் துலே மார்புக்கு வெளில மட்டுமில்லாம மார்புக்கு உள்ளாற மனசிலேயும் நடந் துடறதே. அப்ப லீஃபும் ரிமார்க்தானே?''

''உன்ற போடா நீ....'' — விசாலாட்சி அவனது குத்தலான பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பார்த்தாள்.

''அவன் கெடக்கறான். விவரம் போறாது. நீங்க கவலைப்படாதீங்கோ. ரேவதியை நன்னா வச்சண்டாப் போறும். மிச்சத்தை உங்க விருப்பப்படியே செஞ்சுடுங்கோ. நான் ஆஸ்பத்திரிக்கு எப்ப வரணும்?''

''ரொம்ப சந்தோஷம் மாமி. நான் டாக்டரைக் கலந்துண்டு பதில் சொல் றேன். விஷயம் யாருக்கும் தெரிய வேண் டாம்.''

> ரவக்கிடங்குகளில் பிணப் பரிசோதனை செய்யும் பொழுது, மூளையின் அடிப் பாகத்திலிருக்கும் (வேர்க்கடலை அளவேயான)பிட்யூடரி சுரப்பியைச் சாமர்த்தியமாக எடுத்து, பத்து ரூபாய்க்கு விற்று விடுகிறார்களாம் டாக்டர்கள். பம்பாய் பொது மருத்துவ மனைகளில் இது சர்வ சாதாரணமாக நிகழ்கிறது. ஒரு நாளைக்கு ஜே. ஜே. ஆஸ்பத்திரி யில் மட்டும் ஐம்பதுக்கு மேற்பட்ட போஸ்ட்மார்ட் டம்கள் செய்யப்படுகின்றன. இதை ஹார்மோன் கள் தயாரிக்கும் லாபரேட்ரிகள் வாங்கி, ஒரு எம். எல். பாட்டில் ஹார்மோனுக்கு 200ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விலை வைத்து விற்கின்றன வாம்!
>
> கருப்பையில் சிசு வளரும்போது தேவைப்படும் ஊட்டத்தைக் கொடுக்கும்'ப்ளேசண்டா'என்னும் பகுதியை,பிரசவமானதும் சாதாரணமாய் மருத் துவர்கள் அழித்துவிடுவார்கள். ஆணுக்கருத்தரிக் கவும், கரு வளர்ச்சிக்கும் இதிலிருந்து ஒருவகை ஹார்மோன் தயாரிக்கிறவர்களுக்கு, 'ப்ளே சண்டா'வையும் இந்த டாக்டர்கள் விற்றுவிடுகி றார்களாம்! இதற்கு நர்சுகள், ஆயாக்கள், வார்டு பாய் யாவரும் உடந்தையாய் இருக்கிறார்கள்.
>
> 'சண்டே அப்சர்வரிலிருந்து – சாருகேசி

''என் வாயாலே வெளியே வராது.''

''அது போதும் எனக்கு.''

—அன்று மதியமே ரேவதியை நாமக்கல் அழைத்துப் போனான் மகேஷ். வாசல் வரை வந்து அனுப்பி வைத்த வினுவுக்கு ஒன்றும் புரியவில்லை.

'எப்படி இந்தப் பணப் பேய் மாறியது?'

சிறகு முளைத்து மனசின் மாடங்களில் பறந்து வந்து பறந்து வந்து அமர்ந்த வினாக் களுக்கு விடை மாதிரி கிடைத்தாள் விசா லாட்சி.

''வினு, இனி நீ மாசா மாசம் சம்பளத் திலே 200 ரூபாய் வரதட்சிணைப்பாக்கிக்காக எம். ஓ. செய்ய வேண்டாம். அதுக்கு அவ சியமில்லை.''

வினு திகைத்தான்! டாக்டரிடம்போய்க் கட்டுப் போட்டுக்கொண்டு திரும்பினவனுக்கு வியர்த்தது. வீடு தாளிடப்பட்டிருந்தது. பக் கத்து வீட்டு மாமி சாவியோடு எதிர்ப்பட் டாள்.

''பரவாயில்லே. மாப்ளே பித்தளையா இருந்தவர் தங்கமா மாறிட்டார் போல இருக்கே. இப்பத்தான் உங்கம்மாவை டாக் ஸியிலே கூட்டிண்டு போறார்.''

''எங்கே?''

''உனக்குத் தெரியாதா? ஆச்சரியமா இருக்கே? மாப்ளேயோட அம்மா ரொம்ப முடியாமல் இருக்காளாம். பார்க்கத்தான்.''

''அவர் பம்பாயிலல்ல இருக்கார்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங் கம்மா போய் லெட்டர் போடறேன்னாள். என்னஇது உனக்கு ஒண்ணுமே தெரியாதா?''

—அதற்கு மேல் பின்னப்பட வினு தயா ராகாமல் குழம்ப ஆரம்பித்தான். மார்பின் உள்ளிலும், வெளியிலும் மன உழற்சியால் உடல் படபடப்பால்வலிபெருக ஆரம்பித்தது.

நாமக்கல் போகலாமா?

போனான்.

''அக்கா!''

—ரேவதி அவன் எதிர்பாராத வருகை பார்த்து ஆச்சரியப்பட்டாள். சந்தோஷ மாய் இருந்தாள்.

''உன் புருஷன் அம்மாவைத் தான் கூட் டிண்டு போயிருக்கார். எதுக்கு? அவர் அம்மா வுக்கு உடம்பு முடியலையாமே?''

''ரொம்ப நாளாவே அவர் அம்மா பாம் பேல உடம்பு முடியாமன்னு இருக்கார்.''

''என்ன உடம்புக்கு?''


''கிட்னி ப்ராப்ளம்! இவர் அண்ணாதான் அவரைத் தன் பராமரிப்புல வெச்சண்டிருக் கார். ஏன் இப்படிப் படபடப்பு என்ன நடந்தது?''

அவன் விவரித்தான்.

பின் இருவருமாய்க் கொஞ்சம் குழம்பி; ''என் மாமியாருக்கு அம்மாவைப் பார்க்கத் தோணிருக்கும். அதான் கூட்டிண்டு போயிருப் பார். ஆனா என்னண்டை சொல்லவேயில் லையே....'' என்று வருத்தத்தோடு சமா தானப்பட்டு. அதில் மர்மப் போக்கு ஏன்? என்ற கேள்விக்கு வந்து....

மாலை வேளையில் மகேஷ் வீடு திரும்பினான்.

''எங்கேன்னா போயிருந்தேள்? சேலம் போய் அம்மாவைக் கூட்டிண்டு போனே



கல்கி காரியாலயத்தைச் சேர்ந்த மதுரை ஸ்ரீ V. விஸ்வநாதன் அவர்களின் சிமந்த புத்திரி சௌபாக்கியவதி **ஹேமாமஹேஸ்வரிக்கும்** (Foster Daughter of Late Sri T. Ranganathan, Sundaram Motors, Madras) கோவாலம்பூர் திரு N. வெங்கடாஜலம் அவர்களின் சிமந்த புத்திரன் சிரஞ்சீவி V. **நாராயணனுக்கும்** (Field officer, Groosell Pharmaceuticals, Madurai) *13-5-82* அன்று மதுரையில் திருமணம் விமரிசையாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்

ளாமே? அம்மா எங்கே இப்போ? உங்கம்மாவுக்கு ரொம்ப முடியலேயாமே. என்னண்டை கூட சொல்லலேயே நீங்க...''

கேள்விப் பந்துகளை அடுத்தடுத்து அடித்து மகேஷை அயர்த்தினாள் ரேவதி. அத்தனை துடிப்பு. அத்தனை எதிர்பார்ப்பு. வினு விரைப்பாய் இருந்தான்.

''வா, வினு. என்ன திடீர்னு....''

''எல்லாம் திடீர்னுதானே நடக்கிறது.''

''அட நீ வேற... எங்கம்மாவுக்கு ஒடம்பு முடியல்லேங்கறதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே. ஒத்தாசைக்கு ஒருத்தர் இருந்தாத் தேவலேன்னு அண்ணா தந்தி அடிச்சிருந்தார். அதான் உங்க அம்மாவை பம்பாய் அனுப்பிட்டு வரேன்.....''

''எங்கம்மா என்ன நீங்க அனுப்பற வேலைக்காரியா?''

''நம்ப மனுஷா நன்னாப் பார்த்துப்பாளுதான். நீ என்ன தப்பா அர்த்தம் பண்ணிக்கிறே....''

''அப்போ அதை வெளிப்படையா சொல்லிட்டுச் செஞ்சிருக்கலாமே....''

''அவசரம்தான்.''

''அவசரமில்லே. தில்லுமுல்லு. எங்கம்மாவை வேலைக்காரியாக்கி அனுப்பிருக்கேள். வரதட்சிணை வரதட்சிணைன்னு பணஜெபம் பண்ணிண்டிருந்த ஆள் திடீர்னு கொழையக் காரணம் இப்பத்தான் புரியறது. வரதட்சிணை பாக்கியா நான் அனுப்பற இருநூறு ரூபா போறலேன்னுச் சொல்லுங்கோ. என் சம்பளம் முழுசையும் அனுப்பித் தரேன். என் அம்மாவேற உழைச்சுஅதை அடைக்கக் கஷ்டப்பட வேண்டாம்.''

ரேவதி இடைவெட்டினாள். ''வினு அதிகம் பேசாதே. அம்மா உபகாரத்துக்குப் போரு. அந்த மட்டில சந்தோஷப்பட்டுக்கோ. நாம்பளே எதுக்கு வேலைக்காரி கூலிக்காரின்னு சொல்லிப் பேசணும்.''

—புதிய இன்ப வாழ்வின் போதையில் மகேஷை மறுபடியும் இழந்துவிடக் கூடாதே என்னும் வெறியுமாக ரேவதி பேசினாள்.

'அக்கா... அன்புள்ள அக்கா... ஏமாறப் போற அக்கா... இவன் மனுஷனில்லே அக்கா. காரியக்காரன். சந்தர்ப்பவாதி.''

நரம்பு புடைக்கக் கத்தத் தோன்றி சலிப்போடு அடங்கியவன், சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டான்.

பம்பாய் ஜெஸ்லோக்ஸ் முன் தேடும் விழியும் தவிப்பு மனசுமாய் நின்று கொண்டிருந்தான் வினு.

அந்த மருத்துவ மனைக்குள் வார்டு வார்டாய்ச் சுற்றிக் கடைசியில் அபிராமிக்குப் பக்கத்திலேயே விசாலாட்சியும் அபிராமி மாதிரியே கிடந்தாள்.

''அம்மா....''

—அடிவயிறு அப்படியே சுருங்கிக் கலங்கியது வினுவுக்கு.

''என்னாச்சம்மா உனக்கு? நீ ஏன் இப்படிப் படுத்திருக்கே?... நீ ஏன் படுத்திருக்கே?''

''ஹூ ஆர் யூ? தும் கோன் ஹை?''—என்று மகேஷின் அண்ணா கேட்டான். வினுவுக்கு முழு விவரம் கிட்டியது.

பழுதடைந்த சிறுநீரகத்தில் பரலோகம் போயிருக்க வேண்டிய அபிராமி விலைமதிப்பற்ற புதிய மாற்றுச் சிறுநீரகம் கிட்டிய நிலையில் ஜீவ மூச்சு விட்டுக் கொண்டிருக்கப் பக்கத்தில் அதனை அவளுக்குத் தானமாய்க் கொடுத்த விசாலாட்சி படுத்திருந்தாள்?

பத்து மாதம் சுமப்பது பெண்ணாய் இருந்து விட்டால் சுமை வருத்தம் மட்டுமில்லை சுமக்கும் உடம்பையே கூட சில சமயங்களில் கூறு போட்டுக்கொடுக்க வேண்டி வரும்எனும் புதிய நியதிக்குள் புகுந்தவளாய்ப் படுத்திருந்தாள்.

அஷ்ட லட்சுமியர் சமேத ஸ்ரீமன் நாராயணனை, ஆண் பாதி, பெண் பாதி அர்த்தநாரியை, வள்ளி தெய்வானையை அணைந்த முருகனை, ராதா கிருஷ்ணனை, ராமன் சீதாவை.....

அடைபட்ட கண்ணாடிச் சட்டங்களுக்குள் பார்த்துப் பார்த்துக் கண்ணீரைக் கரைத்து பார இதயத்தோடுவிட்டுக் கொண்டிருந்த ரேவதி என்ன நினைத்தாளோ, சட்டென்று இயல்பான நிலையை அடைந்தாள். திருமாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். சிமிழ் குங்குமம் நெற்றிக்கு வந்தது.

பூஜை அறையை விட்டு வெளியே வந்தாள். மகேஷ் 'ஹிந்து'பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''மிஸ்டர் மகேஷ்!''

தீர்க்கமான ரேவதியின் குரலால் அதிர்ந்து நின்றான்.

''உங்ககூட வசிக்கவும் வாழவும் என்னாலே முடியாது சார். என் வழியே போறதுன்னு முடிவெடுத்திருக்கேன். என்னைப் பத்தின நினைப்புக்கூட இனி உங்களுக்கு வேண்டாம். மீறி நினைச்சா கவலை யில்லே. ஆனா நான் உங்களை மறக்கத் தயாரில்லே. அப்பத்தான் என் மாதிரி நிறையப் பேரை என்னால காப்பாத்த முடியும். எனக்கு ஒரு உயர்ந்த வெறுப்பைக் கொடுத்திருக்கிற உங்களைஎவ்வளவு பாராட்டினாலும் தகும்.

''இந்தப்பொறுப்பை நான் சீர்மையாசெய்யற வல்லமையைத் தெய்வங்கள் தரும்னு நம்பறேன். 'தா'ன்னும் கேக்கப் போறேன்.

''தங்கம் இரும்புதான் மார்க்கெட்டுக்கு வந்திருக்கு.வியாபாரமாயிருக்கு.அதிகபட்சம் பெண்ணோட கற்பு வியாபாரமாயிருக்கு. உங்களால இப்போ உறவு முறைகள், சொந்த பந்தங்கள் எல்லாமே இப்போ மார்க்கெட்டுக்கு வந்தாச்சு. இனி என்ன?

'மானுஷ மேவ ஜெயதே!....
மானுஷ மேவ ஜெயதே!....''

—பஸ் ஸ்டாண்டில் வினு காத்திருந்தான். அக்காவைப் பாசப் பெருக்கோடு கண்ணீர் மல்க அணைத்துத் தேம்பினான்.

''அழாதே வினு. பத்தாம் பசலி அம்மாவைச் சமாதானப்படுத்தற வேலை இன்னும் பாக்கி இருக்கு....'' என்றாள் ரேவதி. கையோடு, ''எங்க சொல்லு பார்ப்போம்... ''மானுஷ மேவ ஜெயதே'' என்றாள்.

சொன்னான் ''மானுஷ மேவ ஜெயதே''
சொல்வோம்: ''மானுஷ மேவ ஜெயதே''


ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெய்
15, 4 கிலோ டின்களிலும் 1 Litre 500, 200 ml பாலிதீன் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
: ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
RUDHUNAGAR.Phone : 3107, 3745.

குணங்குடி கொண்டது!

கீரன்

“ஓடியலைந்து. இவ்வையகம் முற்றும் சுழன்று தேடிச் சேர்த்தேன் திரவியத்தை. பொருள் குடி கொண்டது. நாடி எடுக்க வேண்டியது பொருளன்று; அருள் என்று நெஞ்சில் ஆசைகளை வாடி மிறக்கச் செய்தேன். உன் அருளால் குணங்குடி கொண்டது.”

“என் பேதை மனம் பெண்ணாசை என்கிற பேய் வயப்பட்டு ஆடியது. பலன், கண்ணுக்குத் தெரிய, விளைவு பல ஆயின. எண்ணாத பாவங்கள் எண்ணியே செய்யும் சிந்தனையை மண்ணாகச் செய்தேன். குணங்குடி கொண்டது.”

“உலகியல் வாழ்வில் ஒரு உயர்வு பெறும் எண்ணத்தில் அங்கும் இங்குமாய் அலைந்தேன். தேடுவதே தொழில் என்ற கூட்டத்தில் ஒருவனாய்க் கூடியிருந்ததன்றி வேறில்லை. உண்மையாய் உன்னை நான் எண்ணினேன். குணங்குடி கொண்டது.”

“மண்ணில் தெரியும் பொருள்களைக் கையால் எடுப்பதில் என்னவோ பெருமை என்று எண்ணி யிருந்தேன். கரம் இரண்டை உயர்த்தி. ‘ஆதி முகம்மது! அருளார் முகம்மது! தூய உள்ளத்து முகம்மது’ என்று உண்மையைக் கூவி உரக்கக் கதறினேன். குணங்குடி கொண்டது.”

“விண்ணையும் மண்ணையும் வேறுள்ள பொருள்களையும் நீ படைத்தாய்! அந்த உண்மை புரியவே எனக்குப் பல நாட்கள் ஆயின. சொல்லாமல் சொல்லும் கருதியினைக் கற்றேன். வல்லான் நீ என்று உணர்ந்தேன். குணங் குடிகொண்டது.”

“உற்றாரும் மற்றாரும் எனக்குப் பொருள் வேண்டும்போது உதவினர். உண்மையே. அருள் வேண்டி உள்ளம் அலைந்தபோது உன்னைக் கற்றாரைக் கற்றேன். குணம் குடிகொண்டது.”

“தஞ்சம் வேண்டுவோர் உன்னிடம் வருவர்; அதனால் உன் ஊர் தஞ்சாவூர். எண் சாண் உயரம் இருக்கும் பனை மரம் நான். எப்படியோ உயரத்திருக்கும் பஞ்சாக்கரம் என்னும் கள்ளினை அருந்தினேன். தஞ்சாவூர் இருக்கும் உன் பதம் பெற்றேன். குணங்குடி கொண்டது.”

“மூலமாயிருக்கும் முகம்மதுவே! மௌன நிலையாய் இருக்கிற பாலம் நீ! பக்தி உடையார்க்கு மூல விளக்குக் காட்டி இருளிலிருந்து ஒளிக்கு வரச் செய்கிறாய்! என் மனம் இதையுணர்ந்து கொண்டது!

“மனமே! நாளைக்கு இருந்திடலாம் என்று எண்ணி நம்பக் கூடாதவற்றை நம்பிக்கொண்டிராதே! நானிலத்தில் முகம்மதுவையெண்ணி, நாளைக்கும் அடுத்த நாளைக்கும் குணங்குடியாய்க் கொண்டு வாழ்ந்திடலாம்!”

“குணங்குடியில் தங்கிவிட்டால் உற்றார் அழாமல், உறவு முறையார் இட்டாமல், பெற்றார் பிறந்தார் பிதற்றாமல் எத்தாலும் அங்கு இங்கு எனாதபடி யாரும் போற்றும் பெரு வாழ்வை நடத்தலாம்!”

“மனமே! உன்னையும் கட்டிக் கொண்டு அழுகிறேன். நீண்ட ஆண் பனை போலும், நெல் பதர் போலும் இவ்வுலகில் நான் வாழ்கிறேன். மனமே! நீ வேறு குடியை எண்ணாது குணங்குடியை மேற்கொள்!”

“மனமே! ஆண்டவன் ஆதி முதலே அகண்ட பரிபூரணம் என்று ஓதும் குணங்குடி கொண்டவன். அவன் வற்றாச் சமுத்திரத்தில் ஒரு திட்டு. பேச்சுக்கடங்காத பேரின்பம்; காய்ச்சி வடித்த கருணை; அந்தரத்தில் ஆடி நம் சிந்தனையைச் சரி செய்யும் சித்தன். மண்பட்ட நெஞ்ச மயக்கங்கள் தீர்க்கின்ற பண்பட்ட நல்ல சற்குரு; முத்தி தரும் வேதமொழி வழி நடக்கச் சித்தி தரும் செம்மலே! வஞ்சம் அழிப்பான்; வருபாசம் விட்டொழிய நெஞ்சத்தே வந்து தங்கும் நிமலன்.”

“மனமே!போகாக் கவலைகளால் புழுக்கம் உற்று நிற்கிறாய். உனக்கு வாகாய் அருள் புரிய ஆண்டவன் வரவைப் பார். பக்தி என்னும் காதல் தரும் கண்ணீரால் நெஞ்சத்து சூது என்னும் தூசினைப் போக்கு.”


“மனமே கற்றபடி நடக்கக் கல்லா திருப்பவனே! பேச்சைக் குறை; பிரக்ஞை எல்லாம் அவனே என்று நிஷ்டை செய்; சித்தம் தெளிய அருள் செய்வான்.” மனமே! தாயிருக்கப் பிள்ளை தளருமோ! வாடாப்பூ இறைவன் இருக்க என்ன பயம்!”

இஸ்லாமிய சமூகம் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளைப் பலரும் அறிவர். மஸ்தான் சாயபு தம் ஊராகிய குணங்குடியை உள்ளத்துக்கு ஏற்றிக் குணங்குடியாகக் கொள்ள வேண்டும் என்று உபதேசித்து, “முகையதீன் சதகம்” பாடியுள்ளார்.

“தவம்பெற வேண்டுமெனல்” என்ற அதிகாரத் தலைப்பின் கீழ் தம் உள்ளத்துக்கு நல் வழி காட்டுகிறார்.

“ஆருக்கு வந்த விருந்து
என்றில்லாமல் அருமையுள்ள
பேருக்கு வந்ததெனவே
நினைந்து பிரியமுற்று
ஊர் ஊருக்கு அமைந்ததோர்
அன்னங்கள் உண்டென்றும் உரையாய்
பாருக்குள் நல்ல குணங்குடியாய்ப்
பள்ளி கொண்டிடுமே!


இலக்கியத்தில் இறையுணர்வு:



சாதாரண தேங்காய் எண்ணெயைக் காட்டிலும் உங்கள் கூந்தல் வளர்ச்சிக்குகந்தது எது?

கேசவர்த்தினி

கலந்த தேங்காய் எண்ணெ!



ஆம்! நீங்கள் அன்றாடம் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயுடன் சிறிது (சில சொட்டுகள்) கேசவர்த்தினி கலந்து தலையில் தடவிக்கொள்ளுங்கள். உங்கள் கூந்தல் எழில் மிளிர காண்பீர்கள்.

அழகிய அடர்த்தியான கூந்தலின் பரம்பரை ரகசியம் — கேசவர்த்தினி. ஒரு பாட்டில் இன்றே வாங்குங்கள்.



கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்
சென்னை-600 087

OBM 6119 TM

இதோ ஒரு கிராமம்:



முத்தாரம்மன் ஆலயம்

ஒற்றுமையுடன் சாதனைகள் செய்கிறோம்!

திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியாகிய வள்ளியூர் வட்டாரத்தில் அமைந்துள்ள சிவசுப்பிரமணியபுரம் என்னும் சிறந்த பெயரைக் கொண்டதுதான் இக் கட்டுரையில் நாம் காணும் எமது கிராமமாகும்.

உழவனுக்கு உயிர் கொடுக்கும் மழையை நம்பி, அச்சத்துடன் வேளாண்மைத்தொழிலை மேற்கொண்டு வாழ்கிற சுமார் 250 குடும்பங்களைக் கொண்டது எமது ஊர். நாடார் சமூகத்தினரும், தொழிலின் பொருட்டுக் குடி புகுந்துள்ள சவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் முதலிய வகுப்பினரும், இந்துக்கள், கிறிஸ்தவர் என்ற இரு மதத்தினைச் சார்ந்திருப்பினும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையின் சிகரமாகவே திகழ்கின்றனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு சாலை வசதி இன்றி, கள்ளிச் செடிகள் இடையே அமைந்திருந்த பாட்டைகளின் வழியாகச் செல்ல வேண்டியிருக்கும். அதே போல மின்சார வசதி இன்றி எண்ணெய் விளக்குகள் தான் பயன்பட்டன. இப்போது ஓரளவு நிலைமை மாறியிருக்கிறது. ஐக்கிய பாரதி விவசாய சங்கம் எனும் சங்கத்தை ஸ்தாபித்து அதன் ஒன்றுபட்ட செயல் மூலம் குறைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து நாளடைவில் சாலைகள் அமைத்தும், மின் வசதி பெற்றும், பேருந்து போக்குவரத்து சிறிதளவு ஏற்படுத்தியும் முன்னேற்றம் கண்டனர்.

நெல், சோளம், மிளகு வத்தல், பயறு வகைகள் இங்கு பயிரிடப்படும் சாகுபடிப் பயிர்கள். குளங்களில் நீர் இல்லாத காலங்களில் 50 முதல் 60 அடி ஆழமாக வெட்டப்பட்டுள்ள கிணறுகளின் பாசனம்தான் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் அதற்குத் தகுந்த மின்சார விநியோகம் இல்லை என்பது வருத்தத்துக்குரியது.

எமது ஊரை வலம் வருகின்ற 'அனுமன் நதி' மழைநீரை ஒன்றுசேர்த்துக் கொணர்ந்து பாசனக் குளங்களை நிரப்புவதோடு அதிக வெள்ளத்தால் இடையூறு நேரா வண்ணம் கடலில் கொண்டு சேர்க்கிறது. பாலம் வசதி இல்லாததால் அதிக மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் போக்குவரத்தே ஒரு வார காலத்துக்குத் தடைப்பட்டு விடும்.

இங்கு நடுநிலைப் பள்ளிவரை கல்வி வசதி உள்ளது. உயர் நிலைப் பள்ளிக்கு 4 கி. மீ. தூரத்தில் உள்ள வடக்கன் குளத்துக்குச் செல்கின்றோம். அடிப்படைத் தகுதியாக 5-ஆம் வகுப்பு வரை படித்தவர்களும் 11ம் வகுப்பு முடித்தவர்களும் 25 சதமும் இளங்கலைப் பட்டதாரிகளும் 2 முதுநிலைப் பட்டதாரிகளும் சில ஆசிரியர்களும் உருவாகி இருக்கின்றனர்.

மருத்துவ வசதி இல்லாத நிலைதான் வருந்தற்குரியது. அவசர கேஸ்களுக்கு இரவு பகல் என்று பாராது 4 கி. மீ. தூரத்தைக் கடந்து சென்றால்தான் மருத்துவரை அணுகமுடியும்.

கடவுள்நம்பிக்கையிலும் பக்தியிலும் சிறந்த ஈடுபாடுள்ளவர்கள் என்பதற்குச் சான்றாகவும் ஒரு சிறிய கிராம மக்களின் சாதனையாகவும் எம் ஊரில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ முத்தாரம்மன் ஆலயத்தை சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து நவீன சிற்ப கலைகளைச் சித்திரிக்கும் வகையில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கட்டி முடித்து விழா நடத்தப்பட்டது. ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதங்களில் கொடை விழா நடத்துகிறார்கள்.

குடிசைத் தொழிலாக மகளிர் மத்தியில் பீடி சுற்றும் தொழில் பரவலாக நடைபெறுகின்றது. மேலும் சிறு தொழில் துறையில் முன்னேற்றம் காண ''சிவகாமி மாதர் மன்றம்'' என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் வாயிலாகப் பால் மாடு வளர்த்தல், தையல் கலை, பிளாஸ்டிக் கூடைகள் பின்னுதல், சிறு சேமிப்புத் திட்டம் முதலியவை பற்றிய விளக்கங்கள் மன்ற அங்கத்தினர்களுக்கு வட்டார நல அலுவலர் துணையோடு எடுத்துரைத்துச் செயலாக்கத்திலுள்ளது. தவிரவும், 70க்கும் அதிகமான இளைஞர்கள் கடந்த சில ஆண்டுகளில் பஹ்ரின், குவைத், டோகா, சவூதி அரேபியா, அபுதாபி, துபாய் ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச்சென்று பணி புரிந்து வருவது இந்தச் சிறிய கிராமத்தின் முன்னேற்றத்துக்கான அடிப்படை அம்சம்.

சோதனைகள் பல சூழ்ந்திருந்தும் ஒற்றுமையுடன் செயல்பட்டுச் சாதனைகள் ஏற்படுத்தி முன்னேற்றப் பாதையில் திகழ்வது எமது கிராமம்.

சு. பால்பாண்டி, பி.எஸ்ஸி.

பிருந்தாவனத்தைப் பற்றிப் பெரிய எதிர்பார்ப்புகளுடனும், நெஞ்சு கொள்ளாத கற்பனைகளுடனும் அந்த 'டூரிஸ்ட்' பஸ்ஸிலிருந்து இறங்கிய நான், ஒரு நிமிஷம் அதிர்ந்து போகிறேன்.

''இது என்ன...?நம் ஊர்வைகை அணை மாதிரி...!'' கூட வந்த நண்பர்களுக்கு - ஆர்வத்தோடு அழைத்து வந்துவிட்டு, வருகிற வழியில் வண்டியிலெல்லாம் பிருந்தாவனத்தின் பெருமைகளை வாய் ஓயாமல் சளசளத்துக்கொண்டு வந்த நண்பர்களுக்குச் சப்பிட்டுப் போகிறது.



பொன்னை விரும்பும் பூமியிலே...

"நீ வரவரப் பெரிய 'ஸினிக்' ஆயிண்டு வரேப்பா!" என் கலா உணர்வுகளும் ரசனை நரம்புகளும் கூர் மழுங்கிப்போய் க்ஷீணித்துக் கொண்டு வருவதை நாளுக்காய்ச் சுட்டிக் காட்டியவர்கள் ஆளுக்கொரு திசையில் நகர்ந்து போகிறார்கள்.


நானும் கால் போன போக்கில் நடக்கிறேன். காவிரித் தாயைக் கட்டுக்குள் அடக்கி, அவளிடமிருந்து பொழியும் இயற்கைச் செழிப்புக்களைச் செயற்கைப் போலிகளுடன் கைகுலுக்க வைத்திருக்கும் இந்தப் பூமி... இன்னும் என்னைக் கவர ஆரம்பிக்கவில்லை. ஒரு வேளை...நண்பர்கள் சொன்னது நிஜம் தானோ? என் பார்வையிலே தான் ஏதும் கோளாறோ? இத்தனை சுற்றுலா பஸ்களுக்கும் அவற்றிலிருந்து நெல்லிக்காய் மூட்டையாய் அவிழ்ந்து ஏதோ சாம்ராஜ்யம் கொள்ளை போகிற அவசரத்தில் அந்த நந்தவனத்தின் அழகை அள்ளிக்கொள்ள விரைகிற கூட்டங்களுக்கும் இடையே... நான்தான் முட்டாளாய்த் தெரிகிறேனோ?

படிக்கட்டுக்களில் ஏறி மேலே போய், நீரைக் குடம் குடமாய்ப் பொழியும் பதுமைத் தாயின் கோயிலில் ஒரு விநாடி தாமதித்து விட்டு அணைக்கட்டின் மேலேறி நடக்கிறேன். இயந்திர வளர்ச்சியின் பிரம்மாண்டத்தில் அகண்ட காவேரி சாதுப்பெண்ணாய் அடங்கி நடை பயிலும் காட்சி. .நெஞ்சை நெருடுகிறது.

இரவு தன் ஆதிக்கக் கரங்களை நீட்டி அகிலத்தை அணைக்கத் தொடங்கும் வேளையில் 'குபீ'ரென்று அந்த இருட் காட்டில் ஒளிப் பூக்கள் பற்றி எரிய ஆரம்பிக்கின்றன.

ஓ...இது பிருந்தாவனத்தின் இன்னொரு முகமோ?

நடந்துகொண்டும், பேசிக்கொண்டும், கூட்டம் கூட்டமாய் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டும் இருந்தவர்கள், அந்த ஒரு கணத்துக்காகவே காத்திருந்தவர்கள் போல்..விநாடிநேரம் ஸ்தம்பித்து நின்று விட்டுப் பிறகு நிதானமாய் மின்னொளியின் வண்ணத் தெளிப்புக் கோலங்களை அசை போடத் தொடங்குகிறார்கள்.



அணையின் மீது நடந்தது போதுமென்று முடிவு செய்துவிட்டுக் கீழிறங்கி வருகிறேன். வரிசை வரிசையாய்ப் படிக்கட்டுக்கள். ஒவ்வொரு படிக்கட்டின் சரிவிலும் நின்றுகொண்டு, நிறம் மாறும் நீரின் ஜாலங்களையும் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக்கொண்டு மோதிப் பொழியும் நீரூற்றுக்களையும் வாய் பிளந்து ரசிக்கும் கூட்டங்கள்!

கைக் கடிகாரத்தைப் பார்க்கிறேன். ஏழு பத்தாகிறது. ஏழே முக்காலுக்குள் பஸ்ஸில் இருக்க வேண்டுமென்பது நினைவுக்கு வர, கால்களை எட்டிப் போடுகையில்..எதிர்ச்சாரியில் தென்படும் காட்சி ஒன்று என் கண்களைக் கட்டி நிறுத்துகிறது.

இளம் வாலிபன் ஒருவன் சக்கர நாற்காலியைத் தள்ளியபடி வர, அழகே உருவெடுத்தாற்போன்ற பெண்ணொருத்தி அதில் அமர்ந்திருக்கிறாள். புடவைக்குக் கீழ் தெரியும் அவள் பாதங்கள் சூம்பிப் போயிருப்பது இங்கிருந்து பார்க்கையில் மங்கலாய்ப் புலனாகிறது. வண்டியை நிதானமாய் ஓட்டியபடி, அந்தத் தோட்டத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் கூட அவளுக்குச் சுட்டிக் காட்டி, அவன் விளக்கம் கொடுக்க அந்தச் சந்தோஷத்தில் ஓர் இணுக்கைக் கூடத் தவறவிட விருப்பம் இல்லாதவள் போல் அவள் ஒவ்வொன்றையும் ரசித்துப் பார்த்து அனுபவிக்கிறாள். நீர்ப் பொழிவுகள் குறுக்கிடும் போதெல்லாம் கஷ்டப்பட்டு எம்பிச் சரிந்து, கைப்பிடி நீரை அள்ளி இறைத்துக் குழந்தையாய்க் குதூகலிக்கிறாள்.

கை கோத்து உலாவிக் களித்துத் திரிய வேண்டிய ஓர் இடத்தில் இப்படிக் கால் முடங்கி வரும் ஏக்கத்தையோ, தன்னிரக்க உணர்வையோ கொஞ்சமும் வெளிக் காட்டாது அவளைச் சந்தோஷப்படுத்துவதே லட்சியமாய் அவனும், அந்த நிலையிலும் கூட அவனை உல்லாசமாய் வைத்திருப்பதே நோக்கமாய் அவளும் நடந்து கொள்ளும் முறை... குறையை இயல்பாய் ஏற்றுக்கொண்ட பாங்கு என்உள்ளத்தில் பிறந்த பச்சாதாப உணர்வை மாற்றி, வியப்புக் குடையை விரியச் செய்கிறது.

அந்தத் தம்பதியர் பேசும் மொழி விளங்காவிட்டாலும், வார்த்தைகள் காதில் விழாவிட்டாலும் அவர்களின் பாசவிழிப் பார்வைகள் சொல்லும் நேசக் கவிதைகள், பரஸ்பரம் அவர்கள் பூண்டுள்ள அன்பின் ஆழத்தையும் உறவுப் பிணைப்பையும் கதையாய் வெளியாக்க... அவர்களை மகிழ வைக்கும் பிருந்தாவனம், அந்தக் காரணத்தா

லேயே எனக்கும் கூட இப்பொழுது அழகாய்த் தெரிகிறது.

மேல் படிக்கட்டின் விளிம்பருகே வண்டியை நிறுத்திவிட்டு ஒரு குழந்தையைப் போல் அவளை அள்ளி எடுத்த அவன், படிகளில் விரைவாய் இறங்கி ஓடுகிறான். கணவனைச்சுமக்க வைத்துவிட்டகுற்ற உணர்வோ, தயக்கமோ சிறிதும் இன்றி, அதையும் இனியதொரு அனுபவமாய் ஏற்று அவள் பூவாய் மலர்ந்து சிரிக்கிறாள். அந்தக் குற்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டு விடாத வகையில் அவன் தனக்கொரு இனிய சுமையே என்று உணர்த்துவதைப் போல லகுவாய்ச் சுமந்து கீழ்ப் படியில் அவளை உட்கார வைத்து விட்டு வண்டியை எடுக்க அவன் மீண்டும் மேலேறி வருகிறான்.

போலி பாசாங்குகளற்ற, அசலான ஆத்மாக்களைத் தரிசித்து விட்ட சந்தோஷம், என் அடி மனத்திலிருந்து பீறிட்டு வருகிறது. முடமான மனைவியை வீட்டுக்குள் முடக்கிப் போட்டு, அவள் வாழ்வையும் நொண்டியாக்கி விடாமல், வெளி உலகம் பார்க்க வைத்து அங்கே பலர் காணத் தானே பணிவிடையும் செய்யும் அந்தக் கணவனின் பௌருஷம் என் கண்ணெதிரே விசுவரூபம் எடுக்கிறது. சக்கர நாற்காலி தள்ளும் அந்தக் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்ள மனம் பரபரக்கிறது.

இதோ! கடைசிச் சரிவு! பிருந்தாவனமும் இந்த அனுபவமும் இதனுடன் முடியப் போகிற வெறுமை, ஏக்கம்... லேசாய்த் தலை நீட்டுகிறது.

தர்மபுரி ஜில்லாவில் 1958ல் அப்போதைய முதல்வராக இருந்த திரு காமராஜ் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அடிக்கல்நாட்டியுள்ளார். ஆனால் இன்னும் நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவில்லை. (24 ஆண்டுகள் ஆகியுள்ளன. நான்கு முதல்வர்கள் பதவி வகித்துள்ளனர்!) -அ. தங்கமுத்து



இம்முறை ஏனோ அவன் படிகளில் தன்னைச் சுமக்க வந்த புருஷனைக் கையமர்த்தி விட்டு, அவன் துணையுடன் விந்தி விந்தி மெள்ள இறங்கிப் போகிறாள். காரணம் விளங்காமல் தவிக்கும் கணவனுடன் சேர்ந்து நானும் கஷ்டப்படுகிறேன். 'ஒருவேளை நான் பார்ப்பதைக் கவனித்திருப்பாளோ?... அப்படியும் அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து கொண்டுதானே நான் தொடர்ந்துகொண்டு வருகிறேன். ம்.. தானும் நடக்க வேண்டும் என்ற ஆசையில்... தன்னாலும் நடக்க முடிகிறதா என்று பார்க்கும் துடிப்பில்கூட அந்தப் பெண் அப்படிச் செய்திருக்கலாமே?— மனம் கேள்வியை எழுப்பிச் சமாதானமும் காண்கிறது.

நதிக் கரையை ஒட்டிய வேலி ஓரமாய் வண்டியை நிறுத்திவிட்டு இருவரும் ஐஸ்கிரீம் சுவைக்கிறார்கள். இனியும் தொடர்வது நாகரிகமில்லை என்ற உணர்வுடன், அவர்களிடமிருந்து மானசீகமாய் விடைபெற்றபடி பஸ்ஸுக்கு விரைகிறேன்.

''என்னப்பா 'சிலிக்!' வந்து இறங்கின உடனே என்னவோ கோளாறு சொன்னியே! இப்ப ஒரேயடியாய் மயங்கிப் போயிட்டியா? இவ்வளவு லேட்டா வரே!''

நண்பர்கள் கேலி செய்தபடி வரவேற்கிறார்கள்.

வண்ணக் களஞ்சியமானதொரு உலகில்...

''பலப் பல நல்லழகுகள் சமைத்தாய்!'' என்று மனத்துக்குள் பாரதியைப் பாடியபடி பஸ்ஸில் ஏறி உட்காருகிறேன். எனக்குப் புதியதொரு போதி மரமான பிருந்தாவனம் வைரப் புள்ளிகளுடன் கொஞ்சங் கொஞ்சமாய் நகர்ந்து மறைகிறது.

பஸ்பெங்களூரை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது.

தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வரும் நேரத்தில் பின் சீட்டிலிருந்து உரத்த குரல் ஒன்று பிருந்தாவனத்தைப் பற்றி விமரிசித்துக் கொண்டிருக்கிறது.

''என்னய்யா பிருந்தாவனம்! வர வர இந்த இடமே ரொம்பக் கெட்டுப் போச்சு போங்க! இங்கே வந்ததுமே லைசன்ஸ் கிடைச்சிட்ட மாதிரி என்ன அசிங்கமெல்லாம் பண்றாங்க? பொது இடத்திலே இப்படி நான்ஸ்டியா நடந்துக்கலாமான்னு ஒரு கூச்ச நாச்சம்வேண்டாம்?...இன்னிக்குப்பாருங்க.. படிக்கட்டிலே ஒரு பொம்பளையை அலாக்காத் தூக்கிக்கிட்டு ஒரு ஆளு ஓடி வரான்! என்னமோ சினிமாக் காட்டறதா நெனப்பு இவங்களுக்கு...! எனக்கு வயிறு 'பகீர்'னு பத்திக்கிட்டது. கண்ணை மூடிக்கிட்டுச் சடார்னு அந்தப் பக்கம் நகர்ந்து போயிட்டேன்.''

'அந்த நாற்காலிக்கோலத்தையும் பார்த்துவிட்டுக் கண்ணைத் திருப்பிக் கொண்டிருக்கக் கூடாதா நண்பரே!' என்று நினைக்கிற எனக்கு அந்தப் பெண், கடைசிச் சரிவில் கஷ்டப்பட்டு இறங்கிப் போன காரணம், இப்போது நன்றாகவே விளங்கிப் போகிறது.

போர்ஹென்ஸ்—பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்




உங்கள் பற்களை சுத்தம் செய்யும் போதே ஈறுகளையும் வலுப்படுத்த உதவுகிறது

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்க நேரிடும்




பல் டாக்டர்கள் கூறுகிறார்கள், உங்கள் பற்களை சரிவர சுத்தம் செய்யவில்லையெனில் பற்களையும் ஈறுகளையும் சுற்றி, மெல்லிய கிருமிகளின் படிவமாகிய ஊத்தை (Plaque) தோன்றுகிறது. இதுவே காலடைவில் பற்காறையாக மாறி, ஈறுகளை பலவீனப்படுத்தி, அவற்றைத் தள்ளுவதால் ஆரோக்கியமான பற்களும் விழுந்து விடக்கூடும். ஈறுகெட்டால் உடல் நலமே கெடும்.

ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு



டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் விசேட (அஸ்டிரிஞ்ஜண்ட்) சேர்க்கைப் பொருள் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது. ஆகவே, போர்ஹென்ஸ் டூத் பேஸ்ட், போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள் ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.



267F-303 TAM

போர்ஹென்ஸ் — ஈறுகளுக்கெனவே

Regd. T.M. Geoffrey Manners & Co. Ltd.



டாசெல்
சுகாதாரம் சிக்கனமானது
நீடித்து உழைப்பது
அழகு மிகுந்தது
வெடிப்புகள் ஏற்படாத பளிங்கு
போன்ற, சுகாதார சாதானங்களை
சகாயமான விலைகளில் டாசெல்
இப்பொழுது பிரத்யேகமாகத்
தயாரித்து அளிக்கிறது.
டாசெல் சுகாதார சாதனங்களால்
உங்கள் பாத்ரூம் நவீனமாகவும் அழகு
மிகுந்ததாகவும் இருப்பது நிச்சயம்.
TACEL
தமிழ்நாடு
செராமிக்ஸ் லிட்.,
சென்னை-600018

சினிமா விமர்சனம்

திரைஞானி



விமர்சனக் கோர்ட்டின் தீர்ப்புகள்

சிவாஜி கணேசன்

எத்தனையோ படங்களில் போலீஸ் அதிகாரியாக நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் வரும் எஸ்..பி. மாதிரி அடி வயிற்றைத் தடவிக் கொண்டுஇவ்வளவு சிறப்பாக நடித்ததில்லை என்பது கோர்ட்டில் நிரூபணமாகியுள்ளது.

மகள் கெடுக்கப்பட்ட விஷயத்தை இவர் மூடி மறைத்து, கதையில் அனாவசியக் குழப்பங்களை உண்டு பண்ணியிருப்பது குற்றம் என்று கோர்ட் கருதினாலும் அதன் பிறகு இவரது புதல்வர்கள் இருவரும் ஒரே வீட்டில் இருந்துகொண்டு மோதிக் கொள்ளும் சூழ்நிலை எழுந்து கதையில் சூடுபிடிக்க உதவியிருக்கிறார் என்கிற ஒரு காரணத்துக்காக இவரை மன்னித்து விடுதலை செய்கிறோம்.

விஜயகுமார்

பாசத்துக்கும் கடமைக்கும் இடையே போராடாமல் அப்பாவையே கைது செய்து 'கடமையே கண்'ணாக இருந்த காரணத்துக்காக கோர்ட் இவரைப் பாராட்டுகிறது.

சரத்பாபு

சகோதரனுக்கு எதிராகச் செயல்படும் ஒவ்வொரு கட்டத்திலும் சபாஷ் வாங்கியிருப்பதுடன் வழக்கத்துக்கு மாறாகக் கொஞ்சம் கண்ணீர் சிந்தியும் நடித்திருக்கிறார் என்பதால் கோர்ட் இவர் மீது இரக்கம் காட்டி விடுதலை வாங்கி அளிக்கிறது.

ஜெய்சங்கர்

'முரட்டுக் காளை' பாதிப்பு இன்னமும் இவரை விட்டுப் போகவில்லை என்பதற்குத் 'தீப்பொறி' கோவிந்தன் சாட்சியமாகிறான். முதலில் சொல்லப்பட்ட மூவருடைய பாதையில் இருந்து நடிப்பில் இவர் தனித்துப் போவதால் 'போலீஸ் துப்பாக்கி சப்ளையர்' என்பதையே மறந்து இவரை அப்ரூவராக ஏற்றுக் கொள்கிறோம்.

சுஜாதா

தீபாராதனைத் தட்டைக் கையில் வைத்துக் கொண்டு கணவனுக்குச் சாதகமாக வாதாடப் போகும் மகனை வாழ்த்துவதா, பாதகமாக வழக்காடப் போகும் மகனைவாழ்த்துவதா என்று தெரியாமல் குழம்பும் இவரது தயக்கத்துக்குக் கோர்ட் தலை வணங்குகிறது.

மனோரமா

சிவாஜி கணேசன் 'ர'கர சுத்தமாகச் சொல்லிக் கொடுத்த வாக்கியத்தை ''கால்த்திகேயன் காலை எடுத்துக் கொண்டு 'வில்' லாலு பலத்தான்'' என 'ல'கர சுத்தமாகப் பேசி அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த குற்றத்துக்காக இவரது பெயரை 'மனோலமா' என மாற்றியமைக்க உத்தரவிடுகிறோம்.

நித்யா

'கொக' மாதிரி தோற்றமளித்த இவரைப் படத்தில் ஆஜானுபாகுவான சுதர்சன் 'தோரஹா' செய்த காரணத்திற்காக இவர் மீது கோர்ட் கருணை காட்டுகிறது.

பாலாஜி

ரசிகர்களின் தீர்ப்புக்குத் தலை வணங்கிய வழக்கின் முக்கிய சாட்சியாகக் கருதப்படும் இவரை நீதி மன்றம் பாராட்டிப் பெருமைப் படுத்துகிறது.

தீர்ப்பு

சினிமா



● சினிமாவில் நடித்தவாறே நாடகத்திலும் நடித்து வரும் எஸ். என். பார்வதி பெரும்பாலான நாடக நடிகைகளுக்காக அனுதாபப்படுகிறார்.

''எனக்குத் தெரிந்த ஒரு நாடக நடிகையின் அம்மா இறந்துபோனாள். பிணத்தை எடுக்கக் காசில்லாமல் அன்றைய நாடகத்தில் நடித்துவிட்டுக்கிடைத்த வருமானத்தில் காரியம் நடத்தினாள்'' என்கிறார்.

அ அகர வரிசைப் பேட்டி: அருந்ததி



ஈடுபாடு:

எனக்கு நடிப்பில் ஈடுபாடு ஏற்பட்டதற்கு என் அப்பாவே காரணம். அவர் ஒரு நாடக நடிகர். பெயர்: கோபால். 'பாரதீய கலா கேந்திரம்' என்கிற நாடக நிறுவனத்தில் 200க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். ஏன், முதன் முதலாக நான் நடித்த 'தண்ணீர் தண்ணீர்' படத்திலே ஒரு சிறு வேடத்தில் அவரும் நடித்துள்ளார். போலீஸ் ஆபீசராக நடிப்பவர் அப்பாதான். தற்சமயம் 'அம்மா' படத்திலும் என் தோழியின் அப்பாவாக நடித்திருக்கிறார். படத்தில் என்னுடைய திருமண அழைப்பை அவரிடமே கொண்டு போய்க் கொடுத்து என் கல்யாணத்துக்கு வரும்படி அழைக்கிறேன்!

ஈ. வே. ரா.

என்னதான் அவர் சொல்லியிருந்தாலும் எனக்கென்னவோ கடவுள் நம்பிக்கை நிறைய உண்டு.

மெய் மறந்து நின்றது அன்னை மூகாம்பிகையைப் பார்த்துத்தான். 'தாய் மூகாம்பிகை' படப் பிடிப்புக்காக என்னை அங்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். அதுமுதல் அன்னையைப் பூஜை அறையில் வைத்துப் பூஜித்து வருகிறேன்.

ஈர்க்குச்சி:

நான் நடிப்புப் பள்ளியில் படிக்கும்போது மெலிந்து ஈர்க்குச்சி மாதிரி இருப்பதாகச் சொன்னார்கள். 'தண்ணீர்... தண்ணீர்' படத்தைப் பார்த்துவிட்டுப் பலர் கொஞ்சம் உடம்பு பிடிக்க வேண்டும் என்றார்கள். உடலைப் பருக்க வைக்க முட்டை சாப்பிடுவது என்று தீர்மானித்தேன். இப்பொழுது 'சதை போட ஆரம்பித்து விட்டது. ஜாக்கிரதை' என எச்சரிக்க ஆரம்பித்தார்கள். மீண்டும் இளைக்க ஆரம்பித்திருக்கிறேன்.

ஈர்ப்பு சக்தி

நடிகை சரிதாவுடன் 'அம்மா'வில் அவரது தங்கையாக நடிக்கும்போது நான் ஈர்த்துக் கொண்டது 'எப்படி அழுவது' என்பதுதான். கிளிசரைன் போட்டுக் கொண்டால் கண்களில் நீர் வரும். முகத்தில் பாவம் வர வேண்டாமா? சரிதா எந்தக் காட்சியில் எப்படி அழுகிறார்; முகத்தில் எந்த மாதிரியான பாவத்தை வரவழைத்துக்கொள்கிறார் என்று உற்றுப் பார்த்து அழுவது எப்படி என்பதைக் கிரகித்துக் கொண்டுள்ளேன். இப்படியே பிற நடிகர் நடிகைகளிடமிருந்து எதை எதை ஈர்த்துக் கொள்ளலாம் என்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறேன்.

ஈஸ்வரி

எல். ஆர். ஈஸ்வரி பாட்டு என்றால், கொள்ளை ஆசை. இசை அமைப்பாளர் குன்னக்குடி வைத்தியநாதன் மகன் கல்யாணத்திற்கு அவர் பாடியபோது நேரில் பார்த்தேன். அவரது பாட்டுக்குப் படத்தில் உதடசைத்து நடிக்க ஆசைப்படுகிறேன்.

கோடம்பாக்கச் சுற்று

சினிமா

சேலத்தில் நடந்த ''ராணித்தேனீ'' படப்பிடிப்பு பற்றிச் சென்ற வாரம் கூறியிருந்தேன். புஷ்பலதா 'அது ஒரு கதை' என்றதும் ஏதோ சுவாரஸ்யமான விஷயத்தைச் சொல்லப் போகிறார் என நினைத்திருந்தேன். ஆனால் அவர் சொன்னதோ:

''சோபன் பாபு நடிக்கும் ஒரு தெலுங்குப் படத்தில் நடிக்க நான் ஹைதராபாத் போய் வருவதற்குள் மகாலட்சுமி பெயர் மாறிவிட்டது. 'ஸ்ரீ' என அவளது அப்பா மாற்றி வைத்து விட்டார். அவளது பிறந்த தேதி, மாதம், வருஷம் எல்லாம் ஆறுதான் (6.6.1966) அந்த எண் வரும்படி பெயர் வைத்திருக்கிறார்'' என்றார்.

◘ ◘ ◘

டைரக்டர் ஜி. என். ஆர் தேங்காயைப் பார்த்து ''பேசப் பேச ஊஞ்சலில் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றார்.

டேக்கின்போது ஊசலாடும் ஊஞ்சலில், தேங்காய் உட்கார முடியாமல் தவித்தார். ஊஞ்சலில் கவனம் செலுத்தினால் வசனத்தைக் கோட்டை விட்டு விடுகிறார். வசனத்தைச் சொன்னால் ஊஞ்சலில் உட்கார முடியாமல் போகிறது. ஐந்தாறு முறை தவறிய பிறகு கடைசியில் உட்கார்ந்தார்.

◘ ◘ ◘

உதவி டைரக்டர் ரவி சொன்னார்:

''இந்தப் படத்தில் கமலஹாசன் 19 கழுதைகளுடன் பாட்டுப் பாடி நடிக்கப் போகிறார். கௌரவ வேடம் அவருக்கு. சலவைத் தொழிலாளியாக வருகிறார். அது மட்டுமல்ல. வில்லனை ஒழித்துக் கட்ட புலி வேடம் போட்டு ஆடப் போகிறார். சென்னையில் படப்பிடிப்பு நடத்தப் போகிறோம்''

◘ ◘ ◘

'அம்மா' படத்தின் கடைசி நாள் படப்பிடிப்பு அன்று நடந்து கொண்டிருந்தது.

சரிதா நெற்றியில் போடப்பட்ட பிளாஸ்திரியுடன் பிரதாபிடம் பேசிக் கொண்டிருந்தார். பேச்சு அதில் நடிக்கும் மாஸ்டர் விமலைப் பற்றித்தான்.

''விமலுக்கு எக்ஸ்பிரஸிவ் ஃபேஸ். அவன் நடிக்க வேண்டாம். சும்மா நின்று கொண்டிருந்தாலே போதும். அவனது முகத்தில் பாவங்கள் வந்து போகின்றன. சில காட்சிகளில் என்னையே இருக்கும் இடம் தெரியாமல் செய்து விட்டான்.


''போலீசைக் கண்டாம் பயப்படுகிறான். 'இன்ஸ்பெக்டரை'க் கொண்டு வா' என்று சொன்னாலே போதும். அழுது விடுகிறான். தேங்காய் சீனிவாசன் ஒற்றைக் கண்ணோடு வருவார். அதனாலே அவரைக் கண்டாலே பயம். விபத்துக் காட்சிகளிலும் பயப்படுகிறான். கதையே அவன் மீதுதான். எல்லாவற்றையும் விட அவனுடைய குரல் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. வெரி ஸ்வீட் வாய்ஸ்'' என்றார் சரிதா.

◘ ◘ ◘

'லாட்டரி டிக்கெட்' படத்தில் நடித்துக் கொண்டிருந்த சிலுக்கு ஸ்மிதாவைச் சுற்றிலும் ஒரு சிறு கும்பல்.

''ஒரு வெளிவராத படத்தின் பெயரைச் சிலுக்குவைச் சொல்லச் சொல்கிறேன். வேடிக்கை பாருங்கள்'' என்று கூறிவிட்டு ஸ்மிதாவைப் பார்த்து, ''கமலஹாசனை நடிக்கவைத்து ஏ.வி.எம். ஒரு படம் எடுக்கிறார்களே! அதன் பெயர் என்னம்மா?'' என்று கேட்டார் ஒருவர்.

சிலுக்கு சிரித்துக் கொண்டு ''போங்க சார்'' என்றவாறே நாணிக் கோணி ''சலகலகாலல்லவன்'' என்றார். அனைவரும் சிரித்து விட்டார்கள். 'சகல கலாவல்லவன்' என்கிற பெயர் அவர் வாயில் நுழையாமல் படாத பாடு படுத்தின்று. மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொண்டார். அந்தப் பெயரைச் சரியாகச் சொல்ல ஐந்து நிமிடங்களாயிற்று.



22

பகல் உணவுக்குப்பின் ஊஞ்சலில் படுத்து உறங்கிப்போன அத்தை விழிப்புற்று எழுந்து உட்கார்ந்தாள். பொழுது பிற்பகலைத் தாண்டி நகர்ந்துவிட்டிருந்தது. பரபரப்புடன் முகத்தைக் கழுவி, கூந்தலை வாரி முடித்துக் கொண்டு,கூடத்துக்குள்வந்தாள். தயாராகத் தம்ளரில் காப்பியும் தட்டில் கார போண்டாக்களுடன் சமையலறையிலிருந்து சந்தியா வெளிப்பட்டாள்.

''சாப்பிடுங்க அத்தை....'' உபசரித்தபடி ஊஞ்சல் பலகை மீது அவைகளை ஓர் ஓரமாக வைத்தாள். வாசலில் எழுந்த கடா புடா சத்தத்தைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுப் போயினர்.

பின் பக்கம் மர நிழலில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்த சாம்ஸன் ஓங்கிக் குரைத்துக் கொண்டு முன்னால் ஓடியது.

வாயிற் கதவைத் திறந்தாள் ஜகதா. பல நாட்களுக்குப் பின் அபூர்வமாக அன்று மாலை அத்தான் குமரேசன் அவர்களைப் பார்க்க வந்திருந்தார். இந்த முறை ஓசியாக அவர் பயணத்துக்கு உபயோகித்த அந்தப் பழைய தகர டப்பாக் கார் எழுப்பிய சத்தம் அது என்பதைப் புரிந்து கொண்ட ஜகதா ''வாப்பா தம்பி குமரேசு...''எனஓங்கிக்குரல் கொடுத்தாள்..

''ஒவ்வொரு அரிசியிலும் அது போய்ச் சேர வேண்டிய வயித்துக்குடையவன் பேரை முன்னதாகவே சாமி எழுதி வச்சுடுவான்னு சொல்வாங்க:... சரியாப்போச்சு குமரேசுக்கு இந்த டிபன் காப்பியைக் கொடுத்துடு.



எனக்கு நீ உள்ளே வச்சிருக்கிற உன் காப்பியிலே கொஞ்சம் ஒரு தம்ளரில் ஊத்திட்டு வா போதும்...'' என்றாள் அத்தை விரக்தியாக.

''கார போண்டா உங்களுக்குப் பிடிக்குமேன்னு அவசரமாத் தயாரிச்சேன். எண்ணெயில் போட்டுப் பொரிக்கும்போதே நினைச்சேன். மழைக் குருவி வந்தா மழை பெய்யும்பாங்க. நம்ப வீட்டிலே கார போண்டாப் போட்டா கழுகுக்கு மூக்கிலே வேர்க்கிறாப் போல அத்தான் வாசனை பிடிச்சுக்கிட்டுச் சரியான நேரத்துக்கு வந்து நிப்பாரேன்னு நினைச்சேன். – வந்துட்டார். – ஓசியா இந்தத் தகர டப்பாதான் கிடைச்சுதா இன்னிக்கு பாவம்....'' சிரித்தாள் சந்தியா.

''போறும் போக்கிரிப் பொண்ணே! பள்ளிக்கூடத்திலே பிள்ளைகளுக்குக் கத்திப் பாடம் சொல்லிக் கொடுத்து உனக்கு மெதுவாப் பேசற பழக்கமே மறந்துபோயிடுச்சு. அந்தக் கிரிதரன் இப்படியா இரைஞ்சு பேசறான்? பதவிசா மெல்லிய குரலில் எத்தனை அன்பாப் பேசறான்?''

''போதும் அவர் புகழ் அத்தை!'' அதட்டி விட்டு அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

ஸ்ரீதரனைப் பற்றிய பேச்சு ஏற்படுத்திய மகிழ்ச்சியும் அத்தான் குமரேசனின் விஷயத்தில் மூண்ட ஆத்திரமும் கலந்த ஒரு வினோத உணர்வு மனத்தை நிறைக்க, அவள் இன்னொரு தட்டில் சில போண்டாக்களும் தன் காப்பி டம்ளரிலிருந்து சிறிதளவு காப்பியை ஒரு லோட்டாவில் ஊற்றியும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

''அத்தையம்மா, சந்தியா! எல்லோரும் சௌக்கியம்தானே!'' கேட்டபடி ஊஞ்சலில் வந்து அட்டகாசமாக அமர்ந்தார் குமரேசன்.

சில நாட்களுக்குப் பின்னர் வந்ததினால் பார்வையை நாலாபுறமும் ஓட விட்டார். ''உம்! இன்னும் ரெண்டு பலத்த மழை கொட்டிச்சுன்னா மேற்கால சுவர் இடிஞ்சு விழுந்திடும். இப்பக்கூட ஒருத்தன் கையில பணத்தை வைச்சுக்கிட்டு ஒத்தைக் கால்லே நிக்கறான். நம்மால சமாளிக்க முடியாததைச் சட்டுன்னு விலைக்குத் தள்ளி வுட்டுடணும்.''

இன்னமும் அந்த வீடு விற்கும் படலத்திலிருந்து தாண்டாதவராக அவர் பேசினார்.

இந்த முறை அவர் எதற்காக வந்திருக்கிறார் என்பது சந்தியாவுக்கு நன்றாகவே ஊகிக்க முடிந்தது.

'சில கொலையாளிகளுக்குத் தான் கொலை செய்த இடத்தைத் திரும்பிப் பார்க்கவேண்டுமென்று ஒரு வக்கிரமான ஆசை ஏற்படுவது வழக்கம்.' – ஒரு பிரபல துப்பறியும் ஆசிரியர் கதையில் படித்த நினைவு அவளுக்கு. அந்த முறையில் கட்டாயம் அந்த வார இறுதிக்குள், குமரேசன் அத்தான் அந்தக் கடிதத்தின் விளைவை நேரில் கண்டறிய வருவார் என்பதை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது நம்பிக்கை வீண் போகவில்லையே?

''ரொம்ப நாளாச்சுங்க வந்து. குழந்தை ...ளையும் அக்காவையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாம்.'' ஒப்புக்கு உபசரித்தபடி பலகாரத் தட்டையும் லோட்டாவையும் அத்தையின் எதிரில் முக்காலி மீது வைத்தாள்.

வீட்டுக்கு மூத்த மருமகன் என்று அத்...தக்கு இன்னமும் குமரேசன் மீது கடுகளவு மரியாதை. புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு பலகாரத் தட்டை முற்றத்துக் குறட்டின் மீது வைத்துக் கொண்டு ஒதுக்குப் புறமாக உட்கார்ந்து ...ண்டாள்.



சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'

''தம்பி! சூடு ஆறுமுன்னே சாப்பிடு. உன்னைவாசலில்பார்த்ததுமேசந்தியாடிபனைத் தூக்கிட்டு ஓடி வந்து வச்சுட்டா... ஒரு சிறு பொய்யை அள்ளி விட்டாள். இந்தப் பொய் யைப் பொய்யால்தான் வெல்ல வேண்டு மென்ற கணிப்பு அவளுக்கு.

''என்ன, பள்ளிக்கூட வேலை யெல்லாம் எப்படி இருக்கு?'' —ஆரம்பித்த குமரேசன் போண்டாவைப் பிட்டு வாயில் திணித்துக் கொண்டு மென்று குதப்பியபடி கேட்டார்.

அந்தக் கேள்விக்காகவே சந்தியா காத் திருந்தாள்.


''அத்தான்! எங்க பள்ளிக்கூடத்திலே ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்குது....''

''அப்படியா? என்ன குழப்பம்?'' விசா ரித்த குமரேசன் முகத்தில் நிலவிய பரபரப்பு அவளுக்குப்பளிச்சென்று உண்மையை விளக்கி விட்டது.

''இதுவரை எங்கள் பள்ளிக்கூடத் தலைவி யின் நிர்வாகத்தில் நடந்தறியாத ஒரு சங்கதி— அவங்க வாழ்விலே கேட்டறியாத ஒரு பழிச் சொல்... ஏற்பட்டு விட்டது. தலைவி அப் படியே பதறிப் போயிட்டாங்க...''

''என்னம்மா நடந்தது? விவரமாகச் சொல்.'' கேட்டபடி அவசரமாகப் போண் டாவை விழுங்கினார் குமரேசன்.

''என்னைப்பற்றித் தாறுமாறாக எவனோஒரு அயோக்கியன் எழுதிய மொட்டைக் கடிதம் அவங்க முகவரிக்கு வந்து விட்டது. கூப் பிட்டு அனுப்பிச் சங்கதியைச் சொன்னாங்க. கடிதத்தின் விவரத்தைக் கூட அவங்க



சொல்லலே. 'உன்னைப் பத்தி யாரோ அசிங் கமா எழுதியிருக்கான். உன்னையும் உன் குடும் பத்தையும் எனக்குத் தெரியாதா? பள்ளிக் கூடத்திலேயே ஒழுங்கா வேலே செய்யற ஒரு நல்ல ஆசிரியை நீ — அத்தோட காலஞ் சென்ற உன் தந்தை வாத்தியார் அய்யா மேலே எனக்கு மட்டற்ற மதிப்பு. கௌரவ மான குடும்பத்திலிருந்து வரும் ஓர் ஒழுக்க மான நல்ல சிறந்த ஆசிரியையைப் பத்தி எவனோ தாறுமாறாக எழுதியிருக்கானே, அவ னைச் சும்மாவிடக்கூடாது. என்ரத்தம் கொதிக் கிறது. மொட்டைக் கடுதாசி எழுதிப் போட்டா உடனே அந்த ஆசிரியையை நான் வேலையிலிருந்து ஒதுக்கி விடுவேன்னு இவன் நினைப்போ? அப்படிச் செய்யத்தான் முடியுமா? அரசு இந்தக் காலத்தில் பள்ளி ஆசிரியர்களுக்குப் பல நல்ல சட்டங்கள் மூலம் எத்தனை பாதுகாப்புத்தந்திருக்குன்னு அந்த மடையனுக்குத் தெரியுமா? நான் வேலை யிலிருந்து நீக்கினால் அந்தமுச்சர்கோர்ட் வரை போய் என்னையும் அந்த மொட்டைக் கடிதக் காரனையும் சட்டத்தின் வாயில் சரியா மாட்டி விட்டுடலாமே...'' அப்படின்னு கத்து கத் துனு கத்தினாங்க. போலீசுக்கு உடனே தகவல் அனுப்பணும்னாங்க.''

''கடுதாசியைப் போலீசில் கொடுத்துட் டாங்களா?'' வாயில் பாதி தின்ற போண் டாவை விழுங்காதபடி கேட்டார். புரை ஏறிக் கொண்டு விட்டது அவருக்கு. கண் களில் நீர் புரள இருமல் தொண்டையை அடைக்க ''தண்ணீர் தண்ணீர்''என்று இரை ந்தார்.

போலீஸ் என்றால் குமரேசனுக்குப் பெருத்த அலர்ஜி என்பது அவளுக்குத் தெரி யும். அவள் தந்தை உயிருடன் இருந்த சமயம் நடந்த நிகழ்ச்சி அது.

எவனோ ஒருவன் மலிவாக வீட்டுக்கு வந்து ஸ்டீல் பாத்திரங்களை விற்கிறான் என்று கேள்விப்பட்டு அவனை வரவழைத்து ஒரு பெரிய தவலையை மிகவும் மலிவாக வாங்கிப்போட்டார். அது ஒரு கடையிலிருந்து திருடி எடுத்து வந்த பாத்திரங்களில் ஒன்று என்பது அவருக்குத் தெரியாது. பாத்திரக் கடை கொள்ளையடிக்கப்பட்டது பற்றிய புகார் மேல் போலீஸ் உத்தேசமாகத் தேடி வந்தபோது தவலையை அவர் வீட்டில் கண்டு பிடித்து விட்டனர். திருட்டுச் சாமான் வாங் கிய குற்றத்துக்கு என்ன தண்டனை கிடைக் குமோ என்று நடு நடுங்கிப் போய் ஓடிவந்து மாமனாரிடம் விஷயத்தைச் சொல்லி யார் யார் காலிலோ விழுந்து தவலை போனால் போகட்டும், தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்று... காவல் துறை அலு வலகத்துக்குஅவர்நடந்தநடை...தொடர்ந்து நடந்த வழக்கில் அபராதம் கட்டித் தப்பி யது எல்லாம் குடும்பத்துக்குத் தெரிந்த ரகசியம்.

போலீஸ் என்றதுமே அவருக்குப் பயத்தில் புரையேறிக் கொண்டதில் வியப்பில்லை. தண் ணீர் எடுத்து வர உள்ளே சென்ற சந்தியா அடுப்பு மேடையைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டு நின்றாள்.

''சீக்கிரம் தண்ணி கொண்டா. தம்பிக்கு மூச்சுத் திணறுது.'' அத்தை அதட்டியதும் அவன் டம்ளருடன் ஓடிவந்தான்.

அவசரமாக நீரைப் பருகி ஆசுவாசப் படுத்திக் கொண்டார் குமரேசன்.

''அப்புறம் என்னம்மா நடந்தது?'' மேல் துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டு கவலையுடன் வினவினார்.

''இது என்னைப் பத்தின விஷயம். எங்க பெரிய அத்தானைக் கேட்டுட்டு வந்து சொல் லிறேன்பிறகுநீங்கமுடிவு எடுக்கலாம்னு தங்கை யைச் சமாதானப்படுத்திட்டு வந்திருக்கேன். இன்னிக்கு நீங்க வராதிருந்தா உங்களுக்கு ஒரு கார்டு போட்டு வரவழைக்கத் தீர்மானித் திருந்தேன்.''

''அப்போ நான் வந்தது நல்லதாப் போச் சுன்னு நினைக்கிறேன்'' – குமரேசனுக்குக் காப்பி தொண்டையில் கசந்து வழிந்தது.

இதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண் டிருந்த அத்தை அதட்டலாகக் குறுக்கிட் டாள்.

''எங்கிட்ட ஒரு வார்த்தை இதைப் பத்திப் பேசலையே சந்தியா – நியாயமா இது....'' குறைப்பட்டுக் கொண்டாள்.

''உங்களுக்கு வீண் மனக் கவலை கொடுக் கக் கூடாது அத்தான் நமக்கு உதவ மலை போல இருக்கும்போது உங்களை அலட்டுவா னேன், அவர் கிட்டே ஆலோசனை கேட்க லாம்னு காத்துக்கிட்டிருந்தேன்.''

''என் பேச்சைக் கேளு சந்தியா! அந்தக் கடிதாசியைச் சுக்கு நூறுக் கிழிச்சுக் குப் பைத் தொட்டியில் போடு. போலீசிலே தாக்கல்செய்தா நமக்குத்தான்அவமானம்.'' முகம் வெளுத்துப் போன குமரேசன் மெல் லிய குரலில் பேசினார்.

அங்கவஸ்திரத்தை வீசிக் கொண்டு அட்டகாசமாக ஊஞ்சலில் பாதியை அடைத் துக்கொண்டிருந்தவர் இப்போது மழையில் நனைந்த கோழியாக ஒடுங்கிப்போய்ச் சங்கிலி யைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு பதற்ற மாகக் காணப்பட்டார்.

''அப்படியே செய்யறேன் அத்தான்.'' சந்தியா வேண்டுமென்றே குரலில் குழை வைக் கூட்டிக் கொண்டாள்.

''காலையில் பறிச்ச காய்கள் நிறைய இருக்கு – அக்காவுக்கு வாழைப்பூக் கறி ரொம்பப் பிடிக்கும். ரெண்டு பூ எடுத்து வச்சிருக்கேன். கூடையிலே நிரப்பித் தரேன். மறக்காம எடுத்துக்கிட்டுப் போங்க'' என்று அவள் சாமான் அறைப் பக்கம் நகரு முன் அவர் ஊஞ்சலிலிருந்து தொப்பென்று குதித் தார்.

''வேண்டாம். நேத்து கடையிலே வாங்கி வச்ச காய்கறிகள் ஏகப்பட்டது பிரிட்ஜ் நிறைய இருக்கு. நீங்க இதை வித்தா ரெண்டு காசு தேறும். உங்க செலவுக்கு உப யோகமா இருக்கும். அடுத்த வாட்டி பாத் துக்கலாம்....'' என்றபடி அவசரமாக விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டார்.

கடாபுடா என்று அந்தக் கார் எழுப்பிய ஓசை தெருக் கோடியைத் தாண்டிச் சாலைக் குள் சென்று அடங்கியதும் அத்தை அவ ளிடம் கேட்டாள்.

''இன்னிக்கு குமரேசன் ஒரு மாதிரியா இருந்தானே என்ன சங்கதி?''

சந்தியா விவரமாகத் தங்கை அந்தக்கடிதம் பற்றி அவளைக் கண்டித்ததையும் தான் அளித்த பதிலையும் – அது குமரேச அத்தான் வேலை என்று ஊகித்துத் தெளிந்து கொண்ட தையும் சொன்னபோது ஜகதா மிகவும் வெகுண்டு போனாள்.

''படுபாவி குமரேசனுக்கு இப்படி ஒரு கெட்ட புத்தியா? போலீசுன்னதும் மனு ஷன் எப்படிநடுங்கிப்போயிட்டான். எதிர்த்து நின்று சமாளிக்க முடியாத கோழை. இவனை யும் ஒரு மனுஷனா மதிச்சு நம்ம வீட்டுப் பெண்ணைக்கொடுத்தோமேஅந்தபுத்தியை..'' முடிக்காது பமர் என்று வாயிற் கதவைக் கோபமாகச் சாத்தினாள்.

''இந்நேரம் அத்தான் திருச்சிக்குப் போற வழி பாதியைத் தாண்டியிருப்பார். அந்தக் கார் அவரை .ஊறுகாய்ப் பாட்டிலைப்போல குளுக்கி விட்டுடும். வீட்டுக்குப் போனதும் 'சூரியா! வெந்நீர் எடுத்து வை. உடம்பு புண்ணா நோவுது... எலும்பெல்லாம் பொடி யாயிடும் போல இந்தத் தகர டப்பா ஆட்டித் தொலைச்சுடுச்சு'ன்னு... அக்காவை விரட்டுவார்'' என்று கூறிவிட்டு, கற்பனையில் தெரிந்த அந்தக்காட்சியை நினைத்து, தனக்கு அந்தக் கடிதம் தந்த துயரத்துக்கு ஈடு செய்வது போல் அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். வெகு நேரம் சிரித்துக் கொண் டிருந்தாள். புரிந்து கொண்டு விட்டதுபோல் ஸாம்சன் துள்ளி, குரைத்து வீட்டை இரண்டு படுத்திக் கொண்டிருந்தது. (தொடரும்)



● அட போங்க சார்...! நீர்தான் 'இந்திராவுக்குத் தோல்வி', 'பிரதமருக்கு இது ஓர் எச்சரிக்கை' அப்படி இப்படி யென்று கூக்குரலிடுகின்றீர். ஆனால், அவரோ நடந்து முடிந்த தேர்தலில் தாம் எதிர்பார்த்ததை விட அதிகமான அளவில் வெற்றி பெற்றிருப்பதாகச் சொல்லி விட்டார்!

மதுரை — நாகுவேலன்

● கல்கி 30–5–82 இதழில் 'குற்றவாளிகளைப் பிரபலப்படுத்துவது குற்றமா?' என்ற தலைப்பில் வெளியான பேட்டியைப் படித்தேன். 'தி லா ஆஃப் ஸக்ஸஸ்' என்ற புத்தகத்தில் நெப்போலியன் ஹில் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்:

"The so-called "crime waves" are very largely the product of sensational journalism. A single murder case when exploited by the newspapers of the country, through scare head lines is sufficient to start a regular "wave" of similar crimes in various localities. Following the repetition in the daily papers the Hickman murder story, similar cases began to be reported from other parts of the country."

ஹாரிப்ளி — என். மணி

● டாக்டர் ரங்காச்சாரி பற்றி வாசகர் கடிதத் தொகுப்பை மற்ற டாக்டர்கள் படிக்க வேண்டும். ஜெனரல் ஆஸ்பத்திரி வாசலில் சிலையாய் நிற்கும் அந்த உத்தமரைப் பார்த்தாவது இவர்கள் கொஞ்சம் கருணை உள்ளத்துடன் நோயாளிகளைக் கவனிப்பார்களா?

உடுமலைப்பேட்டை — ஏ. சாகுல் அமீது

● அரவிந்தன் படைத்த "எப்போதும் தாய்" சிறுகதை உன்னதமான படைப்பு; என் மனத்தை மிகவும் கவர்ந்தது. கதையில் வரும் சில வசனங்கள் மிகவும் உருக்கமாக எழுதப்பட்டுள்ளன.

பரசலூர் — புலவர் நாகராஜன்

● 'ஸ்ரீ திரு புடவை' கதை எக்ஸலெண்ட்! குற்றம் தன் மனத்தில்தான் என்பதை நாசூக்காய் வெளிப்படுத்தியிருக்கும் விதம் அருமை! லட்சுமி ரமணனுக்குப் பாராட்டுதல்கள்!

ஸ்ரீரங்கம் — குமாரி கீதா

● "பிரதமருக்கு எச்சரிக்கை" தலையங்கத்தில் மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியின் வெற்றியைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு முக்கியமான தகவலைக் கூறவில்லை. சென்ற பொதுத் தேர்தலில் (1977) கல்கத்தா நகரில் உள்ள 22 சீட்களில் ஒன்றுகூட இந்திரா காங்கிரஸ் பெறவில்லை. ஆனால் அண்மையில் நடந்த தேர்தலில் 11 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. திரு ஜோதி பாசுவின் மந்திரி சபையில் இருந்த ஐந்து மந்திரிகள் தோல்வி அடைந்துள்ளனர். மத்திய வர்க்கத்தினரின் மனக் குமுறலின் பிரதிபலிப்பாகவே இதைக் கருத வேண்டும். தினந்தோறும் பல மணி நேரம் 'பவர் கட்', போக்குவரத்துத் துறையின் சீர்கேடு, கல்வித் துறையின் ஆங்கில விரோதக் கொள்கை ஆகியவையே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிராபல்யம் குறையக் காரணம்.

கல்கத்தா — பி. கே. சங்கர்

● சில வாரங்களுக்கு முன்பு தங்கள் பத்திரிகையில் வெளிவந்த கிராமங்கள் பற்றிய வரிசையில் எங்கள் ஊரை (அத்தனூரை)ப் பற்றி மங்கை காளியண்ணன் எழுதிய கட்டுரையைப் படித்தேன். அதில் கண்ட அனைத்தும் 10 அல்லது 15 வருடங்களுக்கு முந்திய அத்தனூராகும். இன்று பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்தனூர் — ஜி. தர்மலிங்கம்


● உணவு விநியோக அட்டைகளைத் தரும்போது அரசு ஊழியர்கள் "டிப்" பெற்றுக் கொண்டதாக எழுதியிருந்தீர்கள். ('அட்டை விலையும் உயர்கிறது') நான் அரசுப் புள்ளி விவர மையம் (Govt. Data Center) கோட்டூர்புரத்தில் உள்ள அலுவலகத்தில் உதவியாளராகப் பணி புரிகிறேன். ரேஷன் கார்டுகள் விநியோகப் பணியில் நானும் பங்கு பெற்றேன். உண்மையில் என் கைப் பணம்தான் 25 ரூபாய்க்கு மேல் இழந்தேன். சில கடைநிலை ஊழியர்களும் இப்பணியில் ஈடுபட்டனர். ஒரு வேளை அவர்கள் டிப்ஸ் ஏதாவது வசூல் செய்திருக்கலாம். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்களை அந்த வறியநிலையில் வைத்துள்ள இந்த அரசையும் சமுதாயத்தையும்தான் குற்றம் சொல்ல வேண்டும்.

திருப்தி — எம். எஸ். நளினி, சென்னை-25


நளினி



✖ மகேஷ்யோகி



✖ தேனி சீருடையான்



வெங்கடரமணராவ்

புள்ளிகள்-செய்திகள்

ஆழ்நிலை தியானம்

● மனிதனின் அறிவாற்றலில் பத்து சதவீதம் மட்டுமேதான் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள திறனையும் நல்ல முறையில் பயன்படுத்த மகேஷ் யோகியின் ஆழ்நிலை தியானம் என்கிற பயிற்சி வழிகாட்டும்.

ஸ்விட்ஜர்லாந்துக்காரரான டாக்டர் ரோடர் இந்த ஆழ்நிலை தியானப் பயிற்சியில் மனிதனின் இயல்புகளை மாற்ற முடியும் என்கிறார். சாத்விகமாக இருக்கப் பழகுவதுதான் இந்தத் தியான முறையின் விளைவாக இருக்கும். இதுதான் சட்டத்துக்கு உட்பட்ட நேர்மையான வாழ்க்கை முறையை உருவாக்க முடியும்.

சென்னை பொது மருத்துவ மனையின் டாக்டர் என். ரங்கபாஷ்யம் தம்மிடம் வரும் நோயாளிகளிடம் இந்தத் தியான முறையைப் பயிற்றுவித்துப் பலன் கண்டிருப்பதாய்ச் சொல்கிறார்.

சென்னை ஸீமென்ஸ் இந்தியா லிமிடெட்டின் பிராந்திய மானேஜர் எஸ். கே. லக்ஷ்மண தம் நிறுவனத்தில் முப்பது சதவீதம் பேருக்கு மேல் இந்தத் தியான முறையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் இதனால் உற்பத்தி பெருகுவதுடன் தொழில் அமைதியும் நிலவுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த ஆழ்நிலைத் தியானப் பயிற்சிக்காக ''இயற்கை விதிகளின் பல்கலைக் கழகம்'' ஒன்றைத் தொடங்கி, ஒரே நாளில் உலகம் முழுமையும் 1008 இடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் ஆயிரம் பேர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் சேர்ந்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசும் தன் கல்வி நிறுவனங்களில் இந்த ஆழ்நிலை தியானம் பயிற்சி தருவது பற்றி ஆராய, நிறுவனத்திடம் திட்டங்களைக் கேட்டிருக்கிறது. — சுப்ரபாலன்

ஆர்மோனிய ராவ்

● ஆர்மோனியத்தில் தனிக் கச்சேரி செய்து வருகிறார் அன்னூர் ஜி. வெங்கடரமண ராவ். பேரூர் சுப்பிரமணிய தீட்சிதருக்குப் பிறகு தனி ஆர்மோனியக் கச்சேரி செய்து வருபவர் இவர் ஒருவர்தான்.

ஈரோடு ஹையர் செகண்டரி பள்ளி ஒன்றில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

''வயலின், வீணை போன்ற இசைக் கருவிகளில் நாதத்தின் உச்சத்தை எட்டிப்பிடிக்கிற அளவு இந்தக் கருவியில் இயலாதுதான். என்றாலும் ஜனங்கள் ரசித்துக் கேட்கிறார்கள்'' என்கிறார்.

முதன் முதலாக நீண்ட நேர (எல்.பி.) இசைத்தட்டு ஒன்றுக்காகவும் வாசித்துள்ளார். சினிமாப் பாடல்களை ஆர்மோனியத்தில் வாசிப்பதில்லை என்கிற விரதம் மேற்கொண்டுள்ளார். —திரைஞானி

தேனி தேனீ

● 'கணையாழி', 'ஞான ரதம்', 'நண்பன்' 'தாமரை' 'செம்மலர்' முதலிய இதழ்களில் தமது எழுத்தாற்றலை வெளிப்படுத்தியிருக்கும் தேனி சீருடையான் ஏழு வயதில் கண் பார்வையை இழந்து விட்டவர்! சென்னை அரசினர் பார்வை இழந்தோர் பள்ளியில் படித்துப் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற இவர், முதலில் எழுதக் கற்றுக் கொண்டது 'பிரைல்' முறையில்தான்! படிப்பு முடிந்ததும் மதுரை அரசினர் மருத்துவ மனையில் கண் சிகிச்சை பெற்று, அரைப் பார்வையை அடைந்த பின், தீவிரமாக முயன்று பேனாவில் எழுதக் கற்றுக் கொண்டிருக்கிறார். தேனி நகரத்தின் சாலை ஓரத்தில் சுயமாகச் சிறிய தொழில் நடத்தி வருகிறார் இந்த இளைஞர்.

-குன்றக்குடி பெரிய பெருமாள்

"டிர்ர்ர்ர்ரிங்...டிர்ரிரிரிங்..டிர்ர்ர்ர்ரிங்!"

"ஹலோ நளினி ஹியர்"

"ஹாய் நளினி! ஷீலா பேசறேன். ஹைஆர் யூ. அவசரமா என்னைப் பாக்கணும்னு வீட்டுக்கு வந்தியாமே. நான் காதல் ஓவியம் போயிருந்தேன்."

"ஒண்ணுமில்லே. இந்திய டெலிபோனுக்கு நூறு வயசாச்சே அதைப்பத்தி சுவாரஸ்யமா புதுஸா ஏதாவது எழுதலாம்னு இருக்கேன். நீதான் டெலிபோன்லே வொர்க் பண்றியே அதைப்பத்தி ஏதாவது விஷயம் கிடைக்குமேன்னுதான் வந்தேன்."

"டெலிபோன் பத்தி புதுஸா... ம்... ஆமா இந்த ஆப்டிகல் ஃபைபர் பத்தி எழுதேன். இப்ப கம்யூனிகேஷன்ல ரசவாதம் பண்றதே அது."

"கொஞ்சம் விஸ்தாரமா சொல்லேன்."

"ஆப்டிகல் ஃபைபர்ங்கிறது மெலிதான கண்ணாடி இழை. சாதாரண காப்பர் வயர்களில் மின்சாரம் நெடுந் தொலைவு பயணிக்கிற மாதிரி இந்தக் கண்ணாடி இழை வயர்களில் ஒளி நெடுந்தொலைவு பயணம் பண்ணும். டெலிபோன் பேச்சை ஒளியலைத் துடிப்புக்களாகமாற்றி இந்த ஒளி இழைக் கேபிள்களில் அனுப்புகிறார்கள். சாதாரண வயர் கேபிளை விட இந்தக் கண்ணாடி கேபிள் மூலம் ஒரே சமயம் நிறைய டெலிபோன் இணைப்புகள் தரலாம்."

"ஒளி நேர்க் கோட்டில்தானே போகும். கேபிள்களை வளைத்துத் தானே போட வேண்டிவரும்?"

"ஒளி நேர்க்கோட்லதான் போகும். ஆனா அதை ஒளி விலகல் மூலம் வளைக்கலாம் இந்த ஆப்டிகல் ஃபைபர் வயரின் மையப் பகுதி (Core) ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடிப் பொருளால் ஆனது. இதன் மேற்புறம் கிளாடிங் (Cladding)எனப்படும் இன்னொரு கண்ணாடிப் பூச்சு இருக்கும். இந்தக் கிளாடிங் கண்ணாடியின் ஒளி விலகல் எண், மையக் கண்ணாடியின் ஒளி விலகல் எண்ணைவிடக் குறைவு. அடர்த்தி மாறுபட்ட இரு கண்ணாடிகள் வழியே ஒளி பயணம் செய்கையில் அதன் பாதை நேர்க் கோட்டிலிருந்து விலகும்னு ஸ்கூல்லயே படிச்சிருப்பே. அது இங்கே யூஸ் ஆறது. ஆப்டிகல் ஃபைபரோட மையப் பகுதி, கிளாடிங் பகுதி இரண்டின் ஒளி விலகல் எண்ணையும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உருவாக்கி யிருப்பார்கள். அதனால் உள் கண்ணாடியில் செல்லும் ஒளி பூரண அகப் பிரதிபலிப்பு காரணமாக கிளாடிங்



பாயும் ஒளி கேட்பதற்கு

நளினி சாஸ்திரி

வழியே தப்பித்து வெளியே வர முடியாமல் உள்ளேயே வளைந்து வளைந்து பிரதிபலித்து நெடுந்தூரம் போகும்.''

''கண்ணாடி இழைகளை டெலிபோன்களில் யூஸ் பண்றதிலே அப்படி என்ன சிறப்பு?''

''என்ன அப்படிக் கேட்டுட்டே! ஏராளமான நன்மைகள் இருக்கு. இப்ப மின்காந்த அலைகளாய்ப் போகின்றன ஒலியலைகள்.

ஆனால் ஒளிக்கதிர்களைப் பயன்படுத்தினால் அதிகபட்ச அலை வரிசை காரணமாக ஏராளமான தொலை பேசித் தொடர்புகளை ஒரே சமயத்தில் ஒரே இழையில் அனுப்பலாம். ஒவ்வொரு பேச்சும் ஒரு குறிப்பிட்ட அலை வரிசையில் போகும். மயிரிழை அளவே உள்ள இரண்டு கண்ணாடி இழைகளில் (இதன் விட்டம் .2 மில்லி மீட்டரை விடக் குறைவு) 10,000 முதல் 15,000 டெலிபோன் கால்களை ஒரே சமயம் அனுப்பலாம். ஆனால் அதே அளவுள்ள காப்பர் வொயரில் 48 பேச்சுக்களை மட்டுமே இணைக்க முடியும்னு பாரேன்.''

''அடேயப்பா! பிரமிப்பா இருக்கு. இவ்வளவு எளிதான வழியை ஏன் இத்தனை நாளாப் பயன்படுத்தலை?''

''டெலிபோனைக் கண்டுபிடிச்ச கிரகாம் பெல் அப்பவே ஒளியைப் பயன்படுத்தலாம்னு சொன்னார். ஆனா ஒளியைச் சேதமில்லாமல் நெடுந்தூரம் வளைத்துக் கொண்டு போகும் நடைமுறை இழைகளைத் தயாரிக்க முடியவில்லை. அந்தச் சாதனையை விஞ்ஞான வசதிகள் இப்பொழுதுதான் செய்திருக்கின்றன.''

''இதுக்கு எவ்வளவு செலவாகும்? இனிமே காப்பர் வொயர்கள் கிடையாதா?''

''ம்ஹூம். காப்பர் கம்பிகளுக்கு டாடா சொல்ல வேண்டியதுதான். இந்த இழைகள் சிலிக்காவிலிருந்து செய்யப்படுகின்றன. சிலிக்கா மணலில் ஏராளமாய்க் கிடைப்பதால் இந்த இழைகளின் விலை காப்பரை விடக் குறைவாகவே இருக்கும். காப்பர் வயரில் மின்சாரம்தான் பேச்சை எடுத்துப் போகும். ஒளியிழையிலோ ஒளித் துடிப்புகளாகப் பேச்சு போகும். இதில் நிறைய வசதி உண்டு. பாதி வழியில் வயர்கள் ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொள்வதால் ஏற்படும் ஷார்ட் சர்க்யூட் மின்சார தீவிபத்துக்கள் வராது. வெடி மருந்துகள் நிரம்பிய ராணுவப் பகுதி தொலைபேசிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். (திடீரென்றுவேறு குரல்) ஹி...ஹி... அண்ணனா பேசறது... வந்தும்ப வட்டச் செயலாளர் பெரியப்பா பேரனுக்கு மெடிகல் சீட் ஒன்று வேணும். இருபது வரைக்கும் பெயரும். நீங்கதான் மேலே சொல்லி முடிக்கணும். அவர் சொன்னா...''

''ஹலோ ஷீலா என்னது திடீர்னு எவனோ பேசறான். என்னாச்சு?''

''கொர்ர்ர்ர்... டக்.... ஹலோ நளின் திடீர்னு ஏதோ கிராஸ் டாக். இது ஏன் வந்தது தெரியுமா? மின்காந்த அலைகள் காப்பர் வயரில் போகும் செய்தியைத் தொந்தரவு பண்ணும். சில சமயம் ஒரு வயரில் போகும் மின்காந்த அலை மற்றதன் செய்தியில் குறுக்கிடும். அதனால்தான் இப்ப எவனோ தொண்டன் குரல் கேட்டது. ஒளிக் கதிரை இந்த மின்காந்த அலைகள் துன்புறுத்த முடியாது. இதனால் ஒரு இழையில் போகும் செய்தியை மற்ற இழையில் போகும் செய்தி கண்டு கொள்ளாது. அதனால் எதிர்காலத்தில் இதுமாதிரி கிராஸ் டாக் எல்லாம் வராது.''

''சில சமயம் கிராஸ் டாக் கூட சுவையாக இருக்கும். ஒட்டுக் கேட்கிறதில தனி சுகம்தான். ஆமாம் இந்த ஒளியிழைகள் நடைமுறைக்கு வந்தாச்சா இல்லேபேப்பர் அளவில் தானா?''

''அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஹாலந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். நம் இந்தியாவில் கூட பூனா அருகே இரண்டு எக்ஸ்சேஞ்சுகளைப் பரிசோதனைக்காக ஒளி இழைக் கேபிள் மூலம் இணைத்துள்ளார்கள். மற்ற இடங்களில் கூட சீக்கிரமே வரலாம்.''

''அப்ப எண்பதுகளில் டெலிபோன்களின் சகாப்தம் ஒளி இழையில் ஒளிரப் போகிறது!''

''ஷ்யூரா.... ஆமா... ரீசண்டா என்ன படம் பார்த்தே?''

''அடடா மறந்தே போனேன். பாபு நூன் ஷோ மூன்றும் பிறை டிக்கட் வாங்கப் போயிருக்கான். அதற்குள் சமைத்துக் கிளம்பணும். பேசினதில் டைம் போனதே தெரியலை. பிறகு பேசலாம். ஸீ யூ''

''ஸீ யூ.''

அவர்களைச் சகதியில் அழித்துவிடுங்கள்

சுவர்க்கபுரி.

நீல வானில் யானை யானையாய் முகில்கள் யோசனையுடன். பொன் வெய்யிலைப் போர்த்திக்கொண்டிருந்த பெருமையில், பூரிப்பில் நெடிதுயர்ந்த மரங்கள். இன்ன பிற செடி, கொடிப் பசுமைகள். தென்றல் சுகமாய் எங்கும் செழுமை. பார்வை படுமிடமெங்கும் மகா செழுமை. அசையும் பொன் தகடுகளைத் தன்மேல் தக்க வைத்துக் கொண்டு சளசளத்து ஓடிற்று ஆற்று நீர். 'வ்லூாாால்' என்றது ஒரு பறக்கும் ஜீவன் மதுரமான இனிமையாய்.

''இறங்குவோமா நந்தினி?'' என்றான் இளங்கோ.

''ம்.''

நந்தினியின் மெலிசான, சிவந்த நீண்ட விரல்கள் ஆவலுடன் அவனின் விரல்களைப் பற்றிக்கொள்ள, ஆற்றுள் இறங்கி, 'சளக்' 'சளக்'கென்று நடந்தார்கள். கால்களை வருடிக்கொண்டு செல்லமாய்க் கடித்து, பின் ஓடின சிறு மீன்கள்.

உள் இருந்த சிறு பாறையில் சாய்ந்தபடி நின்று, சுற்றிச்சுற்றிப் பார்த்துச் சிலிர்த்தபடி வெறித்தார்கள். பின்கரையேறி, பசுமைப் புல் பிரதேசங்களினூடே நடந்து, எங்கும் கொட்டிக் கிடக்கும் இயற்கையின் அற்புத வளமையை நொடிப் பொழுதும் இமைக்காமல் அனுபவித்தபடி நடந்தார்கள்.

''நன்றி இளங்கோ நன்றி. இந்த அற்புதப் பிரதேசத்துக்கு என்னைக் கூட்டி வந்ததற்குப் பிரதியாய் நான் என்ன தரட்டும்?''

''நன்றி சொல்வது அவசியமற்றது. வேறு ஏதாவது இனிமையாய்ப் பேசேன் நந்தினி.''

''சரி. இந்தப் புலித் தோல் ஆடை உனக்கு எவ்வளவு அழகாய்ப் பொருந்துகிறது தெரியுமா? என் கண்ணே படுகிற விதமாய்.....''

''மகிழ்ச்சி. உன் கண் மட்டுமல்ல. உன் சிவந்த உடலுமே படட்டும். நன்றாக, என்மீது தேவி.''

''என்ன பெயரை மாற்றுகிறாய்?''

''எனில் என்ன? நந்தினி தேவி என்று அழைத்ததாய் நினைத்துக் கொள்ளேன். நல்லது உன் மிக அழகான 'இடை'யின் மேல் நான் கை வைத்துக் கொள்ளட்டுமா? என் கைமேல் நீ சாய்ந்து — உன் தலையை என் மேல் சரித்தபடி நீ நடக்கலாம் தேவி.''

''ம்...''

இரண்டு பறவைகள் ஜோடியாய்ப் பறந்து வந்தன. இனிதாய் சத்திவிட்டு அவசரமாய்த் திசை மாறிச் சென்றன.

''நந்தினி, உன்னைப் பார்த்து வெட்கி, அந்த பறவைகள் பறந்து விட்டிருக்குமோ? ரம்பை, ஊர்வசி என்று கேள்விப்பட்டிருக்கிறோமே அது இவள்தான்' என்று நிர்மானித்து சேதி சொல்லத் திரும்பி விருக்குமோ?''

ஜலதரங்கமாய்ச் சிரித்தாள் நந்தினி.

''ஏதேது? ரம்பை ஊர்வசியை யெல்லாம் நேரில் பார்த்தது போல் பேசுகிறாய். இந்த ஆண்களே வார்த்தை ஜாலக்காரர்கள்தான்''

''ஒரு வகையில் உண்மை. ஆனால் அதற்கும் உன்னைப் போல் ஒரு தேவ மகள் அண்மையில் இருக்க வேண்டும்.''

''தேவமகள் தேவையில்லை. வெறும் பெண் என்று இருந்து விட்டாலே போதும். சமயங்களில் ஆண்கள் தடுமாறித்தான் போவார்கள்.''

''சிறு திருத்தம் நந்தினி. உன் வார்த்தைகளில், 'வெறும்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பிடித்தமான' என்று. பழந்தமிழ் இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கின்றன ஏராளமாய், உதாரணங்கள். அதுவும் வார்த்தை ஜாலங்களிலேயே அற்புதம் செய்கிற விதமாய்.''

''ஓகோ!''

''என்ன? சந்தேகமா? சொல்லவா?

•மானமே நன்னு மனமென் மனமென்னும்
மானமான் மன்னி நனி நாணும் — மீனமா
மானு மினுன் மின்னி முன் முன்னே
நன்னினு
மானு மணி மேனி மான்.

''என்னது?''

''அர்த்தம் சொல்லட்டுமா?''

மானம் உடைய தன்மையை விரும்பாத இந்த மனதின் இயல்புதான் என்ன? ஒப்பற்ற சிவந்த மணி போன்ற மேனியுடைய மான் போன்ற பெண் மின்னுகின்ற அணிகளுடன் முன்னால் வர, பெரிய யானை எனப் பெருமையாய்ச் சொல்லப்படும் என மனம் அவள் முன் தாழ்ந்து பணிந்து நிற்குமாம் — நந்தினி,

அதாவது உன்னைக் கண்டு நிற்கும் என்னைப் போல்.''

நந்தினி நின்றாள். தன் அகலக் கரு விழி பெரிதாய்ப் படபடக்க வியப்பில் விழித்துப் பார்த்தாள்.

''அப்படிப் பார்க்காதே நந்தினி.''

''ஏனாம்?''

''அந்தப் பார்வை என்னை ஒரு காரியத்தை உடனே செய்யப் பலமாய்த் தூண்டுகிறது.''

''எதை?''

''உன்னை அணைத்துக்கொள்ள அழைப்பு விடுக்கிறது.''

''இந்த இனிமைகள் இன்னும் தொடர வேணும். நாம் 'கலனு'க்குத் திரும்ப வேண்டாம். வா தப்பித்துப் போவோம். பழைய நரகம் இனி வேண்டாம்.''

அவளை விலக்கி முகத்தை அழுந்தத் தேய்த்தபடி யோசித்தான் இளங்கோ.

''இல்லை, முடியாது நந்தினி. நாம் தப்பிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. நீ நினைப்பது போலில்லை. மகா பிரச்னையான



கார்த்திகா ராஜ்குமார்

விஷயமிது. அப்படியே தப்பினாலும் வாழ்வது கேள்விக் குறியே. அந்த 'ரெபாட்டு'கள் நம்மைத் தொடர்ந்து வந்து புழு பூச்சியைப் போல் அழித்துவிட முடியும்.''

''அது எனக்கும் கொஞ்சம் தெரியும். என்றாலும் நாம் தப்பித்தே ஆகவேண்டும். பார். இந்த இடத்துக்கு வருவது நம் தனி உரிமையாய் இருக்க, இதற்கும் தலைமை இட அனுமதி கேட்டு, காத்து, சலித்து, வந்து பின் இப்படி உடனே திரும்புவது கொடுமை இளங்கோ.''

''கட்டிடங்களிலேயே அடைந்து, பொந்துகளிலேயே வாழ்ந்து, இருட்டிலும், செயற்கை வெளிச்சங்களிலேயும் நாம் புணர்ந்தது போதும். இனி எல்லாமே சுதந்திரமாய். இந்த இயற்கையிலேயே கிடைத்த அபூர்வ சந்தர்ப்பத்தை நழுவ விட வேண்டாம். முயற்சியில் நாம் தோற்றுப் போனாலும் சரியே. திருப்தியாய்ச் செத்துப்போவோம்.''

''இலக்கிய உதாரணமாய் நீயும் மாறேன்.

''காதலி கடைக்கண் காட்டினுல் காளையர்க்கு மலையும் சிறு துரும்பாம் என்று எவனே பாடினனே. இதோ நான் முழுக் கண்ணையும் கட்டுகிறேன், வா இளங்கோ.''

என்றாள் நந்தினி எக்கச்சக்க ஆவேசமாய்.

இளங்கோ தன் தலை முடிக் கற்றைக்குள் விரல்களை அளைந்து, சிந்தனை நரம்புகள் முகத்தில் துடிக்க, தீவிரமாய் யோசிக்கலானான்.

''நன்றாக யோசி இளங்கோ. மேலிடத்திலேயே இருந்தவன் நீ. சூட்சுமம் எல்லாம் உனக்குத் தெரியுமே. வெறும் நிழல் உருவில், புத்தகப் படமாய்ப் பார்த்திருந்த இந்தப் பூமிக்கு வந்தாயிற்று. இனித் திரும்ப வேண்டாமே. 'தொடிகள்' என்றாலும் திருப்தியாய், சுதந்திரமாய் வாழ்ந்துவிட்டு இந்த இயற்கை மண்ணிலே சாவோம்.''

வியர்வைத் துளிகள் நெற்றியில் மின்ன யோசித்த இளங்கோ ஒரு முடிவுக்கு வந்தவனாய், சரேலெனத் தன் சிறு கத்தியை எடுத்துக் கொண்டு நந்தினியை நெருங்கினான்.

''என்னது?'' என்றது தன் உலோகக் குரல் 'ணங்கர ணங்கர'வென அதிர்ந்து போய் ஒலிக்க ரெபாட்-1

''ஆமாம். சுவர்க்கபுரிக்கு 'புலரி' கலத்தில் போய் இறங்கின XM2114 ச. என்றுள்ளவனும், XF2407 ச. எ. உள்ளவளும் இன்னும் திரும்பவில்லை. நேரமாகி விட்டது'' என்றது பயமாய் ரெபாட்-2.

''ஐயோ! அவன் யார்? தலைமைக் கம்ப்யூட்டரகத்துக்கு விஷயம் போனதா?''

''இன்னும் இல்லை. அவன் நம் தலைமையகத்திலேயே ஒரு சின்ன அதிகாரியாய் இருந்தவன். என்னவோ இ.பு. பெயராய் இள... என்று வரும். அவள், 'அவனி'ன் 'அவள்'. இந்நேரத்துக்கு அவர்கள் கலத்தில் ஏறி நம்முடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஆனால் இல்லை.''

வசனகர்த்தா: ''என் வசனத்தில் இன்னும் கொஞ்சம், தீப்பொறியைச் சேர்க்கட்டுமா, இது போதுமா?''
டைரக்டர் (எரிச்சலுடன்): வசனத்தில் தீப்பொறி சேர்க்க வேண்டாம், தீப்பொறியில் வசனத்தைச் சேரும்!''
- சம்பத்குமார்



புலரி கலத்திலும் எந்தவிதக் கோளாறும் இல்லை என்கின்றன விசைகள்.''

''சரி, விஷயத்தைச் சொல்லிவிடுவோம்.''

சொல்லிவிட, சில விநாடிகள் கழித்து, ஆணைகள் வரும் சின்னத் திரையில் வெளிர் பச்சையாய் எழுத்துக்கள் ஒளிர்ந்தன.

''அவர்களஐ சடஉதஇயஇல் அழஇத்தஉ வஇடஉங்கள்.'' (அவர்களைச் சடுதியில் அழித்து விடுங்கள்)

ரெபாட்டுக்கள் அவ்விதமே செய்ய ஆரம்பித்த அதே கணம் சுவர்க்கபுரியில்...

இரத்தம் சொட்டச் சொட்ட அவளின், தன் உடம்பில், ஆழமாய்க் கீறி எடுத்த சின்ன விரல் நகம்போன்ற கேப்ஸ்யூல்களைக் காட்டிச் சொன்னான் இளங்கோ.

''வேறு வழியே இல்லை நந்தினி. செய்த பிரமாணத்தை மீறிப் போனேன். நமக்காய் இவைகள் நம் உடம்பில் இருக்கும் வரை, நாம் இருக்கும் இடத்தை கம்ப்யூட்டர் கண்டுகொள்ளும். ஒரு வகையில், கம்ப்யூட்டரின் ஆளுகைக்குள், அதன் சக்தி எல்லைக்குள் தான் இருப்போம். தப்ப முடியாது. அதனால் தான் இப்படி அவசரமாய்.....''

தூக்கி அவைகளை ஆற்றுக்குள் எறிந்தான் இளங்கோ.

''நந்தினி... மிக ஆழமான காயமாகி விட்டதே'' என்றான் கண் கலங்க.

''ஆனாலும் சுதந்திரமாய்க் கொஞ்ச நேரமென்றாலும், இங்கேயே வாழ்ந்து, இன்பமாய் இந்த இயற்கை பூமியின் மேல் சாகலாம். என் வீர இலக்கியக் காதலனே வா.''


அவனை இறுக அணைத்து முத்தமிட்டாள் நந்தினி.

சின்ன ஒழுகலாய் ரத்தம் அவர்கள் உடலிலிருந்து வடிந்து கொண்டிருக்க இயற்கையின் இனிய பிரதேசத்தினூடே நடந்தார்கள்.

ஒன்றோ... இரண்டோ....?.... மணி நேரம் தான் அவர்கள் வாழ்வு.... என்றாலும் சுதந்திரமாய்... இந்த இயற்கை பூமியின் மேல்...



வம்பு



● ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனத்துக்கு, எழுத்தாளர் லட்சுமி ராஜரத்தினமும் அவர் கணவரும் மூன்று புத்தகங்கள் எழுதித் தர, அவற்றை வெளியிட்டவர், புத்தகங்களின் காப்பிரைட் தமக்கிருப்பதாய், அச்சிட்டு, புத்தகங்களை வெளியிட்டு விட்டாராம். இதைச் சுட்டிக் காட்டியும், ராயல்டி கேட்டும், எழுத்தாளத் தம்பதி எழுதிய கடிதத்துக்குப் பதில் இல்லாது போகவே, இவர்கள் கோர்ட்டுக்குப் போனார்களாம். எழுத்தாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகிவிட்டதாம். ஆனால் புத்தக வெளியீட்டாளர் இப்போது எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லையாம்!

● சென்னை டி. வி. நிலையம் 'அப்பு டெலிஸ்போர்ட்ஸ் கிளப்'கள் அமைக்கும்படி நேயர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கு எதிர்பார்த்த வரவேற்பு இல்லையாம். வாங்கிச் சென்ற விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்பினோர் சிலர்தானும். 'ஏஷியாட்'டுக்கு முன்பாவது கிளப்கள் ஆரம்பிக்கப்படுமா?

● (பெண் பெயரில் எழுதும்) எழுத்தாளர் ஒருவர் சமீபத்தில் இளமையாய் ஒரு கதை எழுத, அது வேலைக்குச் செல்லும் பெண்களைத் தாக்கும் வகையில் அமைய, அந்த எழுத்தாளர் பணி புரிந்த பாங்கில் பணியாற்றும் பெண்கள், கதைக்குக் கண்டனக் குரல் எழுப்பி, தீர்மானம் போட்டு, கையெழுத்திட்டு, பாங்க் கவர்னருக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம்.

● நீங்கள் பாங்க் ஆஃப் பரோடாவில் பணி புரியும் பெண்மணியா? நீங்கள் அல்வாமில் உள்ள உங்கள் பிராஞ்சுக்குக்கூட மாற்றல் வாங்கிவிடலாம். ஆனால் மவுண்ட் ரோடு டி. வி. எஸ். அருகில் உள்ள பிராஞ்சுக்கு மாற்றல் வாங்க முடியாது. ஏன்? உங்கள் கோரிக்கை மேற்படி பிராஞ்சில் லேடீஸ் டாய்லெட் இல்லை என்று காரணம் காட்டி நிராகரிக்கப்படும்!

● குழந்தைகளை வைத்து எடுக்கும் ஒரு படத்துக்கு டைட்டிலுக்கு உபயோகித்துக் கொள்ள என ஒரு பெண்மணி 'ரங்கோலி' போட இரண்டாயிரம் தருவதாய் ஒப்பந்தம் ஆயிற்றாம். ஓரிரு நாட்கள் அந்தப் பெண்மணி ரங்கோலி போட்டதும், 'இனி போட வேண்டாம்' என்று சொல்லி ஐநூறு ரூபாய் கொடுத்தார்களாம். ரங்கோலி போட்ட பெண்மணியோ, என் வேலைக்குச் செலவெல்லாம் சேர்த்து எண்ணூறாவது கொடுத்தால்தான் கட்டுபடி ஆகும் என்று கேட்க, பா. ரா. கண்டிப்பாய்த் தரமுடியாது எனக் கூறிவிட்டாராம். இப்போது அந்தப் பெண்மணி பா. ரா.வைப் பார்க்க நடையாய் நடந்தாலும் அவர் இவரைத் தவிர்த்து வருகிறாராம்.


-ஜூலி

ஒருநிருபர்: 'நடிகை குமாரி புதிதாக இங்கிலீஷ் கற்றுக்கொள்கிறார் போலிருக்கு.

மற்றவர்: எப்படி சொல்கிறாய்?

முதல் நிருபர்: நேற்று அவர் வீட்டு சமையல் காரரைக்காட்டி ''இவர்தான் எங்க வீட்டு குக்கர்'' என்றார்.

-ஜ. சந்தானம்



எப்படிப் பேசினாரோ!



பல வருடங்களாக என்னை ஒரு புதிர் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது. அது என்ன புதிர் என்பதைச் சற்று விளக்கமாகச் சொன்னால்தான் புரியும்.

''ஜிங்கிலோ நாட்டு அதிபர் ஜுலும்பா நாட்டுக்கு விஜயம் செய்தார். இரண்டு தேசத்து அதிபர்களும் பத்து நிமிடம் முக்கிய மான சர்வதேசப் பிரச்னைகளைப் பற்றியும் பரஸ்பர உறவுகள் பற்றியும் பேசியதாகத் தெரிகிறது.'' இப்படி வரும் செய்திகளை நீங்கள் பேப்பரில் படித்திருப்பீர்கள். இந்த மாதிரி செய்திகளைப் படிக்கும்போதுதான் எனக்குள் அந்தப் புதிர் தலை தூக்கும். பத்தே நிமிஷங்களில் உலகப் பிரச்னைகளைப் பற்றி எப்படிப் பேச முடியும்?

இந்தப் புதிரை சமீபத்தில் ஒரு பத்திரிகை நிருபர் விடுவித்தார். ஜுலும்பா அதிபரும் டோங்கோ அதிபரும் நடத்திய பத்து நிமிட பேச்சு வார்த்தையின் டேப் எப்படியோ அவருக்குக் கிடைத்ததாம். அதை எனக்குப் போட்டுக் காட்டினார்.

□ □ □

''வாருங்கள் ஜுலும்பா அதிபரே!''

''வணக்கம் டோங்கோ அதிபரே.''

''முதலில் போலந்து விஷயம்...''

''பற்றிப் பேசலாம் என்றால் பாக்லாந்து தானே இப்போது பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.''

''பிடித்துக் கொண்டிருக்கிறது என்றதும் திபேத்தில் சீன பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.''

''ஆமாம். அதே சமயம் காஷ்மீரில் பாகிஸ்தான் பிடித்துக் கொண்டிருப்பதையும் மறந்துவிட முடியாது.''

''பாகிஸ்தான் என்கிறீர்கள். ஆப்கனிஸ்தான் பற்றித்தான் சலசலப்பு அதிகமாக இருக்கிறது.''

''நியூட்ரான் குண்டை விடவா அதிகம் சலசலப்பு?''

''இந்தச் சூழ்நிலையில் ஈரான் ஈராக் போர் பின்னணியில் போய்விட்டது.''

''யுத்தமே இப்போது ஒரு மேனியாவாகப் போய்விட்டது.''

''மேனியா என்றதும் சகட்டுமேனியாக கோமேனி கட்டுத் தள்ளுகிறாரே...''

''அந்த வரைக்கும் பங்களா தேஷில் ராணுவப் புரட்சியின்போது யாரும் சுடப் படவில்லை.''

''கம்பூசியாவில்....''

''மிகோ—கார்சியாவில்....''

''எல்லாம் பிரச்னைகள்தான். எல்சல்வ டோர் விஷயமும் சரி....''

''....ஐரிஷ் விடுதலை வீரர்களின் போராட்டமும் சரி....''

''தீர்கிற வழியாகக் காணோம்.''

''ஆமாம். தீர்கிற வழியாகக் காணோம்.''

''ஆக... நம் இருவர் கருத்தும் ஒன்று தான்.''

''வணக்கம். நீங்கள் அவசியம் எங்கள் நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டும். இப்போது பேசிய மாதிரி விரிவாக உலக விஷயங்களைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தலாம். இதற்காக முழுதாக ஐந்து நிமிஷம் ஒதுக்க வேண்டும்.''

''ஐந்து நிமிஷத்திலே அசுவமேத யாகமே செய்துவிடலாம்... நிச்சயம் வருகிறேன்.''

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431643)
Assistant Editor: P.S. Mani   Layout Artist: Nambi   Editor: K. Rajendran



வீரவேல், வெற்றிவேல்!
பெரியவாள் அருள் வாக்கு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

